www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

JUDE (K)

பக்கம் 20

ரூபா 11/00


மார்ச் 29–ஏப்.04,1998

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 250

## திசைமாறும் போர்முகம்

## அபாய அறிகுறி





## உலகம் பிறந்தது எனக்காக

## நோவாவின் பேழை



## இடி அமீன் உண்மைத் தொடர்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## சவப்பெட்டிக் கடைக்காரர் போல...

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

'தமிழ்க் கட்சிகள்
அரசுக்கு
ஆதரவு வழங்குவது ஏன்?'
நாடெங்கும் உள்ள
தமிழ் பேசும் மக்கள் மட்டுமல்ல,
நியாயம் உணர்ந்தோரும்
கேட்கும் கேள்வி அதுதான்!
"சமாதானத்தை
கொண்டு வரப் போகிறார்கள்
அதுதான் ஆதரிக்கிறோம்"
என்றன தமிழ்க் கட்சிகள்!
"புலிகளுடன் அரசு
போரைத் தொடர்ந்தால்
ஆட்சியைக் கவிழ்க்கவும்
சிறிதும் தயங்கோம்!" என்றார்
ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி!
புலிகளுடன் மட்டுமல்ல,
பொது மக்களுடனும் போர்!
என்ற கட்டம் வந்தாயிற்று!
பரராஜசிங்கம் இன்னமும்
ஃபக்ஸ் அனுப்பி வருகிறார்!
"துணிச்சலுடன் அம்மையார்
தீர்வுயோசனை முன்வைத்தார்!
அதற்காக ஆதரவு"
என்றனர் பின்னர்!
இன்று
கழுதை தேய்ந்து
கட்டெறும்பான நிலையில்
உள்ளது தீர்வுப் பொதி!
நியாயமாகப் பார்த்தால்
தீர்வுப் பொதியை
பேரினவாதிகள் போற்ற வேண்டும்!
தமிழ்க் கட்சிகளையும்
ஏமாற்றி,
உலகையும் ஏமாற்றி,
தமிழ் பேசும் மக்களது தாயகத்தை
அவசரமாகக் கூறுபோடும்
அருமையான திட்டமிது!
அரசியல் காழ்ப்புணர்வும்
அம்மையார் மேல் உள்ள
அதிருப்தியும் காரணமாக
பேரினவாதிகள் பொதியை
தூற்றுகிறார்கள்.
அதுதான் விஷயம்!
ஆகவே, இன்று
பொதியை ஆதரிப்பது
தமிழ் பேசும் மக்களின்
அடிப்படை அபிலாசைகளுக்கு
எதிரான நிலைப்பாடேயாகும்!
"அன்றாடப் பிரச்சனைகளை
தீர்க்க வேண்டும்;
அதற்காக ஒத்துழைக்கிறோம்!"
என்று கூறக்கூடும்!
அன்றாடப் பிரச்சனை
என்று கூறுவது எதனை?
அவசரகாலச் சட்டத்தின்
இரும்புக்கரங்களுக்குள்
அன்றாடம் தமிழ் மக்கள்
அவதிப்பட்டு வருகின்றனர்!
இந்தத் தமிழ்க் கட்சிகளால்
என்ன செய்ய முடிந்தது?
தலைநகரில் விடுதிகளில்
இருந்து தமிழர் விரட்டப்பட்ட
அநீதியை சுட்டிக்காட்டி,
"இனிமேல் நடைபெறாது!"
என்று உத்தரவாதம்
பெற முடிந்ததா?
நள்ளிரவில்
தமிழர் வீடுகளுக்குள் புகுந்து
பெண்களையும் ஆண்களையும்
புகைப்படம் எடுத்த
"மனித உரிமை மீறல்
இனித் தொடராது!" என்று
உத்தரவாதம் பெற முடிந்ததா?
வவுனியாவில் தடை முகாமில்
ஆண்டுக்கணக்காக
அடைபட்டுக் கிடக்கும்
அப்பாவித் தமிழ் மக்களை
விடுவிக்கத்தான் முடிந்ததா?
வட பகுதிப் பயணிகளுக்கான
பாஸ் கெடுபிடிகளை
சற்றுக்கூட
தளரச் செய்ய முடிந்ததா?
கிழக்கு மக்களை
கொடுமைப்படுத்திய
திடீர் வாகனத் தடை
விவகாரத்திலகூட
நிரந்தர விலக்கல் என்ற
உத்தரவாதத்தைப் பெற்றனரா?
இல்லை! இல்லை! இல்லை!
இனியும் ஏன் ஆதரவு?!
இக் கட்டத்திலாவது
தமிழ்க் கட்சிகள்
தங்கள் தவறான போக்கை
திருத்திக்கொள்ள வேண்டும்!
மக்களின் அன்றாட அவலங்களை
அறிக்கை அரசியலுக்கான
மூலதனமாகப் பயன்படுத்தும்
வக்கிரத்தை கைவிட வேண்டும்!
இப்படியே போனால்
சவப்பெட்டிக் கடைக்காரர்களுக்கும்
தமிழ்க் கட்சிகளுக்கும்
வித்தியாசம் இருக்காது!
மரணம் இல்லையானால்,
சவப்பெட்டி வியாபாரம்
சுறுசுறுப்பாக இருக்காது!
மக்களின் அவலம்
இல்லையானால்,
தமிழ் அரசியல் கட்சிகளின்
அறிக்கை விளையாட்டுக்களுக்கு
தக்க வாய்ப்பிருக்காது!
என்றாகிவிடும்!
மக்கள்
துன்பப்பட வேண்டும் என்று
காலை எழுந்ததும்
பிரார்த்திப்பவர்களாக
தமிழ்க் கட்சித் தலைமைகள்
மாறிவிட்டனவோ
என்று ஐயம் ஏற்படுகிறது!
இந்த ஐயத்தைப் போக்கும்
பொறுப்பு
தமிழ்க் கட்சிகளின்
கையில்தானு உள்ளது!
மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## பக்தி

வேறு சிந்தையற்ற பற்று இறைவனிடம் ஏற்படுமாயின் அதுவே பக்தி எனப்படும். பகவான் மீது எதையும் எதிர்பார்க்காத பக்தியை உடையவனே பக்தன் எனும் சொல்லுக்கு பொருத்தமானவன்.

பக்தியோகம் கலியுகத்திற்கென விதிக்கப்பட்டுள்ளது; மற்ற நெறிகளைப் பின்பற்றி கடவுளை அடைவதைவிட எளிதானது.

பக்தியோகமென்றால் என்ன? இறைவனுடைய திருநாமத்தை ஓதியும் அவர் புகழ் பாடியும், அவர் நினைவில் மனத்தை நிறுத்தி வைத்தலுமே பக்தியோகமாகும்.

இந்திரிய விடயங்களில் பற்று குறைவதற்கு ஏற்றவகையில் பக்தி அதிகரிக்கும்.

உலகப் பற்று கடுகளவு இருந்தாலும் ஒருவன் கடவுளைக் காணமுடியாது. நெருப்புக் குச்சி ஈரமாக இருந்தால், ஆயிரம் குச்சிகளை உரைத்தாலும் தீப்பற்றாது. உலகப் பற்றில் தோய்ந்து கிடக்கும் மனம் ஒரு ஈரநெருப்புக் குச்சிக்குச் சமனாகும்.

எனவே, உலகப்பற்றைக் குறைத்து கடவுள் மீது பற்றை ஏற்படுத்துவோமாக.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் ஞானமுரசிலிருந்து-

தொகுத்தவர்: எஸ்.சிறி, மட்டக்களப்பு.



## கோள் சொல்வது கேடு பயக்கும்

ஒருவரைப்பற்றி இன்னொருவரிடம் இல்லாத ஒன்றைக் கூறி இருவருக்கு மத்தியில் சண்டை ஏற்படுத்துவதை சிலர் தொழிலாகவே கொண்டுள்ளனர். இதனால் எத்தனை குடும்பங்கள் பிரிந்திருக்கின்றன? எத்தனையோ பேர் கொலைகூடச் செய்யப்பட்டுள்ளனர். இப்படி பெரும் பாதிப்பு இவ்வுலகில் ஏற்படுவதை ஏனோ சம்பந்தப்பட்டவர்கள் கவனிப்பதில்லை. இப்படி கோள் சொல்லித் திரிபவர்கள் சுவனம் போக முடியாது கப்ரில் வேதனையுண்டு, என்று இஸ்லாம் கடுமையாக எச்சரிக்கை செய்கிறது.

"மேலும் இழிவானவனான அதிகம் சத்தியம் செய்யும் ஒவ்வொருவனுக்கும் நீர் வழிப்படாதீர்! அத்தகையவன் குறை கூறித் திரிபவன். கோள் சொல்லிக் கொண்டு நடப்பவன்." (குர்ஆன்)

"குறை சொல்லி புறம் பேசித் திரியும் ஒவ்வொருவனுக்கும் கேடுதான்.. கோள் சொல்பவன் சுவனத்தில் நுழையமாட்டான்."

(குர்ஆன்)

எனவே கப்ருடைய கடும் வேதனையை விட்டும் நரக நெருப்பை விட்டும் நம்மையும் நமது சகோதரர்களையும் பாதுகாக்கவும் இவ்வுலகில் சண்டை சச்சரவுகளில் இருந்து விடுபடவும் கோள் சொல்வதை முழுமையாக தவிர்ப்போமாக

தொகுப்பு:- எம்.எம்.முகம்மது ஸாகிர், சாய்ந்தமருது-10.

## கவிதைப் போட்டி இல.247

### பரிசுக்குரிய கவிதை

### தீ(ர்)வுப் பொதி

முயன்று பார்த்தும்..
முன்னேற முடியவில்லை!
சுமைக் குறைப்புத்தான்
சுலபமான புது வழியா?

க.நாகராசா- நுணாவில், சாவகச்சேரி.

இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:



### பழக்கம்

சிறுதேர் கட்டி,
சிறுகையால் வடம் பிடித்து,
சிரித்து மகிழும் பருவமதில்;
பழு ஏந்தும் பயணமா?
பழக்கமான இடம்
பெயர்வா?

திருமதி க.கதிரவேலு-வவுனியா.

### மீண்டும் அகதி

வழியும் திறந்தாச்சு, வண்டியும் வந்தாச்சு.
வாழ்வும் மலர்ந்தாச்சு, வாக்களிப்பும் நடந்தாச்சு!
வவுனியாவில் இருந்து வசாவிளான் போனோமே
"வழி எங்கும் கண்ணிவெடி, வரம்பாலே வாருங்கள்!"
வாய் நிறைய சிரிப்போடு வரவேற்றார் படைவீரர்!
வந்தோமே எம் பூமி! கண்டோமே அவலத்தை:
வசாவிளானை பலாலி விழுங்கிவிட்டது!

புனிதா- திருகோணமலை.

### பாழானது!

வாழ்வே கேள்வியான பின் இந்த
வண்டில் துணை வருமோ?
பாழானது படிப்பு மட்டுமல்ல- எம்
பசுமையான எதிர்காலமும்தான்!

ட.ஜோர்ஜ்-லபுகலை.

### சவாரி.

அதோ இழுக்கின்றான்-
மலையகத்துத் தொழிலாளி!
தொண்டை மான்களுக்குச்
சொகுசான சவாரி யல்லோ?

சீ.தங்கவடிவேல்-மட்டக்களப்பு.

### எதிர்பார்ப்பு

ஆள்பவனுக்கு
சுதந்திர பொற்காலம்!
இவர்களுக்கு
அது வருவதெக்காலம்?

ம.திருவரசுராசா-வவுனியா.

### தலைவர்கள்

வழகாட்டுவார்களென்று
எதிர்பார்த்தோம்!
இழுக்கிறார்கள்-
பின்நோக்கி!!

எஸ்.பிரபா-பதுளை.

### நிதர்சனம்

நிகழ்காலப் போரின்
நிதர்சன வாழ்க்கை-இது!
எதிர்காலத் திற்கும்
இதுவொரு எடுத்துக்காட்டு...!


சிவலிங்கம் சஞ்சீவன்-குருக்கள்மடம்.

### கவனம்

எவடம் எவடம்
புங்கடி புளியடி!
கவனம் கவனம்
மிதிவெடி கவனம்!

ஆர்.சுகிர்தராஜன்-
கல்முனை-02.

## கவிதைப் போட்டி இல.250



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 04.04.1998 படப்பிடிப்பு: கோட்டாரமுல்லை ஃபாருக்

முகவரி: கவிதைப் போட்டி இல.250, தினமுரசு வாரமலர், த.பெ. இல--1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

## ஒப்பற்ற வாய்ப்பு

அன்புள்ள முரசுக்கு:

'விதியே, விதியே! தமிழ்ச் சாதியை என்ன செய்ய நினைத்தாயோ?' என்று ஏங்காதார் யாருளர்? மக்களின் பிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டு, மக்களின் துன்பங்களை சர்வசாதாரணமானவையாகவும், தங்கள் பெயர்களில் அறிக்கைகள் விடுவதற்கு கிடைத்த ஒப்பற்ற வாய்ப்பாகவும் கருதுகின்றனர் தமிழ்க் கட்சியினர். இந்த வகையான மனப்போக்கு மாறாதவரை, இவர்கள் நல்வழி நடவார்கள்.

இ. சௌந்தரம், மட்டக்களப்பு.

## கட்சி ஏன்?

முரசே! எங்கள் மனக் குமுறல்கள் அரசுக்கு எட்டுவதாகத் தெரியவில்லை. காதுகளைப் பொத்திக் கொண்டுள்ளது'. அவசரகாலச் சட்டம் கொடுக்கும் அதிகாரங்களை கையில் எடுத்து தமிழ் மக்களை பந்தாடுகிறார்கள். அவசரகாலச் சட்டத்தின் ஜனநாயக மறுப்பு தன்மையை சர்வதேச உலகின் கவனத்திற்கு எடுத்துச் செல்ல தமிழ்க் கட்சிகளாலும் முடியவில்லையே! பின்னர் ஏன் இவர்கள் கட்சி நடத்துகிறார்கள்?

கு. தர்மரத்தினம், கொழும்பு-06.

## அவசரகாலம் யாருக்கு?

அவசரகாலச் சட்டம் என்பது தமிழ் மக்களை அவசரமாக அழுத்தும் சட்டம் என்றே அர்த்தமாகியுள்ளது. பொலிஸாருக்கும், படையினருக்கும் கட்டில்லாத அதிகாரங்களை வழங்கும் இச்சட்டம், சில சமயங்களில் எதிர்க்கட்சியை ஒடுக்கப் பயன்பட்டாலும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அப்பாவி தமிழர்களை இரவு உடையுடன் படம் எடுக்கவும், விடுதிகளைவிட்டு நெருப்பு வெய்யிலில் விரட்டவும், கண்டபடி கைதுசெய்யவுமே உதவிவருகிறது. இதனை நீக்கக்கோரி தமிழ்க் கட்சியினரும், ஜனநாயக ஆர்வலர்களும் குரல் கொடுத்தால், அழுத்தங்களாவது குறையும் அல்லவா?

வி. புவனேந்திரன், கல்லாறு.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர், த.பெ.இல:- 1772, கொழும்பு.

## பறிமுதல் செய்க!

அன்பு முரசே!

மட்டக்களப்பிலும், அம்பாறையிலும் வாகனத்தடை விதிக்கப்பட்டும் கூட தமிழ் எம்.பிகள் அடக்கிவாசித்த அழகைக் கண்டாயோ? நாம் கண்டு புல்லரித்து நிற்கிறோம். தமிழ் எம்.பிகளிடம் இருந்து ஃபக்ஸ் இயந்திரம், அறிக்கை எழுதும் காகிதங்கள், தந்தி அடிக்கும் படிவங்கள் ஆகியவற்றை உடனடியாக பறிமுதல் செய்யவேண்டும். அப்போதாவது வேறு வழியில்லாமல் மக்களோடு நின்று போராட முன்வரக்கூடும்.

எஸ். லீனஸ், மன்னார்.

## எதிர்பார்த்தோம் வந்தன

'சந்திக்கு வராத சங்கதியில்' நக்கீரன் தமிழ்க் கட்சிகளது அரசியல் விளையாட்டுக்களை கோடிட்டுக் காட்டினார். தாங்கள் விடும் ஜெட்வேக அறிக்கைகள், வீரம் கொப்பளிக்கும் உரைகள் என்பவற்றை மக்கள் நம்புவர் என்று தமிழ்க் கட்சிகள் நினைப்பதுகூட அவர்களது அறியாமைதான். வாகனத்தடை செய்தி வந்ததும், மறுநாள் தமிழ்க் கட்சிகளது அறிக்கைகளும், அம்மையாருக்கு மனுப்போட்ட செய்திகளும் வரும் என்று நாங்கள் பேசிக்கொண்டோம். அப்படித்தான் நடந்தது. பரராஜசிங்கத்தார் முழ்ங்கியிருந்தார். பாவம், அவர்! பயனை அமைச்சர் அஷ்ரப் அறுவடை செய்து கொண்டு போய்விட்டாரே!

என். உதுமான், காத்தான்குடி.

## நம் மனதில்

பூலான் தொடரின் விறுவிறுப்பு குன்றாத நடை நம்மை கட்டிப்போட்டு வைத்திருந்தது. முடிவடையும் கட்டத்தை எட்டுகிறது என்பதை அறிந்தபோது மனதுக்கு கஷ்டமாக இருந்தது. பூலான் தேவியை அவரது குணாம்சங்களுடன்- அவர் பக்கம் உள்ள நியாயங்களுடன் ரசிகன் எங்கள் மனதில் இருத்தி விட்டார்.

பி. சாவித்திரி, வவுனியா.

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

என் இனிய முரசே!

நீ சுமந்து வரும் என் இனிய கவியரசு கண்ணதாசனின் நில்-கவனி-முன்னேறு என்ற ஆக்கம் என்னை பெரிதும் கவர்ந்துள்ளது. இவ்வாறான ஆக்கங்களை தொடர்ந்து முரசில் நீ சுமந்து வர எனது அவா! வாரம் ஒரு நாடு பிரமாதம்.

வி. நவனீதா, டிக்கோயா.

வாரம் தோறும் நீ தாங்கி வரும் அனைத்து அம்சங்களும் பிரமாதம்! கண்ணீரில் கரைந்த இரவுகள், கண்ணதாசனின் ஆக்கங்கள், எக்ஸ்ரே ரிப்போர்ட் ஆகியனவும் அசத்துகின்றன. உன் சேவை தொடர என் வாழ்த்துக்கள்.

ஆர். ஜெயராஜ், பொகவந்தலாவ.



### முரசுக்கு மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்படமுடிந்தவர்கள்:

* எஸ் தயாளன், மட்டக்களப்பு.
* த. மதிவதனி, முதலைக்குடா.
* பி. ஜெயா, கொழும்பு-15.
* வி. வாணி, மட்டக்களப்பு.
* என். ரஞ்சிதா.
* பி. சிறிதரன், கினிகத்தேனை.
* இந்து நாகலிங்கம், வட்டக்கச்சி.
* எஸ். சுரேஸ், தெகிவளை.
* பி. தயாபரன், செட்டிப்பாளையம்.
* கி. வினோத்குமார், அவுஸ்திரேலியா.
* எம். சந்திரன், சுவீடன்.
* ஆர். தனேஷ்வரன், ஜெர்மன்.
* கந்தையா கங்கேஸ்வரி, மட்டக்களப்பு.
* முருகேஸ் கலைவாணி, காவத்த.
* வி.பி. ஜயந்தன், தெகிவளை.
* சி. கோபி ரமணன், கொழும்பு-13.
* ரஜனி, உக்குவளை.
* மு. சபேசன், திருக்கோணமலை.
* பா. கௌரி, வவுனியா.
* கந்தப்போடி புஸ்பலதா, ஆறுமுகத்தான் குடியிருப்பு.
* எம்.ஐ.எம். நகீப், கல்லலை.
* மா. ரவிக்குமார், கனடா.
* எஸ். செல்வின், கனடா.
* கே. உதயமூர்த்தி, இலண்டன்.
* ஆ. ஜெகதீஸ்வரன், புசல்லாவ.
* பி. சசிதரன், இங்கிரிய.
* க. பிரேமானந்தன், ஜெர்மன்.
* கலைவாணி மகேஸ்வரன், மட்டக்களப்பு.
* ஏ.எல். நஸ்ருதீன், சாய்ந்தமருது-02.
* பி. நடராஜா, நாவலப்பிட்டி.
* க. யோகநாதன், அமெரிக்கா.
* எட்வேட் நிஷாந்தன், கல்முனை.
* ஆர். அசோக்குமார், டிக்கோயா.
* செ. ராஜயோகம், அப்புத்தளை.
* எ. நுவைஷா, அனுராதபுரம்.
* எஸ். சகாதேவன், கண்டி.



படிப்பகம்

www.padippakam.com

# கிழக்கில் பதிலடிக்கு புலிகள் தயார்!

## யாழில் தாக்குதல் அணிகள்

கிழக்கில் அம்பாறை மாவட்டம் சார்ந்த பகுதிகளில் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை ஒன்றை படையினர் மேற்கொண்டனர். விசேஷ அதிரடிப் படையினரே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

விசேஷ அதிரடிப் படையினரின் முன்னேற்றத்தை தடுக்க புலிகள் அதிக நாட்டம் காட்டவில்லை. படையினரால் நிலைகொண்டு நிற்கமுடியாது. முன்னேறி வந்துவிட்டு திரும்பிச் சென்றுவிடுவர் என்று கருதியே புலிகள் விலகிச் சென்றனர்.

விசேஷ அதிரடிப் படையினருக்கு உதவியாக கிபீர் விமானங்கள் தாக்குதல் நடத்தின. புலிகளின் நிலைகள்மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறப்பட்டது. ஆனால் புலிகளின் முகாம்கள் எதுவும் குண்டு வீச்சால் தகர்க்கப்பட்டதாக தகவல்கள் இல்லை.

ஆனால் குறிப்பிட்ட இராணுவ நடவடிக்கையால் ஆயிரக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்தனர். குண்டு வீச்சில் நான்கு பாடசாலை மாணவர்கள் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

படையினரின் இராணுவ நடவடிக்கைக்கு பதிலடியாக கிழக்கில் பரவலான தாக்குதல்களை நடத்த புலிகள் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, மாங்குளத்தில் விமானத் தாக்குதல் ஒன்றில் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான கருணா பலியாகி இருக்கலாம் அல்லது காயமடைந்திருக்கலாம் என்று பாதுகாப்பு தரப்பு கூறியிருந்தது. ஆனால், கருணா வன்னியில் நடமாடித்திரிவதை பலரும் கண்டுள்ளனர்.

புலிகளின் சர்வதேச பிரசாரத்திற்கான 'ஒளிவீச்சு' வீடியோ சஞ்சிகைக்கும் கடந்த 23.03.98 அன்று வன்னியில் கருணா பேட்டியளித்துள்ளார்.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட புலிகளின் தளபதியாக இருந்த கருணா தற்போது புலிகளின் வன்னித் தள பாதுகாப்புக்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்.

**யாழில்**

யாழ் குடாநாட்டில் தாக்குதல்களை மேலும் தீவிரமாக்கும் திட்டத்தோடு புலிகளின் அணிகள் ஊடுருவியுள்ளதாக அறியப்படுகிறது.

சமீபத்தில் வரணிப்பகுதியில் உள்ள படையினரின் மினி முகாம் ஒன்றை புலிகள் தாக்கியிருந்தனர்.

படையினர் எதிர்பாராத விதமான வழிமுறைகளில் தாக்குதல்களை புலிகள் தொடரப்போவதற்கான அறிகுறியாகவே அத்தாக்குதல்கள் கருதப்படுகிறது.

டிராக்டர் ஒன்றில் பொருட்களை ஏற்றிச் செல்வது போன்ற பாவனையில் சோதனை அரணை நெருங்கிய புலிகள், பொருட்களுக்குள் மறைத்து வைத்திருந்த துப்பாக்கிகளை திடீரென்று எடுத்து சுடத்தொடங்கினார்கள்.

படையினரும் பதில் தாக்குதல் நடத்தினர். ஆயினும் புலிகளின் கையில் மினிமுகாம் வீழ்ந்தது. முகாமில் இருந்த படையினர் பின்வாங்கிச் சென்றனர். பிற்பகல் 2.45 மணியளவில் இத்தாக்குதல் இடம்பெற்றது.

இம் மோதலில் தமது தரப்பில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த மேஜர் கலையரசன் (பயில்வான் மாஸ்டர்) என்றழைக்கப்படும் நாகரட்னம் மதியழகன், கப்டன் தேவன் (தேவா) ஆகிய இருவரும், படையினர் தரப்பில் ஆறுபேரும் பலியானதாகப் புலிகள் தெரிவித்தனர். தமது தரப்பில் இருவர் பலியானதாக படையினர் தெரிவித்தனர்.

எல்.எம்.ஜி-01, ஆர்.பி.ஜி-01, ரைபிள்கள் நான்கு, கைக்குண்டுகள் 04 ஆகியன தம்மால் இழக்கப்பட்டதாக படையினர் ஒப்புக்கொண்டுள்ளனர்.

தாக்குதல் நடத்தியது மட்டுமல்லாமல் ஆயுதங்களையும், கைப்பற்றிக் கொண்டு புலிகள் சென்றுள்ளனர்.

புலிகளின் தாக்குதல் வேகம் படிப்படியாக யாழ் குடாநாட்டில் அதிகரித்து வருவதையே மேற்படி தாக்குதல் கோடிட்டுக் காட்டியுள்ளது.

படிப்படியாக ஆரம்பித்து பாரிய அதிரடித் தாக்குதல்களை நடத்துவதே புலிகளின் பாணியாகும்.

யாழ் குடாநாட்டின் பல பகுதிகளில் அடிக்கடி சுற்றிவளைப்பு தேடுதல்களை படையினர் நடாத்தி வருகின்றனர்.

## கிராமங்களுக்கு ஆபத்து!

கிண்ணியா, உப்பாறு பகுதியில் இருந்து தமிழ்க் குடும்பங்களை வெளியேற்றியமைக்கு திட்டமிட்ட ஆக்கிரமிப்பு நோக்கமே காரணம் என்று கூறப்படுகிறது.

திருமலை மாவட்ட கடலோரப் பகுதிக் கிராமங்களை சிங்களமயமாக்கி, கடற் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் திட்டமும் இருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

உப்பாற்றுப் பகுதியில் கடற்புலிகள் வந்து தங்கிச் சென்றதாக குற்றம் சாட்டுவதன் மூலம், வெளியேற்றல் நடவடிக்கையை நியாயப்படுத்த முயற்சிப்பதாகவும் கூறப்படுகிறது.

திருமலையில் தமிழ் மக்களின் விகிதாசாரத்தை குறைக்கும் நீண்ட கால திட்டத்தின் ஒருபகுதியாக பாதுகாப்பு என்ற போர்வையில் தமிழர்களை வெளியேற்றும் நடவடிக்கைகள் தொடரப் போகிறதா என்று திருமலை மக்கள் அங்கலாய்க்கின்றனர். ■

## மோட்டார் சைக்கிள் குண்டு! செய்தியில் சந்தேகம்

கிழக்கில் இருந்து மோட்டார் சைக்கிள் ஒன்று வெடிமருந்து நிரப்பப்பட்ட நிலையில் கொழும்புக்கு கொண்டுவரப்பட இருந்ததாகவும், அதனை கைப்பற்றியதாகவும் இலங்கை அரச வானொலியின் சிங்கள செய்தி அறிக்கையில் கூறப்பட்டது. தமிழ் செய்தி அறிக்கையில் கூறப்படவில்லை.

கிழக்கு மாகாண வாகனத் தடை முயற்சிகளை நியாயப்படுத்தவே இவ்வாறான செய்திகள் கூறப்படுகிறதா என்று பலத்த சந்தேகம் தோன்றியுள்ளது.

கிழக்கில் இருந்து, அதுவும் கடும் சோதனைகள் தீவிரமாகியுள்ள இக் கட்டத்தில் மோட்டார் சைக்கிளில் குண்டு அனுப்ப புலிகள் முனைந்திருப் பார்கள் என்பதை நம்ம முடியாதுள்ளது. ■

# தமிழர்களை வெளியேற்றத் திட்டம்?

## புலிகளுடன் இணைத்து புகார்கள்

கொழும்பில் உள்ள முக்கிய அரசாங்க நிறுவனங்களிலும் மற்றும் பொலிஸ், பாதுகாப்புத் துறை சம்பந்தப்பட்ட துறைகளிலும் பணியாற்றும் தமிழர்களது நிலை பெரும் நெருக்கடிக்கு உள்ளாகி வருகிறது.

தனிப்பட்ட பகை, உத்தியோகப் போட்டி, பதவியுயர்வுப் பிரச்சனைகள் போன்றவற்றாலும் தமிழ் அதிகாரிகள், மற்றும் ஊழியர்களை புலிகள் என்று மாட்டிவிடும் ஆட்களும் இருக்கிறார்கள்.

அதேசமயம், புலிகளுக்கு தகவல் கொடுத்ததாக தமிழ் அதிகாரிகள், ஊழியர்களை சம்பந்தப்படுத்தி பாதுகாப்புத் தரப்பு வெளியிடும் செய்திகளும் சந்தேகப் பார்வைகளை உருவாக்கி வருகின்றன.

பூரண விசாரணை முடிவடைய முன்னரே, அவசரப்பட்டு கொடுக்கப்படும் அவ்வாறான செய்திகள், பெரும்பான்மை இன ஊழியர்களிடம் தங்கள் சக தமிழ் ஊழியர்கள் தொடர்பான சந்தேகங்களை தோற்றுவிக்க தூண்டுதலாக அமைகின்றன.

**முரணான செய்தி**

சமீபத்தில் சிங்களப் பத்திரிகை ஒன்று வெளியிட்ட செய்தியில், கொழும்புத் துறைமுகத்தில் தமிழ் சுங்கப் பரிசோதகர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

துறைமுக வரைபடமும் அவரிடம் இருந்ததாக அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

வரைபடம் ஒன்றை தயாரிக்க வேண்டுமானால் துறைமுகத்திற்குள் இருந்தபடிதான் வரையவேண்டும் என்பதில்லை. வீட்டில் போய் இருந்தும் வரைந்து கொள்ளலாம். அந்த பரிசோதகர் 20 வருடங்களாக சுங்கத் திணைக்களத்தில் பணிபுரிபவராம். அவ்வாறு அனுபவம் உள்ள ஒருவர் தன் சட்டைப் பையில் வரைபடத்துடன் திரிந்தார் என்பது நம்பமுடியாதுள்ளது.

தவிர, அவர் தனது தகவல்களை புலிகளின் ஓரணியான சாள்ஸ் அன்ரனிப் படைப்பிரிவுக்கு வழங்கினார் என்றும் செய்தி போட்டுள்ளனர். கொழும்புத் துறைமுகத்தில் தாக்குதல் நடத்துவதற்கும் சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவுக்கும் என்ன தொடர்பு? இவ்வாறான தகவல்களை புலிகளின் உளவுப் பிரிவே திரட்டுவது வழக்கமாகும்.

**சந்தேகம்**

இவ்வாறான கற்பனைச் செய்திகள் தமிழ் அதிகாரிகள், தமிழ் ஊழியர்கள் ஆகியோரை அரச நிறுவனங்களில் இருந்து வெளியேற்றும் நோக்கத்துடன் திட்டமிட்டுப் பரப்பப்படுகிறதா? என்றும் சந்தேகம் எழுந்துள்ளது.

"புலிகளுக்காக பிரசாரம் செய்வது அவசரகால சட்ட விதிகளின்படி தடை செய்யப்பட்டுள்ளமை தெரிந்ததே. அப்பாவித் தமிழ் மக்களை புலிகள் என்று பிரசாரம் செய்வதையும் தடுக்கும் விதிகளையும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கொண்டுவந்தால் என்ன?" என்று கேள்வி எழுப்புகின்றனர் பாதிக்கப்படும் ஊழியர்கள். ■

# கப்பல் சேவை இடை நிறுத்தம்

## தமிழ்க் கட்சிகள் மௌனம்

திருமலைக்கும், காங்கேசன் துறைக்கும் இடையிலான கப்பல் சேவையை இடை நிறுத்துவதாக பாதுகாப்பு அமைச்சு முடிவு செய்துள்ளது.

விமானம் மூலம் பயணம் செய்வதற்குரிய பண வசதி சகலரிடமும் கிடையாது. கப்பல் மூலம் குறைந்த கட்டணத்தில் பயணம் செய்வதாயின் பலரும் பயனடையக்கூடியதாக இருக்கும்.

யாழ் குடாநாட்டை கைப்பற்றியதுடன் அங்கு சுமுகமான வாழ்க்கையை ஏற்படுத்தி தருவதாக மக்களையும் அழைத்தது அரசாங்கம்.

எனவே, யாழ் குடாநாட்டு மக்களுக்கு போக்குவரத்து வசதிகளை இலகுபடுத்தி கொடுக்க வேண்டியது அரசினது கடமையாகும். பாதுகாப்புக் காரணங்களை கூறி கப்பல் போக்குவரத்தை இடைநிறுத்துவது சரியல்ல என்று யாழ் மக்கள் பலர் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழ்க் கட்சிகளும் கையாலாகாத நிலையில் உள்ளதையும் மக்கள் அதிருப்தியோடு நோக்குகின்றனர்.

அரசின் விருப்பப்படி உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டதுடன், அன்றாட அவலங்களை தீர்க்கப்போவதாகவும் தமிழ்க் கட்சிகள் அறிவித்தன.

தேர்தல் முடிந்து இரண்டு மாதங்களாகின்றன. அன்றாட பிரச்சனைகள் அவலங்கள் மேலும் அதிகமாகின்றன. ஏற்கனவே உள்ள வசதிகளும் தடைப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தமிழ்க் கட்சிகள் நியாயம் பெற்றுத்தர முடியாத நிலையில் உள்ளன" என்று மக்கள் கூறுகின்றனர். ■

# கட்டிவைத்து நையப்புடைப்பு!

## பாஸ் பெறச் சென்றோருக்கு கிடைத்த பரிசு!

(மன்னார் நிருபர்)

மன்னார்த்தீவிலுள்ள தாராபுரம் முஸ்லிம் கிராமத்தில் இருந்து எருக்கலம்பிட்டி உபபொலிஸ் நிலையத்திற்கு வதிவிட அனுமதிப்பத்திரம் பெறச் சென்ற இரு முஸ்லிம் சிறுவர்கள் அங்கு கடமையில் இருந்த பொலிஸ் அதிகாரியினால் மிகவும் கடுமையான முறையில் தாக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் கடந்த 19.03.98 அன்று நடைபெற்றுள்ளது.

தாராபுரத்தைச் சேர்ந்த எஸ்.எம். ஹஸ்மின் (வயது-15) ஐ.எம்.முஹம்மது (வயது-18) ஆகிய இருவருமே இவ்வாறு தாக்கப்பட்டவர்களாவர்.

இவ்விருவரும் மேற்படி நிலையத்திற்கு பாஸ் பெறச்சென்ற சமயம் தனக்கு மரத்தில் ஏறி இளநீர் பறித்துத் தருமாறு இவ்விருவரையும் பொலிஸ் அதிகாரி கேட்டுள்ளார். இவர்கள் முடியாது என மறுக்கவே, மரத்தில் கயிறு ஒன்றினால் கட்டிவைத்து நையப்புடைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் கெட்ட வார்த்தைகளையும் வாயில் வந்தபடி பேசியுள்ளார்; அந்த பொலிஸ் அதிகாரி.

இது தொடர்பாக மன்னார் தலைமை பொலிஸ் அதிகாரியிடம் முறையிடப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரி உடனடியாக இடமாற்றப்படவுள்ளதாகத் தெரிகிறது.

மேற்படி விடயம் தொடர்பாக மன்னார் மாவட்ட முஸ்லிம் மீள் குடியேற்ற அமைப்பு, அவசர கடிதம் ஒன்றினை ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவுக்கு 'ஃபக்ஸ்' மூலம் அனுப்பி வைத்துள்ளது.

சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரியின் அடாவடித்தனச் செயல் அரசினால் மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முஸ்லிம்களின் மீள்குடியேற்றத் திட்டத்தினை வெகுவாகப் பாதிக்கும் என அக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## பூபதி நினைவு நாள்

இந்தியப் படையினருக்கு எதிராக சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து மரணமான அன்னை பூபதியின் 10ம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகியுள்ளன.

19.04.88 அன்று அன்னை பூபதி மரணமானார். ஒரு மாதகாலமாக அவர் உண்ணாவிரதம் அனுஷ்டித்தார். 19.03.88 அன்று அவரது உண்ணாவிரதம் ஆரம்பமானது.

வடக்கு-கிழக்கில் புலிகள் இயக்க கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் அன்னை பூபதி நினைவு நாள் 19.03.98 முதல் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. 19.04.98 வரை ஒரு மாத காலத்திற்கு நினைவுநாள் நிகழ்ச்சிகள் அனுஷ்டிக்கப்படும். ■

## 'புலிகள்' எனக் கூறி வழிப்பறி கொள்ளை

மீன் வியாபாரத்திற்காகச் சென்ற இருவர் வாழைச்சேனை சுங்காண்கேணியில் வழிமறித்துக் கொள்ளையடிக்கப்பட்டுள்ளார்கள். சம்பவதினமான 13.03.98 அன்று காலை மேற்படி இரு முஸ்லிம் மீன் வியாபாரிகளையும் வழி மறித்த கோஷ்டியினர் "புலிகளுக்குப் பணம் கட்டுகிறீரா?" எனக் கேட்டனராம். "இல்லை" என்று அவர்கள் கூறியதும் மோட்டார் சைக்கிள்களைப் பூட்டி எடுத்துக்கொண்டு அவர்களை மறைவிடமொன்றுக்குக் கூட்டிச் சென்றனர். அவர்களிடமிருந்து தலா ஆயிரம் ரூபா கேட்டுள்ளனர். மீன் வியாபாரிகள் அத்தொகை தங்களிடம் இல்லையென்று கூறவே அவர்களது சட்டைப் பைக்குள் இருந்த 9300/= ரூபாவைக் கொள்ளையிட்டுவிட்டு "இந்தச் சம்பவத்தை படையினரிடமோ பொலிஸாரிடமோ அல்லது வேறு யாரிடமோ சொல்லக்கூடாது. அப்படிச் சொன்னால் உயிருக்கு ஆபத்து!" என்று எச்சரித்துவிட்டு விரட்டியுள்ளனர்.

இதே போன்று ஓட்டமாவடிப் பகுதியிலும் தாங்கள் 'புலிகள்' என நம்பக்கூடிய நடவடிக்கையில் ஈடுபட்ட ஒரு குழுவினர் அவ்விடத்தில் நின்ற பொதுமக்களைச் சோதனையிட்டு அவர்களிடமிருந்து பணத்தையும் சுருட்டிக் கொண்டு மறைந்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது விடயமாக புலிகளின் கவனத்திற்குக் கொண்டு வருவதை ஓட்டமாவடிப் பகுதி முஸ்லிம் மக்கள் விரும்புவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓட்டமாவடிப் பகுதியில் சமீப காலங்களில் இடம்பெற்ற பல சம்பவங்களின்போது அப்பகுதி முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களும் மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் அமைதி காத்து புரிந்துணர்வுடன் நடந்து கொண்டனர் என்பதையும் அப்பகுதியின் இரு சமூகங்களும் நினைவூட்டுகின்றன. தன்னிச்சையாகச் செயற்படும் ஒரு சிலரின் நடவடிக்கைகளை அப்பகுதி தமிழ்- முஸ்லிம்கள் கண்டிப்பதாகவும் தெரிவிக்கின்றனர். ■

# நகரசபையில் சுருட்டல்?

## விசாரிக்க ஆளுநர் உத்தரவு!

திருக்கோணமலை நகராட்சி மன்றத்தில் நிர்வாகச் சீர்கேடுகள் குறித்து விசாரணை செய்யவென மூன்று பேரடங்கிய குழுவொன்று வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் திரு. காமினி பொன்சேகாவினால் நியமிக்கப்பட்டுள்ளது.

மண்முனை பிரதேசச் செயலர் புண்ணியமூர்த்தி நகர அபிவிருத்திச் சபையைச் சேர்ந்த ஏ. ஜெயரத்தினம், உதவிக் கூட்டுறவு ஆணையாளர் டபிள்யூ. பி. விஜேரட்ண ஆகியோர் கொண்ட குழு உடனடியாக விசாரணையில் இறங்கி ஒரு மாத காலத்துள் அறிக்கையைச் சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ரெலோ சார்பான சுயேச்சைக் குழுவே நகராட்சி மன்றத்தின் ஆளும் தரப்பாக இருந்து வருகின்றது. எனினும் தலைவர் பெ. சூரியமூர்த்திக்கும் ஏனைய ரெலோ சுயேச்சைக் குழுவைச் சேர்ந்தவர்களுக்கிடையே அடிக்கடி முரண்பாடுகள் தோன்றி வந்துள்ளன.

நகரசபை நிர்வாகம் பற்றிப் புகார்கள் எழுந்ததைத் தொடர்ந்து வவுனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் நாகேஸ்வரன், தம்பலகாமம் பிரதேச சபைக் கணக்காளர் குசலகுமார் ஆகியோரால் அண்மையில் மேற்கொள்ளப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட விசாரணை அறிக்கையைத் தொடர்ந்தே ஆளுநர் விசாரணைக் குழுவை நியமித்துள்ளார்.

மனையாவெளி என்ற இடத்தில் 6 பேர்ச் வீதம் 21 காணித்துண்டுகளைக் கைமாற்றியது, காந்தி நகரை அண்டிய பகுதியில் 10 பேர்ச் வீதம் 4 காணித்துண்டுகள் கைமாறியமை, உறுப்பினர் ஒருவருக்காகச் சட்டவிதிகளுக்கு முரணாக லிங்கநகரில் இறைச்சிக்கடை அமைக்க அனுமதித்தது, நல்ல நிலையிலுள்ள ட்ரக்டர் பெட்டிகள் நான்கைப் பயன்பாட்டுக்குதவாதவை எனக் கழித்து குறைந்த விலையில் விற்பனை செய்தது, 'குளக்கோட்டப்' புதிய சந்தை ஆகிய கட்டட நிர்மாணச் செலவுகளில் குளறுபடிகள் இடம் பெற்றது, கடற்கரை ஒலிபரப்புச் சேவையை உறவினரொருவர் பெயரில் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டும் அது இன்றுவரை இயங்காமல் இருப்பது ஆகிய குற்றச்சாட்டுக்கள் உட்பட ஏராளமான முறைகேடுகள் இவ்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

இக் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் பல நகராட்சிமன்ற உறுப்பினர்களும் மாட்டிக்கொள்வார்கள் என்ற கருத்து பொது மக்களிடமே பரவலாக எழுந்துள்ளது. ■

# வாகனங்கள் மீதான தடை எப்போதும் வேண்டாம்!

## ஜனாதிபதிக்கு கிழக்கு மக்கள் மகஜர்!

(மட்டக்களப்பு நிருபர்)

கிழக்கு மாகாணத்தின் தமிழ்-முஸ்லிம் பிரதேசங்களிலிருந்து புறப்படும் வாகனங்கள் அந்த மாகாணத்தின் எல்லைக்கப்பால் நாட்டின் எந்தப் பகுதிக்கும் வருவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை தற்சமயம்- மறு அறிவித்தல் வரை தளர்த்தப்பட்டிருப்பது குறித்து கிழக்கிலுள்ள தமிழ்- முஸ்லிம் மக்கள் விசனமடைந்துள்ளார்கள். "மறு அறிவித்தல் வரும்வரை" என்ற அறிவித்தல் நாளையும் வரக்கூடும் அல்லது சில தினங்களில் வரக்கூடும் என்ற உண்மையே மக்கள் கொதிப்படைந்துள்ளதற்கான காரணமாகும்.

மீண்டும் தடையுத்தரவு பிறப்பிக்கப்படுமானால் பாராளுமன்ற நாற்காலியை அலங்கரித்துக் கொண்டிருக்கும் கிழக்கிலுள்ள தமிழ்- முஸ்லிம் அரசியல் கட்சிகளின் எதிர்காலம் மிகுந்த கேள்விக்குள்ளாகும் என்று நோக்காளர்கள் தெரிவிக்கிறார்கள்.

இந்த வாகனத் தடையுத்தரவு விடயமாக 'சிரத்தையுள்ள பிரஜைகள்' என்ற மக்கள் அமைப்பினர் நூற்றுக்கணக்கான பொது மக்களிடமிருந்து கையொப்பங்களைப் பெற்று ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், "அமுலுக்கு வரவிருக்கும் கிழக்கு மாகாணத்திலிருந்து பிரயாணம் செய்தல் தொடர்பான கட்டுப்பாடுகள் பற்றி நாம் அறிவோம்.

சமீபத்தில் தெற்கில் ஏற்பட்ட குண்டு வெடிப்புக்கள் பற்றியும் தற்போதைய பாதுகாப்புப் பற்றியும் நாம் அறிவோம். இப்படியான தாக்குதல்கள் பற்றி நாம் மனவருத்தமும் அதிர்ச்சியும் அடைவதுடன் இத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காக அனுதாபப்படுகிறோம்.

இத்தகைய தாக்குதல்கள் மீண்டும் ஏற்படக்கூடாது எனும் எண்ணத்துடன்- தாக்குதல் நடந்தவுடன் பதில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்தான். எனினும் இது முரண்பாட்டை ஏற்படுத்தி தமிழ் சிங்களம் பேசும் மக்களுக்கிடையில் மேலும் பிளவுகளை உண்டாக்குவதுடன், ஏற்கெனவே வருத்தப்பட்டு இங்கு வாழும் மக்களின் சுமைகளை அதிகரிக்கும்.

மக்களின் வாழ்க்கையைப் பாதிக்கக் கூடிய இப்படியான தீர்மானங்களை எடுக்கும் வேளையில் அவை எல்லா மக்களின் நன்மைக்காக கரிசனையுடனும் கவனத்துடனும் எடுப்பது நல்லதென நாம் கருதுகிறோம். இத்துடன் கையொப்பங்கள் அடங்கிய பட்டியல் ஒன்றைத் தங்கள் மேலான கவனத்திற்காய் இணைத்துள்ளோம்." இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வேண்டுகோள் விண்ணப்பத்தில் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் கையொப்பமிட்டுள்ளார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# தொண்டா மீதும் குற்றச்சாட்டு!

## ஊழலுக்கு உடந்தையாம்

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின்போது அமைச்சராக விருந்த விஜயபால மெண்டிஸ் தனது அதிகாரத்தைப் பிரயோகித்து, அரசாங்கத்துக்கு கோடிக்கணக்கான ரூபாய்கள் நட்டத்தை ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின்மீது, அவருடைய சிவில் உரிமைகளைப் பறிப்பதற்கான மசோதா பாராளுமன்றத்தில் கடந்த வாரம் சமர்ப்பிக்கப்பட்டது தெரிந்ததே.

இது தொடர்பாக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு தனது அறிக்கையில், திரு. மெண்டிஸ் சம்பந்தப்பட்ட மோசடியை அமைச்சர்கள் எஸ். தொண்டமான் மற்றும் ஈ.எல். சேனநாயக்கா ஆகியோரின் அனுசரணையுடன்தான் செய்தார், என்று குறிப்பிட்டிருப்பதாகத் தெரிகிறது.

கடந்த 17ம் திகதி செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் இம்மசோதாவை அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்கதான் சமர்ப்பித்தார்.

அப்போது அமைச்சர் தொண்டமான் அவர் அருகிலேயேதான் அமர்ந்திருந்தார்.

தன்மீது சுமத்தப்பட்ட குற்றத்துக்கு எதுவிதமான ஆதாரமுமில்லை என்று வாதிடும் திரு. மெண்டிஸ், தனது சிவில் உரிமைகளைப் பறிப்பதானால் திரு. தொண்டமான் மற்றும் சேனநாயக்கா ஆகியோரையும் குற்றவாளிகளாகக் கருத வேண்டும், என்று கூறுகிறார்.

அநுராதபுரத்திலும் புத்தளத்திலுமுள்ள பெருவாரியான ஏக்கர் விஸ்தீரணமுள்ள நெல் வயல்களும் தென்னந் தோட்டங்களும் இதில் சம்பந்தப்பட்டுள்ளன. இவற்றை கை மாறிக்கொடுப்பதற்கான பொறுப்பினை திரு. தொண்டமானின் அமைச்சின் கீழிருந்த சபை ஒன்றே ஏற்றிருந்ததாகத் தெரிகிறது.

திரு. மெண்டிசுக்கான மசோதாவுக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவளிக்கப் போவதில்லை என்று அவ்வமைப்பைச் சேர்ந்த திரு கே. யோகராஜன் எம்.பி. கூறியிருக்கிறார்.

காணியை சட்ட விரோதமாகக் கையாடுவதற்கு மேற்படி அமைப்பின் தலைவரை அமைச்சர் தொண்டமான் அவர்களே தூண்டினார், என்று ஆணைக்குழுவில் சாட்சியமளித்த சபைத் தலைவரே கூறியிருந்தாராம். ●



படிப்பகம்

www.padippakam.com

## பயணிகள் பஸ் கவசமா?

(மன்னார் நிருபர்)

மன்னாரில் இருந்து கற்பிட்டி, கொழும்பு ஆகிய இடங்களுக்குச் செல்லும் பஸ்கள், இராணுவ பஸ்களுக்கு பாதுகாப்பாக செல்ல நிர்ப்பந்திக்கப்படுகின்றன. இதனால் பயணிகள் தம் பயணத்தை அச்சத்துடன் தொடர வேண்டியுள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன் மடுப்பகுதியில் வைத்து இராணுவ பஸ் ஒன்று புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி சில இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அதன் பின்பே இந் நடைமுறை பின்பற்றப்பட்டு வருகின்றது.

காலை 8.30 மணிக்கு மன்னாரிலிருந்து புறப்படும் மேற்படி இரு பஸ்களும், தள்ளாடியில் ஒரு மணி நேரம் வரை தாமதித்து நின்று, இராணுவ வீரர்களை ஏற்றி வரும் பஸ் தொடரை பின் தொடர்ந்து செல்ல வேண்டியுள்ளது.

இவ்வாறு செல்லும்போது உயிலங்குளம், முருங்கன் போன்ற இடங்களில் சிறிது தாமதித்து விட்டே செல்ல வேண்டியுள்ளது.

இதனால் காலை 10 மணிக்கு செட்டிகுளத்தில் நிற்க வேண்டிய பஸ்கள் பிற்பகல் 1 மணியளவிலேயே சென்றடைகின்றன. அங்கிருந்து பாஸ் பெற்று கொழும்பை சென்றடைய இரவு 11 மணியாகிவிடுகிறது.

அவ்வாறு இரவு வேளையில் சென்று லொஜ் தேடவோ, உறவினர்களின் வீடு தேடவோ பாதுகாப்பு நடைமுறையும் கடுமையானதாக உள்ளது.

மாலை 5 மணியளவில் கொழும்பில் நிற்க வேண்டிய பஸ் நள்ளிரவில் சென்றடைவதால், பலர் கொழும்பு மத்திய பஸ் நிலையத்திலேயே விடியும்வரை காத்து நின்று உரிய இடங்களுக்குச் செல்கின்றனர்.

முன்னரைப்போன்று ஒவ்வொரு பஸ்ஸிற்கும் படையினர் வழித்துணை வழங்கினால், அதுவும் மன்னாரிலிருந்து புத்தளம் வரை வழங்கினாலேயே மன்னார் மக்கள் தமது பயணத்தை சிரமமின்றித் தொடர முடியும்.

## சீர்கெட்ட தொலைத் தொடர்பு

(மன்னார் நிருபர்)

மன்னார் ரெலிகொம் நிறுவனத்தின் செயற்பாடுகள் குறித்து தற்போது அதிகாரிகளே அதிருப்திப்படும் நிலையில் இதன் பணி மாறியுள்ளது.

முன்னர் உடனுக்குடன் வெளியிடங்களில் இருந்து மன்னாருக்கோ, மன்னாரிலிருந்து வெளியிடங்களுக்கோ அழைப்புக்களை அனுப்பவும், பெறவும் கூடியதாக இருந்தது. தற்போது இது குதிரைக் கொம்பாக மாறி வருகிறது.

ரெலிகொம் நிறுவன ஊழியர்கள் தினமும் வயரும் கையுமாகத் திரிந்து, தமது அலுவல்களைக் கவனித்து வருகின்ற போதிலும் இங்குள்ள எக்சேஞ்ச் ஒழுங்காக இயங்க மறுப்பதாகத் தெரிகிறது.

மன்னாரிலிருந்து வெளியிடத்திற்கு ஒரு அழைப்பைப் பெற வேண்டுமானால் பல மணி நேரம் தாமதிக்க வேண்டியுள்ளது. 'டயல் டோன்' வருவதற்கு குறைந்தது இரு மணி நேரமாகிறது.

இதேவேளை மன்னார் தொலைத் தொடர்புக் கோபுரம் தற்போது துருப்பிடித்துக் கொட்டுகிறது. கடந்த 1996ல் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி சேதமடைந்த இக்கோபுரம் பலமான காற்று வீசும்போது அசைகிறது.

இதனால் பல கோடி ரூபா செலவில் 220 மீட்டர் உயரமுள்ள நவீன கோபுரம் ஒன்றை நிர்மாணிக்க உத்தேசித்திருப்பதாகத் தெரிகிறது. இதன் ஆரம்பப் பணியாக இடம் தெரிவு செய்யப்பட்டே ஆறுமாதமாகி விட்டது. கோபுரம் நிர்மாணிக்க பல வருடங்களாகலாம்.

புதிதாக கோபுரம் நிர்மாணிக்கப்பட்டு, கருவிகளும் வந்து சேர்ந்தால் 2000 இணைப்புகள் வழங்க முடியும் எனக் கூறப்பட்டாலும் ரெலிகொம் அதிகாரி அவ்வாறு நினைத்த உடனேயே முழுவதையும் வழங்க முடியாது எனக் கூறியுள்ளார்.

## வீதி யாருக்காக?

(காரைதீவு நிருபர்)

கல்முனை-அக்கரைப்பற்று பிரதான வீதி விஸ்தரிப்புத் திட்டம் அரைகுறையில் நின்றுவிட்டது. இருந்த வீதியும் கெட்ட நிலையில் குன்று, குழிகள், கிடங்குகள் போன்றவற்றை தன்னகத்தே கொண்டுள்ளது.

வீதிக்கான அகலம் ஒருசாரார் 56 அடி எனவும் மறு சாரார் 50 அடி எனவும் அடம்பிடிப்பதால் திட்டம் கைவிடப்பட்டது.

பாராளுமன்றத்தில்கூட அமைச்சர்களான அஷ்றப்-பௌசி இது தொடர்பாக கருத்துமோதலில் ஈடுபட்டதை அறிய முடிந்தது.

இருந்த பாலங்களை உடைத்து நீட்டப்பட்டுள்ளது. அதில் ஓட்டை ஒடிசல்கள் கிடங்குகள் உள்ளன. பிரயாணிகள் பெரும் அசௌகரியத்துக்குள்ளாகின்றனர்.

இருந்த வீதியையாவது அப்படியே விட்டிருக்கலாம் என்பது பொதுமக்களின் கருத்து. யாருக்காக இந்த வீதி? அமைச்சர்களுக்கா? பொதுமக்களுக்கா?

## தமிழ் மொழிக்கு இருட்டடிப்பு!
### சிங்களத்தில் விண்ணப்பப்படிவம்

பேராதனை பல்கலைக்கழகத்தின் (வெளிநிலை) பரீட்சை திணைக்களத்தில் (EXTERNAL EXAMINATION BRANCH) முதற்கலை தேர்வுக்கான (G.A.Q) விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது.

விண்ணப்பத்தைப் பெறச் சென்ற தமிழ் மொழி மாணவர்களுக்கு, விண்ணப்பத்தை பெறுவதற்கு பணம் கட்ட தனிச் சிங்களத்திலான படிவம் வழங்கப்பட்டது. அதனைப் பூரணப்படுத்தத் தெரியாமல் மலையகம், வடக்கு, கிழக்கு போன்ற இடங்களில் இருந்து வந்த மாணவர்கள் பெரும் சிரமப்பட்டனர்.

விண்ணப்பப் படிவத்துடன் வழங்கப்படும் மாணவர் வழிகாட்டி நூல் (Students-Guide) சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் மட்டுமே வழங்கப்படுகிறது. தமிழ் மொழியில் வழிகாட்டி நூல் இல்லை. வழிகாட்டியை பூரணமாக வாசித்து விளங்கினால் மட்டுமே தெளிவாக விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்த முடியும். தெளிவாக பூரணப்படுத்தாத விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

ஒரு விண்ணப்பப் படிவம் 50 ரூபா. விளங்காத மொழியில் வழிகாட்டியை வாசித்து தாய் மொழியில் எவ்வாறு தெளிவாகப் பூரணப்படுத்தமுடியும்?

சிங்கள மாணவர்களுக்கு சிங்கள மொழி மட்டும் போதும். தமிழ் மாணவர்களுக்கு மட்டும் எல்லா மொழியும் தெரியவேண்டும் என்பது, என்ன நியாயம்?

அதே நேரம் திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டமானிக்கான விண்ணப்பத்துடன் சகல விபரங்களும் தமிழ் மொழியில் கிடைக்கின்றன. அல்லது விரும்பிய மொழியில் பெற முடியும்.

பேராதனை (வெளிநிலை) பல்கலைக் கழகத்தில் மிகத் தெளிவாக.. தமிழ் வினாத் தாள்கள் தயாரிக்க முடியும். விடைத்தாள்களை திருத்த முடியும். ஆனால் மாணவர் வழிகாட்டி நூல் மட்டும் தமிழில் பிரசுரிக்க தமிழ் தெரிந்தவர்கள் இல்லையா? இது திட்டமிட்டு தமிழ் மாணவர்களை அவமதிக்கும் செயல். சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

பழனிமுத்து ஸ்ரீதரன்-டிக்கோயா.

## சந்திரிக்கா அரசின் 'சமாதான யுத்தம்!'
### தமிழ் மக்களை வெல்லும் திட்டம்

(திருமலை நிருபர்)

திருமலையில் உள்ள பல பிரமுகர்களுக்கு தபால் மூலம் பிரசுரம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. தேசபக்தரால் வெளியிடப்பட்டதாக பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளே அதனை அனுப்பியிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

அப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஒரு மொழி, ஒரு தாயகம், ஒரு பொருளாதார வாழ்வு, ஒரு வரலாறு கலை பண்பாடு, ஒரு தேசிய இனத்தின் அடையாளங்கள்

தமிழீழத்தில் தமிழ்த் தேசிய இனம் இந்த அடையாளத்தின் தனித்துவத்தை உணர்த்தி நிற்கின்றது.

இந்த நிலையில் சந்திரிக்கா அரசின் 'சமாதானத்திற்கான யுத்தம்' எமது தமிழ்த் தேசியத்தை அழிக்க நினைக்கிறது

**அன்பான தமிழ் மக்களே! ஒரு கணம் சிந்தியுங்கள்!**

சிறீலங்கா அரசின் தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கைகளும், ஆக்கிரமிப்புச் செயற்பாடுகளும், தொடரும் மக்களின் இடம் பெயர்வுகளும், திட்டமிட்ட பொருளாதாரத் தடைகளும், இனப் படுகொலைகளும் அன்றும் ,இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இதன் மூலம் தமிழ்த் தேசிய இனத்தின் வாழ்வு நிலைகளையும், வாழ்வு இயக்கங்களையும் பாதிக்க வைத்து எமது இனத்தின் எழுச்சியை சிங்கள அரசு அழிக்க நினைக்கிறது.

அன்று எமது உரிமைகளுக்காக நாம் அகிம்சையில் நீதி கேட்டபோது அரசு ஆயுதத்தால் பதில் கூறியது.

இன்று எமது உரிமைகளுக்காக நாம் ஆயுதத்தால் நீதி கேட்கின்றபோது சிறீலங்கா சமாதானம் பேசுகிறது.

அன்றும் இராணுவச் செயற்பாட்டில் யுத்தத்தை நடாத்தி தமிழ் மக்களை வெற்றி கொள்ள நினைத்த சிறீலங்கா தலைமைகள் ஏமாந்தன.

இன்று சமாதானம் பேசி, யுத்தத்தை நடாத்திக் கொண்டு இராணுவ ஆக்கிரமிப்பில் உளவியல் அணுகுமுறையால் தமிழ் இனத்தை வெற்றி கொள்ள சந்திரிக்கா அரசு நினைக்கிறது.

'சமாதானத்திற்கான யுத்தம்' ஆயுதத்தால் சாதிக்க முடியாததை 'உளவியல் அணுகுமுறையால்' சிங்கள அரசு சாதிக்க நினைக்கிறது.

இவ்வுளவியல் அணுகுமுறை அன்பான பேச்சுக்கள் மூலமும் அனுதாபச் செயற்பாடுகள் மூலமும், அரவணைப்பு நடவடிக்கைகள் மூலமும், சிறந்த வசதி வாய்ப்புக்களை வழங்குவதன் மூலமும் தமிழ் மக்களை அரசு– அரச படைகள் மீது நம்பிக்கை கொள்ளச் செய்யும் போலி நாடகத்தை அரங்கேற்றி வருகின்றது.

ஒட்டுமொத்தமாக இவ்வுளவியல் அணுகுமுறையானது எமது இனத்தின் விடுதலை எழுச்சியை அழிக்க நினைக்கிறது.

இவ்வுளவியல் அணுகுமுறை மூலம் தமிழ் மக்களின் மனங்களை வென்று தமிழ்த் தேசியம், தமிழீழம் என்ற எண்ணக் கருவை அழிக்க சிங்களம் நினைக்கிறது.

எமது விடுதலைப் போராட்டம் மக்கள் பலத்தில், மக்களின் உதவியில் வளர்ந்து கொண்டிருப்பதும் மக்களின் எழுச்சியில் தமிழீழ அரசு உதயமாவதும் கால நீரோட்டத்தில் தவிர்க்க முடியாததாகி விட்டது.

இந்த நிலைமையை உணர்ந்து, சிங்களத் தலைமையின், 'சமாதானத்திற்கான யுத்தம்' தமிழ் தேசிய இனத்தின் விடுதலை எழுச்சியை அழிக்க கங்கணம் கட்டி நிற்பதையும் தமிழீழ மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

**அன்பான தமிழீழ மக்களே!**

* பாராளுமன்றக் கதிரைகளிலும், அலங்காரப் பேச்சுக்களிலும் அன்று ஏமாந்தோம்
* இன்று சமாதானத்திற்கான யுத்தத்தில் எமது உணர்வுகள் மழுங்கடிக்கப்பட்டு அடிமைகளாக வாழ இன்று ஏமாறப் போகிறோமா?

விழிப்பாயிருப்போம்! விழிப்புணர்வு அடைவோம்! விழித்தெழுவோம்!"

இவ்வாறு அப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.




கொழும்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழங்குவதில் முன்னோடி....

**நாகூர் டிரவல்ஸ் & டுவர்ஸ்**

★ குவைத் ★ டுபாய் ★ சவூதி அரேபியா ★ ஜோர்தான் ★ சிங்கப்பூர் நாடுகளில் ஆண், பெண் இருபாலாருக்கும் ஏராளமான வேலைவாய்ப்புக்கள் - இன்றே நாடுங்கள்

NAGOOR Travels & Tours

33 DIAS PLACE, GUNASINGHEPURA, COLOMBO - 12.

அங்கீகார இல: 1094

☎ 439392

Royal - 071-35132



ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான BRIGHT வெளியீடுகள்

**வெற்றிக்கனிக் களஞ்சியம் - 02**

| பொதுவிவேகம் பாடநூல் | பொதுவிவேகம் செயல்நூல் |
|---|---|

வெற்றிக்கனி (ஏற்கனவே வெளிவந்தவை)

வெற்றிக்கனி - 98
இதழ் 1 முதல் 6 வரை

**P. அம்பிகைபாகனின் அனைத்து வெளியீடுகளும்**

மேலதிக விபரங்களுக்கு:

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S - 27, First Floor, P.o. Box : 162
Central Super Market Complex
Colombo-11. T.P. 434770, 074 - 718592


**விளம்பரப்பகுதி**

### 11 வருட நினைவு



**நடராசா கமலநாதன்**
**[அப்பன்]**

| மண்ணில் | மனங்களில் |
|---|---|
| 30.03.65 | 16.03.87 |

காலவெள்ளம் கரைபுரண்டு
ஓடினாலும் காலத்தால் அழியாது
உன் நினைவுகள் கலந்த
உறவுகள்.

அம்மா, அப்பா, பெரியச்சா,
அத்தான், சின்னக்கா, அத்தான்,
சிந்து, அன்னா, அன்னி,
வாணி, அபி, பிரன்ஸிபா, கன்னன்,
உஷா, உறவினர்கள், நண்பர்கள்.

தகவல்: ஞானா ஸ்ரீதரன்
சிவகுமார் வீதி, உரும்பிராய் கிழக்கு.

### 45வது நினைவு நாள் அஞ்சலி
08.03.1998

மலர்வு 16 - 04 - 1965



உதிர்வு 23 - 01 - 1998

**அமரர் ஸ்ரீ.செந்தில்குமார் (குமரன்)**

கருவாகி உருவாகி காசினியில்
நீ தவழ்ந்து
பெருவாழ்வு பெற்றுப் பேரோடுதான்
சிறந்து
சீரோடும் சிறப்போடும் வாழ்வாயென
நினைத்திருக்க
இடை நடுவே காலன் புகுந்துகொண்டு
உனைக் கவர்ந்து
எங்கேதான் சென்றானோ ஏங்குகின்றோம்
எம் குமரா!
உனை நினைத்தேங்கும் உன்னவர்கள்

08.03.98 அன்று நடைபெற்ற அன்னாரின் 45வதுநாள் நினைவஞ்சலியில் கலந்துகொண்ட அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.
பெற்றோர், உற்றார், உறவினர்.


**சித்தர் மாந்திரீகம்**

அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒருதடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 25ந் திகதி வரை

SHAKTHY SARAVANA,
30/16, MALLIKA LANE,
WELLAWATTA, COLOMBO-06.
TELE PHONE: 500067.

25ந் திகதி முதல் 30ந் திகதி வரை


SHAKTHY SARAVANA,
82, MANIKKAVASAGAR ROAD,
TRINCOMALEE.
TELE PHONE: 026-20347

வியாழன் விடுமுறை



**மலையாள மாந்திரிகம்**





மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி**

P.K. SAAMI J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA
UCHCHADA PEEDAM
NO. 162, KOTAHENA STREET,
MAY FIELD ROAD, COLOMBO-13.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-0094134 2464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831



BRIGHT BOOK CENTRE (PVT) LTD.

**கல்வி நெறிகள்**

* 30 Days Spoken English
* 90 Days Spoken Sinhala
* Method of Book-Keeping
* Method fo Computerised Book-Keeping & Accountancy (MCBA)

மேற்படி பாடநெறிகள் நேரிலும்/தபால் மூலமும் நடைபெறுகின்றன. வகுப்பு நேர விபரங்களை நேரிலோ, தொலைபேசியிலோ, தபால் மூலமோ அறிந்து கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு கீழ்க் காணும் விண்ணப்ப படிவத்துடன் தொடர்பு கொள்க.

விரும்பும் பாடநெறி:........................
பெயர்:........................
முகவரி:........................

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S-27, First Floor, P.O. Box-162,
Colombo Central Super Market Complex,
Colombo -11. Tel: 434770, 074-718592


### 1வது பிறந்தநாள் வாழ்த்து ஏஞ்சல் அம்ருதா. ஏஞ்சல் பிறிமிதா. டேவ் நிதின்



மட்டக்களப்பு 37/15 திசவீரசிங்கம் சதுக்கத்தைச் சேர்ந்த ரவிச்சந்திரா-செல்வின் தம்பதியினரின் செல்வங்களான அம்ருதா, பிறிமிதா, நிதின், ஆகியோர் தங்கள் பிறந்த தினத்தை தமது இல்லத்தில் 21.03.98 அன்று கொண்டாடினார்கள். இவர்கள் என்றென்றும் குழந்தை இயேசுவின் அருள் பெற்று வளமுடன் வாழ்கவென அப்பா, அம்மா, உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் மனமார வாழ்த்துகிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# இராணுவ மரதனோட்டம்

# கடிவாளம் யார் கையில்?

—நாரதர்—

**க**ரிப்பட்ட முறிப்பில் இருந்து படையணிகளை நகர்த்தி மாங்குளத்தை கைப்பற்ற 'ஜயசிக்குறுய்' படையினர் மேற்கொண்ட முயற்சி எதிர்பார்த்தளவு வேகமாக நடைபெறவில்லை.

கிட்டத்தட்ட 20 நாட்களாக மாங்குளம் நோக்கிய நகர்வு முயற்சிகள் ஆமை வேகத்திலேயே உள்ளன.

விமானப் படையினர் குண்டுகளை இறைக்க, பீரங்கிப் படையணிகள் ஷெல்களை விதைக்க, டாங்கிகளின் கவசப் பலத்தில் தரை நகர்வு முயற்சிகள் நடந்தன.

கரிப்பட்ட முறிப்பு, ஒலுமடு சார்ந்த அடர்ந்த காட்டுப்பகுதிகளுக்குள் இருந்து புலிகள் தொடுத்த தரைவழி துப்பாக்கிச் சமரும், எறிகணைத் தாக்குதல்களும் படையினரை நகரவிடாமல் முடக்கின.

சில தருணங்களில் படையினரை நகரவிட்டு, நகர்வுகளை கவனித்து காட்டுப் பகுதிகளில் இருந்து படையினரின் பக்கவாட்டில் நெருங்கி ஊடறுத்து புலிகள் தாக்கினர்.

இதனால் தரை நகர்வுப் படையணியின் தலைப்பகுதி புலிகளின் வியூகத்திற்குள் சிக்க, ஏனைய பகுதிகள் துண்டுபட்டு பின்வாங்க வேண்டியிருக்கும்.

**இவ்வாறான ஊடறுப்பு முற்றுகைத் தாக்குதல்களின் போதுதான் படையினரின் சடலங்களும், ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்படுகின்றன.**

கிளிநொச்சி நகரில் புலிகளின் அணிகள் புகுந்தமையாலும், பெப்ரவரி 04ம் திகதி சுதந்திரதின கொண்டாட்ட பின்னடைவுகளும் யுத்த வெற்றி குறித்த சந்தேகங்களை தென்னிலங்கையில் ஏற்படுத்தி இருந்தன.

தலதா மாளிகைத் தாக்குதலால் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையின் செல்வாக்கும் ஆட்டம் கண்டிருந்தது.

இந்நிலையில் பரந்தன்-கிளிநொச்சி சமர் பற்றிய செய்திகளும் முழுமையாக வெளியாகியிருந்தால், அடிமேல் அடியாக மாறியிருக்கும்.

**அதனால் கிளிநொச்சியில் பாரிய சமர் நடந்து கொண்டிருக்கையில், கிளிநொச்சி நகரின் மத்திய பகுதிவரை புலிகளின் கையில் வீழ்ந்துவிட்ட பின்னரும் அரச வெகுஜன தொடர்பு சாதனங்கள் அப்படியொரு சண்டை நடப்பதுபோலவே இரு நாட்களாக காட்டிக் கொள்ளவில்லை.**

பின்னர் பிரதி பாதுகாப்பு அமைச்சரே தனது வாயால், "கிளிநொச்சி நகரின் எந்தப் பகுதியும் புலிகள் வசம் செல்லவே இல்லை. புலிகளின் சில அணிகள் ஊடுருவ முயன்றன, உடனடியாக விரட்டி அடித்து விட்டோம்" என்று கூறியதாக பத்திரிகைகள் தெரிவித்தன.

அதே சமயம், படை அதிகாரி ஒருவர் கிளிநொச்சி நகரில் தமது காப்பரண்கள் சில மட்டும் பறிபோனதாக ஒப்புக்கொண்டிருந்தார்.

**இத்தகைய முரண்பட்ட தகவல்களுக்கு புறம்பாக, புலிகள் கிளிநொச்சி நகரின் மத்திய பகுதியில் நிலைகொண்டிப்பது தெளிவான புகைப்பட ஆதாரங்களுடன் வெளியாகிவிட்டது.**

ஆக, கிளிநொச்சி பின்னடைவு, மற்றும் சுதந்திரதின கொண்டாட்ட தளர்வுகள் போன்றவற்றால் ஏற்பட்ட நம்பிக்கையீனங்களை மேவும் விதமாகவே மாங்குளம் நோக்கிய பாரிய படை நகர்வு அவசரமாக ஆரம்பமானது.

ஒரு கோடுக்கு அருகே பெரிய கோடு ஒன்றை கீறினால் முதல் இருந்த கோடு சிறியதாகிவிடும் என்ற தந்திரம்தான் இது.

கிளிநொச்சி சமர் பற்றிய தகவல்கள் வெளியாகாமலும், அச்சமர் தொடர்பாக செய்தியாளர்கள் கிளராமலும் இருக்க, வேகமாக தொடரப்பட்ட நடவடிக்கையே மாங்குளம் நோக்கிய தரைநகர்வு சமராகும்.

கிட்டத்தட்ட இரண்டு வாரகாலமாக மாங்குளம் புலிகளின் கேந்திர நகர் என்றும், அதனை நெருங்கிவிட்டதாகவும், முன்னணிக் காப்பரண்களை கைப்பற்றிவிட்டதாகவும் படையினரும், அரச பிரசார சாதனங்களும் பரபரப்பாக கூறிக் கொண்டிருந்தன.

கரிப்பட்ட முறிப்பு, ஒலுமடுப் பகுதியில் உள்ள படை நிலைகளில் இருந்து மாங்குளம் செல்ல வேண்டுமானால் மேலும் ஏழு கிலோ மீட்டர் தூரத்தை கடந்தாக வேண்டும்.

**அப்படியிருக்கையில் புலிகளின் முன்னணிக் காப்பரண்களை எப்படிக் கைப்பற்ற முடியும்?**

கிட்டத்தட்ட 20 நாட்களாகியும் மாங்குளம் நோக்கிய நகர்வுகள் எதிர்பார்த்தளவு அமையாததால், "எமது நோக்கம் மாங்குளத்தை பிடிப்பதல்ல, புலிகளை அழிப்பதுதான்" என்று இராணுவப் பேச்சாளர் கூறவேண்டியதாகியது.

தற்போது மாங்குளம் நகரை நோக்கிய நகர்வை நிறுத்திக் கொண்டு உட்பாதை வழியாக கிளிநொச்சி நோக்கி நகரலாமா? என்று நோட்டம் பார்க்கிறார்கள்.

கரிப்பட்ட முறிப்பு ஒலுமடுப் பகுதியில் உள்ள படையினர் மாங்குளத்தை கைப்பற்ற முடியாவிட்டால், **ஒலுமடுவில் இருந்து உட்பாதைகள் வழியாக பழைய கண்டி வீதியை அண்டியதாக நகர்ந்து கிளிநொச்சியை சென்றடைய முற்படுவர்.**

அவ்வாறான சந்தர்ப்பத்தில் கிளிநொச்சி நகரில் உள்ள படையினரும் அங்கிருந்து முன்னேறி 'ஜயசிக்குறுய்' படையினருடன் கைகுலுக்க நகர்வர்.

ஒலுமடுவில் இருந்து பழைய கண்டி வீதியை அண்டிய பகுதியால் முன்னேறும் ஜயசிக்குறுய் படையினரை தடுத்து நிறுத்தி தாக்கும் புலிகளின் அணிகளை, கிளிநொச்சி நகரில் இருந்து முன்னேறும் படையணிகள் பின்புறமிருந்து தாக்கலாம்.



இந்த முயற்சி புதியதல்ல. வன்னியில் பருவ மழைக் காலம் ஆரம்பமாக முன்னர் இவ்வாறான தரை நகர்வு ஒன்றுக்கு முயற்சி செய்யப்பட்டது.

**வவுனியா-யாழ் சாலை வழியாக முன்னேற முடியாத நிலையில்தான் இத்தகைய உட்பாதை நகர்வுகளை படையினர் நாடுகின்றனர்.**

புலிகளை அழிப்பதாக ஆரம்பமான 'ஜயசிக்குறுய்' புலிகளால் தாம் அழிக்கப்படாமல் தற்காத்துக்கொள்ளக்கூடிய பாதைகளை நாடிச் செல்லும் நிலையிலேயே உள்ளது.

கிட்டத்தட்ட 72 கிலோமீட்டர் நெடுஞ் சாலையை கைப்பற்றும் 'ஜயசிக்குறுய்' நடவடிக்கையானது மரதன் ஓட்டம் போன்றதே.

ஆனால், இப்போது அந்த மரதனோட்டம் நேர் பாதையில் செல்ல முடியாத நிலையில், எப்படியாவது சுற்றிச் சுழன்று ஓடிச் சென்றாவது கிளிநொச்சி நகரை தொட்டுவிட்டால் போதும் என்ற நிலையில் மூச்சிழுத்துக் கொண்டிருக்கிறது.

**இதுவரையான பத்து மாதச் சமரில் புலிகளின் பலத்தை அழித்தல் என்ற பிரதான நோக்கத்தை அடைய முடியாது என்பதை படைத்தரப்பு உணர்ந்தே இருக்கும்.**

இனித் தொடரும் சமர்களில்கூட அந்த நோக்கம் நிறைவேறப்போவதில்லை.

'ஜயசிக்குறுய்' சமரில் புலிகளுக்கு ஏற்பட்ட பாரிய உயிரிழப்புக்கள்கூட படையினரால் விரிக்கப்பட்ட வலைகளுக்குள் புலிகள் சிக்கியதாலோ, அல்லது படையினர் முன்னேறும் போது நடைபெற்ற சமர்களிலோ ஏற்பட்டவையல்ல.

அவ்வாறான சமர்களில் ஐந்து, பத்து, இருபது என்ற கணக்கில்தான் புலிகள் தரப்பு இழப்புக்கள் இருந்துள்ளன.

**படையினர் நிலைகொண்ட நிலப்பரப்பில் புலிகள் நடத்திய ஊடறுப்பு மற்றும் அழித்தொழிப்பு தாக்குதல்கள், படையினரை உள்ளே இழுத்து நிலைகொள்ளவைத்து நடத்திய முற்றுகைத் தாக்குதல்கள் போன்றவற்றின் போதுதான் புலிகள் தரப்பில் பாரிய உயிரிழப்புக்கள் ஏற்பட்டன.**

அத்தகைய மோதல்களில் புலிகளைவிட படைத்தரப்பினரின் ஆட்பல, ஆயுத பல இழப்புக்கள் அதிகமாகவே இருந்துள்ளன.

தமக்கு சாதகமான சண்டைக் களங்களை திறந்து புலிகளின் அணிகளை சண்டைக்கிழுத்து பாரிய அழிவை ஏற்படுத்தலாம் என்ற படையினரின் தந்திரம் பலிக்கவில்லை.

**அதற்குமாறாக, படையினரின் பலம், பலவீனத்தை அறிந்து, பலவீனமான முனையில் ஓங்கி அடிக்கும் சண்டைகள் பலவற்றை புலிகள்தான் நடத்தி முடித்திருக்கின்றனர்.**

சில சமயங்களில் படையினரின் அதி உயர் விழிப்பு நிலையில் உள்ள பகுதிகளுக்குள்ளும் புலிகளின் அணிகள் புகுந்துள்ளன.

கிளிநொச்சி நகரில் நடைபெற்ற சமரானது, புலிகளின் தாக்குதல் எதிர்பார்க்கப்பட்ட முனையில், தாக்குதலை எதிர்பார்த்து 24 மணிநேரமும், படையினர் விழிப்பாக இருந்த போர் அரங்குக்குள் புகுந்து நடந்த சண்டையாகும்.

இவ்வாறான சண்டைகளில் உயிர் இழப்புக்களை அதிகம் கொடுக்க வேண்டியிருக்கும். ஆனால், ஒட்டுமொத்தமான சமரின் நலனுக்கு மிக அவசியமான சண்டைகளாகவும், தவிர்க்க முடியாத இழப்புக்களாகவும் இவை அமைகின்றன.

**தற்போது அந்த யுத்த தந்திர சாதகத்தை படையினர் இழந்துள்ளனர். ஏனெனில் கிளிநொச்சி நகரின் மத்திய பகுதிவரை இப்போது புலிகளின் அணிகள் நிலைகொண்டுள்ளன.**

எங்கே சென்று சேர வேண்டும் என்று 'ஜயசிக்குறுய்' படையினர் புறப்பட்டனரோ, அந்த முனையான கிளிநொச்சி நகர் இப்போது படையினரின் கைகளில் இருந்து நழுவியுள்ளது.

**இவ்வாறான நிலையில் சித்திரைப் புத்தாண்டுக்குள் கிளிநொச்சியை தொட்டுவிடும் கனவும், காலவரையறையும் நிறைவேறப்போவதில்லை.**

எனவே, கிளிநொச்சி சமரானது 'ஜயசிக்குறுய்' படை நடவடிக்கையை மேலும் பின்னடையச் செய்து, சமரை மேலும் நீடித்து படையினரை களைக்க வைத்து பலவீனமாக்கும் புலிகளின் முதற்கட்ட தந்திரோபாயத்திற்கு அவசியமான சமராகவே இருந்தது.

**வன்னிச் சமரைப் பொறுத்தவரை அதன் கடிவாளம் தற்போது படையினர் கையில் இல்லை. புலிகளின் கையில் இருக்கிறது.**

எவ்வளவு காலத்திற்கு முடியுமோ அத்தனை காலத்திற்கு சமரை இழுத்தடித்து படையினரை சிறுகச் சிறுக சேதமாக்கி பாரிய அழிவுக்கு தோதாக மாற்றுவதே புலிகளின் உத்தி.

தரைப்பாதை திறப்பை தடுப்பது மட்டுமே புலிகளின் தேவை என்றால் சமரை இழுத்தடிக்க தேவையில்லை.

பாதையை திறக்க அனுமதித்துவிட்டு, அடிக்கடி ஊடறுப்புக்கள் நடத்திக் கொண்டிருந்தால், தரைப்பாதையை படையினரால் பயன்படுத்தவோ, பாதுகாக்கவோ முடியாமல் போய்விடும்.

**தற்போது 'ஜயசிக்குறுய்' படையினர் உள்ள நிலையில், கிளிநொச்சி நகரை அவர்கள் தொட்டுவிட்டால்கூட, அதனை இராணுவ வெற்றியாக பிரசாரப்படுத்தலாமே தவிர, வவுனியா-யாழ் தரைப்பாதையை பாதுகாக்கவோ, போக்குவரத்து நடத்தவோ முடியாது.**

புலிகளின் ஆட்டிலெறிகளிடம் இருந்தும், மோட்டார்களிடம் இருந்தும் போக்குவரத்துக்கும், இராணுவ விநியோகத்துக்கும் பாதுகாப்பளிக்க முடியாது.

புலிகளின் இராணுவபலம் வீழ்ச்சியடைந்தால் மட்டுமே, அதாவது தங்களை தற்காத்துக் கொள்ள ஒளிந்து ஓடித் திரியும் சிறு குழுக்களாக புலிகளை மாற்றினால் மட்டுமே வவுனியா-யாழ் தரைவழி பாதையை படையினரால் பாதுகாக்க முடியும்.

ஆனால், கடந்த பத்துமாத 'ஜயசிக்குறுய்' சமரானது புலிகளது இராணுவ ஆற்றலை கூர்மைப்படுத்தியுள்ளதுடன், மரபுப்போருக்கான படைக்கல பலத்தையும் பெற்றுக் கொடுத்துள்ளது.

**'ஜயசிக்குறுய்' ஆரம்பமான காலத்தில் படையினர் ஒரு கிலோ மீட்டரை கடக்க எடுத்த நாட்களையும், கொடுத்த விலைகளையும் விட, தற்போது அதேயளவு தூரத்தைக் கடக்க பல மடங்கு இழப்புக்களை படையினர் சந்தித்தாக வேண்டியுள்ளது. அதே சமயம் படைத்தரப்பின் முன்னேற்றத்தை தடுக்கும் சண்டைகளில் புலிகள் தரப்பு இழப்பு முன்பை விடக் குறைந்தளவானதாக மாறியுள்ளது.**

ஒன்று குவிந்த ஆட்பலம், கனரக ஆயுத தளபாட பலத்துடன் முன்னேறும் மரபுப் படையணியை எதிர்த்துப் போரிடும் போர் முறையில் புலிகள் தேர்ச்சி அதிகமாகியுள்ளது.

தங்கள் தரப்பு இழப்புக்களை குறைத்துக் கொண்டு படைத்தரப்புக்கு இழப்புக்களை அதிகமாக்கும் புலிகளின் எறிகணைத் தாக்குதல்களுக்கான வாய்ப்பும் வன்னிக் களத்தில் படையினரின் விரிவாக்க பரவுதலால் அதிகமாகும்.

தற்போது கரிப்பட்ட முறிப்பு ஒலுமடுப் பகுதிகளில் இருந்து முன்னேறி மாங்குளம் நகரை கைப்பற்றினால்கூட கிளிநொச்சி நகரை கைப்பற்ற 30 கிலோ மீட்டர் செல்ல வேண்டும். அங்கும் புலிகள் இருப்பதால் மேலும் மூன்று நாலு கிலோ மீட்டர் தூரத்தை கைப்பற்ற அங்கும் சண்டையிடவேண்டும்.

மாங்குளம் நகரை கைப்பற்றாமல் கரிப்பட்ட முறிப்பு ஒலுமடு ஊடாக உட்பாதை வழியாக சுற்றிச் சுழன்று கிளிநொச்சி நகரை அடைவது என்றால் குறைந்தது 40 கிலோ மீட்டர் தூரத்தை கடக்க வேண்டும்.

**எனவே, மாங்குளத்தை கைப்பற்றினால் என்ன, கைப்பற்றாவிட்டால் என்ன, மேலும் நீண்ட சமருக்கான கள நிலவரமே காணப்படுகிறது.**

அந்த நீண்ட கால சமரின் பின்னர் கிளிநொச்சி நகரைக் கைப்பற்றினாலும்கூட தரைப்பாதை என்ற கனவு கைக்கெட்டாத கனவாகவே இருக்கும்.

புலிகளின் பலத்தை அழித்தல் என்ற பிரதான இலக்கை கடந்த பத்துமாதச் சமரில் எட்டமுடியாமல் போய்விட்டது.

இனிவரும் காலச் சமர்கள் மூலம் படைத்தரப்பு அடையப்போகும் பலவீனம் வவுனியா-யாழ் தரைப்பாதை ஒன்றை திறந்து தக்கவைக்கும் இலக்கையும் எட்ட முடியாமல் செய்துவிடும்.

**ஆக, முடிவு, இதுதான். 'ஜயசிக்குறுய்' படையினர் என்றாவது ஒருநாள் கிளிநொச்சி நகரை சென்றடையக் கூடுமானால், அப்போது விழுந்தும் மீசையில் மண்படவில்லை என்ற கதையாக, அதனை வெற்றியாக வெளியில் கூறலாமே தவிர, எந்த இலக்குகளைக் குறியாக கொண்டு 'ஜயசிக்குறுய்' ஆரம்பமானதோ அந்த இலக்குகளை எட்ட முடியாது.**

ஆனால், யுத்தம் அரசுக்கு ஒரு கௌரவப் பிரச்சனையாக மாறியிருப்பதால், யுத்தம் தொடர்பான பிரசாரங்களும், செய்திகளும் **அபாயமான திசையில் செல்லத் தொடங்கியுள்ளன.**

போர்க்களத்தில் தமக்கு ஏற்படும் தோல்விகளையும், பலவீனங்களையும் மூடிமறைக்க நியாயம் தேடும்போது, தமிழ் மக்கள் அனைவரையுமே சந்தேகப் பிராணிகளாக்கும் விதமாக தகவல்கள் கூறப்படுகின்றன.

**திருமலை கடற்படை தளத்தில் இருந்து புறப்பட்ட கப்பல் தொடரணி புலிகளால் தாக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து திருமலை கடற்படை தளத்தில் பணியாற்றிய தமிழ்ப் பெண் கைதானார். அவர்தான் தகவல் கொடுத்தார் என்பது போலவே சித்தரிக்கப் பார்த்தனர்.**

திருமலை துறைமுகப் பகுதி, கடற்படைத் தளப்பகுதி போன்றவற்றை கடற் புலிகள் நின்று துல்லியமாக கவனிக்க எத்தனையோ முனைகள் உள்ளன.

திருமலை துறைமுகத்திற்குள் நடைபெற்ற கடற்கரும்புலித் தாக்குதலைக்கூட புலிகள் வீடியோ படம் எடுத்து காண்பித்தனர். அந்தளவுக்கு அவர்கள் நின்று அவதானிக்கக் கூடிய கடற்புற முனைகள் மற்றும் நிலைகள் உள்ளன. எனவே, உள்ளே இருந்துதான் தகவல் கொடுக்க வேண்டும் என்பதில்லை.

**அதேபோல, புலிகளின் ஆட்டிலெறிப் பிரிவுக்கு இராணுவத்தில் கப்டனாக இருந்த தமிழர் ஒருவரே தலைமை தாங்குவதாக அடிக்கடி பிரசாரப்படுத்துகிறார்கள்.**

முல்லைத்தீவு முகாமில் புலிகளால் பிடித்துச் செல்லப்பட்ட படையினரைக் கேட்டால்கூட ஆட்டிலெறி இயக்கும் வித்தையை சொல்லிக் கொடுத்திருப்பர். தவிர, ஆட்டிலெறியை இயக்கும் தொழில் நுட்பம் அப்படி ஒன்றும் மகா கஷ்டமானதல்ல. கள அனுபவம் மூலமே தேர்ச்சி பெறுகிறார்கள்.

கரப்புக்குத்தி சண்டையில் துருப்புக்கான கவச வாகனத்தை புலிகள் கைப்பற்றிக் கொண்டு சென்றனர். அதனை இயக்க யார் சொல்லிக் கொடுத்தார்கள்? எந்தப் படை அதிகாரி சொல்லிக்கொடுத்தார் என்று கூறப்போகிறார்கள்?

சாகரவர்த்தனா கப்பலின் கப்டன் இன்றுவரை புலிகளின் காவலில்தான் உள்ளார். கடற்புலிகளுக்கு அவர்தான் பயிற்சி கொடுக்கிறார், கடற்படை கப்பல்களின் சூட்சுமங்கள் பற்றிய இரகசியங்களை புலிகளுக்கு கூறுகிறார் என்று மட்டும் ஏன் சந்தேகம் வரவில்லை?

> இயக்கங்களின் வளர்ச்சியை ஒடுக்க முன்னின்றவர்கள் தமிழ் பொலிஸ் அதிகாரிகளே! இன்று அவர்கள் சந்தேகப்பார்வையில்!

ஆரம்பகாலத்தில் இயக்கங்களை வளராமல் தடுப்பதில் முன்னின்றவர்களே தமிழ்ப் பொலிஸ் அதிகாரிகள்தான். இன்ஸ்பெக்டர் பஸ்தியாம் பிள்ளை, பத்மநாதன், குருசாமி, குமார் என்று பலர் இருந்தனர்.

**குட்டிமணி, தங்கத்துரையை கைது செய்தவர்கூட தமிழ் பொலிஸ் அதிகாரிதான்.**

ஆனால், இன்று அதே தமிழ் பொலிஸாரும் புலிகளுக்கு உளவு சொல்லும் ஆட்களாக கருதப்படுமளவுக்கு பொறுப்பற்ற பிரசாரங்கள் செய்யப்படுகின்றன.

**ஒருவரது சகோதரர் புலிகள் இயக்கத்தில் இருப்பதால் மட்டும் அவரும் புலிகளது அனுதாபியாகிவிட மாட்டார்.**

ஆனால், தங்கள் ஓட்டைகளை மறைப்பதற்காக, தமிழர்கள் மூலமே தகவல்கள் கசிந்தன என்பதுபோல பிரசாரப்படுத்துவது 'இனப் போர்' என்ற குணாம்சத்தை பரவலாக்கவே வழிவகுக்கும்.

இவ்வாறான பிரசாரங்களின் தாக்கம், இன குரோதங்களையும், இனப் பதற்றத்தையும் உருவாக்கும் அபாய அறிகுறிகளாகவே மாறிநிற்கின்றன.

ஆக, இனப் பிரச்சனைக்கு இராணுவத் தீர்வு என்ற அணுகுமுறையும், யுத்த வெற்றியை நம்பிய அரசின் கனவுகளும் தவிர்க்க முடியாமல் போரை இனவாத வடம்பிடித்து இழுத்துச் செல்வதாகவே மாறி வருகின்றன. ■

## அதிரடி அய்யாத்துரை



**தமிழ்க் கட்சிகள்** இரண்டு யாழ்ப்பாணத்தில் இரகசியமாக நிதி திரட்டலில் குதித்திருக்கிறார்கள். பகிரங்கமாக திரட்டினால் பச்சை உடையார் பறித்து திருப்பிக் கொடுத்து விடுவார்கள் என்று பயம். பணம் கொடுப்போர் கேட்கும் கேள்வி இதுதான்: "ரெண்டு எழுத்தார் கருவி வாங்கவும், சண்டை பிடிக்கவும் பணம் சேர்த்தவை. இவை என்ன சமையலுக்கு காய் கறிவாங்கவோ சேர்க்கினம்?"

**பிரதேச சபை** ஒன்றில் ஒரு மூர்த்தி தன்னிச்சையாகத் தலைவர் பதவி ஏற்றுள்ளாராம். இந்த மூர்த்தியின் கீர்த்தி ரொம்பப் பெரிசாம். ரெண்டு எழுத்தாரில் இருந்து பம்மாத்து காட்டியதால் தேடப்பட்டு, ஜனநாயகக் கட்சியில் புகலிடம் கண்டவராம். தரம் அறியாமல் அன்னாருக்கு தலைவர் பதவி கொடுத்தது தங்கள் பிழை என்று தலையில் அடிக்கினம் ஜனநாயகக் கட்சியினர்.

**தாங்களே சுட்டுப்போட்டு** நினைவுநாள் கொண்டாடும் மரபுக்கு எங்கள் இயக்கங்களைவிட்டால் வேறு யார் உரிமை பாராட்ட முடியும்? யாழ்ப்பாணம் நெல்லியடியில் தாஸ் உட்பட பலரது நினைவாக தமிழ் இயக்கம் ஒன்று ஞாபகார்த்த விளையாட்டுப் போட்டிகள் நடத்தினவை. அந்த இயக்கத்தின் முக்கிய தளபதியாக இருந்த தாஸ் அண்ணாச்சியை யாழ் ஆஸ்பத்திரியில் பேச்சுவார்த்தைக்கு அழைத்து டப்பு டப்பு என்று சுட்டுப்போட்டதும் அதே இயக்கம்தான். 'சமூக விரோதிகள்' என்று பிரசுரம் அடித்துவிட்டதும் அதே இயக்கம்தான்! இப்ப போஸ்டர் அடித்து பேப்பரில் விளம்பரம் கொடுத்து நினைவுநாள் கொண்டாடுகினம். இதைவிட கொடுமை என்ன இருக்கு?!

**யாழ் மாநகரசபை** பதவிப் பிரமாண வைபவத்தில் மாலை சுமந்து மாதாவின் கழுத்து சுளுக்கிப் போட்டுதாம். நீண்டநாளைக்குப் பிறகு மாலைகள் மரியாதைகள். இரத்தப் பொட்டு இல்லாதது மட்டும்தான் ஒரே ஒரு குறை! மாநகர மாதாவின் செயலாளர் மின்சார சபையிலும் சம்பளம் வாங்கிக்கொண்டு, அம்மணிக்கும் சேவை யாற்றுகிறாராம். "ஞானம்ஸ் ஹோட்டல் பகுதியில் உள்ள படையினரை அகற்றிக் காட்டுகிறேன்!" என்றும் சவால் அல்லது சாவலும் விட்டிருக்கிறாராம்.

**ஊமைப் பெண் ஒருவர்** பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவத்தால் சாவகச்சேரி சனம் கொதிச்சுப்போயிருக்குதுகள். பச்சை உடையார்தான் காரணம். தமிழ்க் கட்சிகள் மூச்சுக் காட்டவில்லை. "இதெல்லாம் சகஜம்தான்!" என்ற மாதிரியான அனுபவ முதிர்ச்சி வந்துட்டுதாம். உந்த முதிர்ச்சி முன்னரே வந்து தொலைச்சிருந்தால் அநியாயமாக பலரை ஆயுதம் கொடுத்து இவை அனுப்பியிருக்க மாட்டினமல்லோ!

**அயலகத்தின் புதுத் தலைவருக்கு** கூட்டான கட்சித்தலைவர் வாழ்த்துச் செய்தி அனுப்பினவராம். அதில் மறந்தும் கூட "இனப் பிரச்சனை தீர்வுக்கு உதவுங்கோ; கவனியுங்கோ!" என்று ஒரு வார்த்தை சேர்க்கேல்லை. அப்படி ஒரு வார்த்தையைச் சேர்க்கப்போய், அதை அம்மா அறிந்து விட்டால், வம்பாகிப்போகுமல்லோ!

**வெளிநாடுகளில் உள்ள** நம்மவர்கள் மத்தியில் எழுச்சி ஒன்று ஏற்பட்டிருக்கிறது. அதுதான் சம்ப கால ஊர்வலங்களிலும் தெரிஞ்சுதாம். பெற்றோர்கள் பலரை ஊர்வலத்திற்கு அழைத்து வந்ததே பிள்ளைகள்தானாம். "எங்களை கறுப்பன்கள் என்று இங்கெல்லாம் கேலி செய்கிறார்கள். நாங்கள் எங்கள் நாட்டுக்குப் போய் கௌரவமாக வாழவேணும். எங்களுக்கு என்று ஒரு கூடாவது வேணும்!" எண்டு பிள்ளைகள்தான் புத்தி சொன்னவையாம்.

**பக்கத்து நாட்டு** புதியவர் பதவிப் பிரமாணம் செய்து மூச்சு விட முன்னர் வெளிநாட்டுக்குப் பொறுப்பானவர் ஓடிய ஓட்டம் என்ன? கை கொடுத்த வேகம் என்ன? "மடியிலே கனம் இருப்பதால் தானே இந்த ஓட்டம் ஓடி வருகினம்!" என்று டில்லி பத்திரிகையாளர் ஒருத்தர் அபிப்பிராயப்பட்டாராம். அதுவும் சரிதான், இல்லையென்றால் ஏன் பதறியடிப்பு?!

**இவ்வாரப்** பொன்மொழி:

> **"அடுத்த வீட்டுக்காரனுடன் நட்பாக இரு! ஆனால்– இடையில் உள்ள சுவரை எடுத்துவிடாதே!"**



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

## 174

பிரேமதாசா அரசாங்கம் அரசியல் தீர்வொன்றைக் காணுமானால் குறைந்தது இருபது வருடங்களுக்கு அதனை அசைக்க முடியாது.

சிங்கள தமிழ் முஸ்லிம் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றவராக பிரேமதாசா மாறிவிடுவார்.

ஜனாதிபதி தேர்தல்களிலும் வாக்குகள் குவியும். தொடர்ந்து ஜனாதிபதியாகவே இருப்பார்.

இவையெல்லாம் சிறீலங்கா சுதந்திரக் கட்சி சீர்தூக்கி ஆராய்ந்து பார்த்து கண்ட முடிவுகள்.

அந்த முடிவுகளின் பிரகாரம் பிரேமதாசா அராசாங்கத்திற்கு நெருக்கடியைக் கொடுக்கும் விதமான கோரிக்கைகளை எடுத்துவிட ஆரம்பித்தனர்.

தற்போது எப்படி ஐ.தே.கட்சியினர் பொதுஜன முன்னணியினரோடு அரசியல் தீர்வு விடயத்தில் கண்ணாமூச்சி விளையாட்டில் ஈடுபட்டுள்ளனரோ, அதே போன்றுதான் அன்று சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் ஐ.தே.கட்சி அரசுடன் விளை

உறுப்பினர்கள் வாபசாகி திருமலைக்கு சென்று விட்டனர்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்புப் பகுதிகளில் வாபசாக முன்னர் ஆளாளுக்கு கொள்ளையடித்துக் கொண்டு சென்றனர்.

இது இயக்கத்தின் தலைமைக்கு தெரிந்தே நடந்த காரியமல்ல. ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைவர் பத்மநாபாவுக்கு தெரியாமல் ஆங்காங்கே பொறுப்பில் இருந்தவர்களும், கட்டுப்பாடற்ற உறுப்பினர்களும் நடத்திய கூத்து அது.

ஆனாலும் கட்டுப்பாடற்ற விதமாக இயக்கம் நடத்தி மக்கள் விரோத சக்திகளை

வளர்ந்தது.

ஆனால், இயக்கம் வளர்ந்த பின்னர் கொள்கைகள் பேசியவர்கள் ஓரம் கட்டப்பட்டனர். தவறான நபர்கள் தலைமையால் முன்னிறுத்தப்பட்டனர்.

இந்த தவறான சக்திகள், சரியான சக்திகள் முன்வைத்த கொள்கைகளை தங்களுடையதாக உரிமை கோரிக்கொண்டதுடன், தங்கள் பலவீனங்களையும், தவறுகளையும் மூடிமறைக்க பூசும் சாயங்களாகவும் அவற்றைப் பயன்படுத்திக் கொண்டன.

அவ்வாறான ஒரு நபர்தான் கிருபாகரன். இவர் போல் பலர் இருந்தனர். இருக்கின்றனர்.

**சுவீகரித்தனர்**

இன்னொரு சுவாரசியமான விடயத்தையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

தமிழக அரசியலின் கேடு கெட்ட பல பழக்க வழக்கங்களை நம் இயக்கங்களின் தலைவர்கள் சுவீகரித்துக் கொண்டனர்.

தமிழக அரசியல் கட்சிகள் சிலவற்றில்

ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈ.என்.டி.எல்.எஃப். இயக்கங்கள் வாபஸ் பெறும் போது, அவற்றின் உறுப்பினர்கள் மக்களுடன் நடந்து கொண்ட முறையும், அகப்பட்டதையெல்லாம் ஆளாளுக்கு சுருட்டிய வேகமும் அந்த மனநிலையை நன்கு வெளிப்படுத்தியது.

தம்மிடமுள்ள ஆயுதங்களை பத்திரமாக

எல்.எஃப். அமைப்புக்கு கொடுத்த ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

பெருமளவான ஆயுதங்கள் அவ்வாறு புலிகளால் கைப்பற்றப்பட்டன.

பிரேமதாசா புலிகளுக்கு கொடுத்த ஆயுதத்தைவிட, பயிற்சி காலத்தில் இந்தியா புலிகளுக்கு நேரடியாக கொடுத்த ஆயுதங்களைவிட, ஈ.பி.ஆர்.எல்.எஃப். புலிகளிடம் பறிகொடுத்த ஆயுதங்கள் பல மடங்கு.

இதனை புலிகள் கேலியாக "இந்தியா ஈ.பி.ஆர். எல்.எஃப். ஊடாக எங்களுக்கு ஆயுதம் தந்திருக்கிறது!" என்று கூறிக் கொண்டனர்.

**மன்னிப்புச்சபை அறிக்கை**

14.12.1989 அன்று சர்வதேச மன்னிப்புச் சபையின் இலண்டன் தலைமையகத்தால் அறிக்கை ஒன்று விடுக்கப்பட்டது.

இலங்கையில் வடக்கு-கிழக்கில் நீதி விசாரணையற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அந்த அறிக்கையில் கவலை தெரிவிக்கப்பட்டிருந்தது.

1989ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வல்வெட்டித்துறையில் இந்தியப்படை நடத்திய மனித வேட்டை பற்றி அந்த அறிக்கையில் விபரிக்கப்பட்டிருந்தது. அதனை இங்கு தருகிறேன்.

"1989 அகஸ்ட் 2ம் திகதி காலையில், வல்வெட்டித்துறை சந்தைப் பகுதியில் இந்தியப் படையின் 17வது சீக்கிய ரெஜிமெண்ட் பிரிவு ரோந்து சென்றுகொண்டிருந்தது.

அவர்கள்மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஆறு சிப்பாய்கள் பலியானதாகவும், பதினொருபேர் காயம் அடைந்தனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரு பகுதியினரதும் மோதல் சுமார் ஒரு மணி நேரம் நீடித்தது. விடுதலைப் புலிகளது முக்கிய ஆதரவுக் கிராமம் என்று வர்ணிக்கப்படும் வல்வெட்டித்துறையில் உள்ள பல வீடுகளும் வர்த்தக நிலையங்களும் அரைமணி நேரத்தில் அங்கு திரண்டுவந்த இந்தியப்படையினரால் தீக்கிரையாக்கப்பட்டன.

உள்ளூர் மக்கள் பலர் படுகொலை செய்யப்பட்டனர். அன்று பிற்பகல் இரண்டு மணிக்கும் மூன்று மணிக்கும் இடையே பலர் கொல்லப்பட்டனர்.

இந்தியப் படையினர் வல்வெட்டித்துறையைச் சுற்றிவளைத்து இரண்டரை நாட்கள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

இதனால் இங்கு காயம்டைந்த மக்களுக்கு வைத்திய வசதி வழங்கவும் எவராலும் முடியாது போனது.

இந்தியப் படையினரின் தாக்குதலில் பொதுமக்களில் எழுபதுபேர் கொல்லப்பட்டதாக விடுதலைப் புலிகள் அறிவித்திருந்தனர். இந்தியத் தரப்பினர் இதனை மறுத்தனர்.

முதலில் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் விடுத்த அறிக்கையில் ஆறு சிப்பாய்களும், ஒரு அதிகாரியும் இந்தியப் படையில் இறந்ததாகவும், ஒன்பது சிப்பாய்கள் காயமடைந்தனர் என்றும், புலிகளில் ஐந்து பேர் பலியானதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆகஸ்ட் மாதம் பதினொராம் திகதி தூதரகம் விடுத்த அறிக்கை, வல்வெட்டித்துறையில் இருபத்து நான்கு பொதுமக்கள் இறந்ததை ஒப்புக்கொண்டது. ஆயினும் இரு தரப்பு மோதலில் அகப்பட்டே அவர்கள் கொல்லப்பட்டனர் என்று தெரிவித்தது.

வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு அங்கு கொல்லப்பட்டவர்களில் 46 பேரின் பெயர் விபரங்களை வெளியிட்டுள்ளது.

இவர்களை இந்தியப் படையினர் திட்டமிட்டுக் கொலை செய்ததாகவும், மேலும் ஆறுபேரின் சடலங்களை இந்தியப் படையினர் எரித்துவிட்டதாகவும் பிரஜைகள் குழு குறிப்பிட்டிருந்தது.

இங்கு தப்பியவர்களின் தகவல்கள், நேரில் கண்டவர்களின் வாக்கு மூலங்கள், சுதந்திரமான பார்வையாளர்கள் சேகரித்த விபரங்கள் சர்வதேச மன்னிப்புச் சபைக்கு கிடைத்துள்ளது.

இத் தகவல்களின் பிரகாரம் இந்தியப் படையினர் தங்கள் சகாக்கள் கொல்லப்பட்டதற்கு, பழிவாங்கும் நடவடிக்கையாக, எதிர்க்கும் திராணியற்ற பொதுமக்களை வேண்டுமென்றே கொலை செய்தது தெரியவந்துள்ளது. என்று மன்னிப்புச் சபை குறிப்பிட்டிருந்தது.

மேலும் சில திடுக்கிடும் வாக்கு மூலங்களும் வெளியாகி இருந்தன.

(தொடர்ந்து வரும்)

## வல்வெட்டித்துறையில் வெறியாட்டம்

யாடினார்கள்.

அப்போது தமிழ்க்கட்சிகள் சிறீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கு வேண்டுகோள் விடுத்துக் கொண்டிருந்தன.

கூட்டணியின் செயலதிபர் அ.அமிர்தலிங்கம் கொல்லப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில், "சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் நல்ல சூழல் தோன்றுவதைக் குழப்பவேண்டாம். இலங்கை அரசும், புலிகளும் தற்போது பேச்சு நடத்த ஆரம்பித்துள்ளனர். இக் காலகட்டத்தில் தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்தாதீர்கள்" என்று சிறீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

ஆனாலும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் அரசு, புலிகள் பேச்சுக்கள் தொடர்பான சந்தேகங்களை கிளப்பிவிட்டதுடன், வடக்கு-கிழக்கு பிரிப்பு என்பதையும் விரைவுபடுத்துமாறு தூண்டிக் கொண்டிருந்தனர்.

இதனை முறியடிக்க பிரேமதாசாவும் இராஜதந்திர வியூகங்களை வகுக்கத் தொடங்கினார்.

**சர்வகட்சி மாநாடு**

"சகல கட்சிகளுடனும் பேசத் தயாராக இருக்கிறேன். நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த பொதுக் கருத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்த விரும்புகிறேன்" என்று அறிவித்தார்.

இன்று ஜனாதிபதி சந்திரிக்கா அரசியல் தீர்வுக்கு பொது இணக்கம் காணப்போவதாக கூறிக்கொண்டே காலத்தை இழுத்தடிக்கிறார் அல்லவா, இந்தத் தந்திரம் சாட்சாத் பிரேமதாசாவின் அடியொற்றிய தந்திரம்தான்.

சர்வகட்சி மாநாடு ஒன்றை கூட்டப் போவதாகவும் ஜனாதிபதி பிரேமதாசா கூறினார்.

'சர்வகட்சி மாநாடு' என்பது அருமையான இழுத்தடிப்பு இராஜதந்திரம். இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பதில் தனக்குள்ள கடப்பாட்டை ஏனைய கட்சிகள்மீது மெல்லச் சுமத்திவிடும் இராஜதந்திரம்.

பிரேமதாசாவின் அரசியல் சாணக்கியத்திற்கு பல உதாரணங்கள் கூறலாம். அதில் ஒன்றுதான் சர்வகட்சி மாநாடு.

பொதுஜன முன்னணி அரசாங்கம் தனது தீர்வுப் பொதிக்கு நாடெங்கும் இருந்து அபிப்பிராயம் கேட்டதல்லவா. இந்த இழுத்தடிப்பு நாடகம்கூட பிரேமதாசாவின் சர்வகட்சி மாநாட்டு தந்திரத்தை பின்பற்றி உருவாக்கப்பட்ட ஒன்றேயாகும்.

நாடு முழுவதும் உள்ள கட்சிகளது அபிப்பிராயம் கேட்பதற்காகவும், பொது இணக்கம் காண்பதற்காகவும் சர்வகட்சி மாநாடு என்பது பிரேமாவின் இழுத்தடிப்பு தந்திரம்.

நாட்டு மக்கள் அனைவரது அபிப்பிராயத்தையும் கேட்கப்போவதாக கூறியது ஜனாதிபதி சந்திரிக்காவின் இழுத்தடிப்பு தந்திரம்.

பிரேமதாசா பாய்ந்தது எட்டடி. சந்திரிக்கா அம்மையார் பாய்ந்தது பதினாறடி. ஆனாலும் வழிகாட்டி பிரேமதாசா தான் என்பதை மறப்பதற்கில்லை.

**புலிகள் சந்தேகம்**

பிரேமதாசாவின் அறிவிப்புக்கள் புலிகளுக்கு சந்தேகத்தை உருவாக்கின. ஆனாலும் இந்தியப் படை முற்றாக வெளியேறும்வரை பிணக்கை உருவாக்கப் புலிகள் விரும்பவில்லை.

1989 டிசம்பர் மாதமளவில் யாழ் குடாநாட்டில் இருந்து ஈ.பி.ஆர்.எல்.எஃப். உட்பட ஏனைய இயக்கங்கள் வாபஸ் பெறத் தொடங்கின.

வடக்கு-கிழக்கில் திருமலை தவிர்ந்த ஏனைய பகுதிகளில் இருந்து இந்தியப் படை வாபஸ் பெறப்பட்டுக் கொண்டிருந்தது.

"இந்தியப் படை வெளியேறினால் நாம் ஆயுதம் ஏந்திப் போராடுவோம்" என்று இலங்கை அரசை எச்சரித்த ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர் இந்தியப் படை வாபசாகத் தொடங்கியதும் மளமள வென்று மூட்டைகளைக் கட்டினர்.

இந்தியப்படை வாபசாகிச் செல்ல முன்னரே, ஈ.பி.ஆர்.எல்.எஃப்.




சண்டே டைம்சில் வெளியான காட்டுூண்

## பெண்வேட்டை நடத்திய பிரமுகர்

வளர்த்துவிட்ட பொறுப்பில் இருந்து பத்மநாபா போன்றோர் தப்ப முடியாது.

தலைவர்களின் நடைமுறைகளும் உறுப்பினர்களைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கிக் கொண்டிருக்கும்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைவர்களில் ஒருவராக இருந்தவர் கிருபாகரன். இவருக்கு பிடித்த பொழுது போக்குகள், நிதி சுருட்டுவது, பெண்களை சேகரிப்பது.

தனது பெண் தொடர்புகளை இயக்க நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்டதாக அவர் வைத்திருந்தால் அதனை தனிப்பட்ட விவகாரம் என்று விட்டுவிடலாம். அது பற்றி பேசுவதும் நாகரிகமல்ல.

ஆனால், தனது பலவீனங்களுக்கு இயக்க பொறுப்புக்களையும், இயக்கத்தின் வளங்களையும் பயன்படுத்தியதுடன், தனக்கு பிடித்தமான பெண்களின் எடுபிடிகளாக இயக்க உறுப்பினர்களை நடக்கவும் செய்தார் கிருபாகரன்.

இரவில் தினம் ஒரு வீட்டுக்கு விஜயம் செய்வார் கிருபாகரன். அவருடன் செல்லும் இயக்க உறுப்பினர்கள் ஆயுதங்களுடன் வெளியே காவலுக்கு இருப்பார்கள்.

மாகாண சபை வேலை வாய்ப்புக்கான பிரதியுபகாரமாகவும் தன் இச்சைகளுக்கு பெண்களை பணியவைத்தார் என்ற குற்றச்சாட்டுக்களும் உள்ளன.

கிருபாகரன் போன்றோர் பெண்களுக்கு வழங்கிய முன்னுரிமை என்பது பெண் விடுதலை சார்ந்த ஒன்றல்ல. ஏனெனில் பெண் விடுதலையை கொச்சைப்படுத்தி கேலி செய்யும் குணம் கொண்டவர்களாகவே இவர்கள் இருந்தனர்.

எனவே, இவர்கள் வழங்கிய முன்னுரிமை என்பது தங்கள் பலவீனங்களை நிறைவு செய்த பெண்களுக்கு வழங்கப்பட்ட தட்டிக்கொடுப்பாகவே இருந்தது.

அதனால்தான், பெண் விடுதலை பற்றிய ஆக்கபூர்வமான சிந்தனைகளை முதன் முதலில் வெளியிட்ட ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தால், இறுதிவரை பலமான பெண்கள் அமைப்பொன்றை கட்டியெழுப்ப முடியாமல் போனது.

**துக்க வரலாறு**

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்திற்கு ஒரு துக்ககரமான வரலாறு இருக்கிறது. சமூக விடுதலை, பெண் விடுதலை, பகுத்தறிவு போன்ற கொள்கைகளை அந்த இயக்கத்தில் முன்வைத்தவர்கள் இதயசுத்தியுடன்தான் முன்வைத்தனர். அதனால்தான் ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஆரம்பகாலத்தில் உத்வேகமாக



பிரேமதாசா

உள்ள மகளிர் அமைப்புக்கள் பெண் விடுதலைக்காக உருவாக்கப்பட்டவையல்ல.

தேர்தல் பிரசாரத்தில் வாக்குத் திரட்டவும், ஏனைய காலங்களில் தலைவர்களுக்கு படுக்கையறை துணையாகவும் பரிமாறப் படத்தக்க அமைப்புக்களே அவை.

முக்கிய தலைவருக்கு பிடித்தமான பெண்கள்தான் மகளிர் அணித் தலைவியாகவோ, இலக்கிய அணித் தலைவியாகவோ பதவி வழங்கி கௌரவிக்கப்படுவர்.

அதனால் கட்சியின் பணத்திலேயே தனக்கு பிடித்தமான பெண்ணுக்கு சலுகைகள், வசதிகள் என்பவற்றை தலைவர்கள் செய்து கொடுப்பார்கள்.

இதே பாணியைத்தான் இங்கும் நடைமுறைப்படுத்த முற்பட்டனரே தவிர, பெண் விடுதலை அமைப்புக்களை கட்டியெழுப்ப முற்படவில்லை.

இன்று விடுதலைப் புலிகளால் பெண்கள் அமைப்பை கட்டியெழுப்ப மட்டுமல்ல, போராட்டத்தின் பிரதான சக்தியாகவே மாற்றவும் முடிந்திருக்கிறது. ஆனால், புலிகளுக்கு முன்னரே பெண் விடுதலை பேசிய இயக்கங்களால் எதனையும் உருப்படியாக சாதிக்க முடியவில்லை.

தமிழக அரசியலின் கேடு கெட்ட பழக்க வழக்கங்களுடன் கூடிய தலைமைகளால் போர்க்குணமிக்க உறுப்பினர்களை தக்கவைக்க முடியவில்லை.

'கிடைக்கிற, சந்தர்ப்பத்தை விடுவானேன் நாமும் அனுபவிப்போம்' என்ற மனநிலையை தமது உறுப்பினர்களிடம் ஏற்படுத்திவிட்டனர்.

மறைத்துவைக்கக்கூட பலருக்கு அவகாசம் போதவில்லை.

இந்தியப் படையினர் தாம் வெளியேறும் போது பெட்டிபெட்டியாக ஆயுதங்களை வழங்கினார்கள்.

"அக் கட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈ.என்.டி.எல்.எஃப். போன்ற இயக்கங்களுக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் வடக்கு-கிழக்கை பூரண கட்டுப்பாட்டில் வைத்திருந்து தனி ஈழ இராச்சியம் நடத்த போதுமானது" என்று இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் பின்னர் கூறியிருந்தார்.

பெட்டி, பெட்டியாக புத்தம்புது ஆயுதங்கள், கிடைத்தன. அதற்கேற்ப ஆட்கள் எண்ணிக்கையும் இந்தியப் படையுடன் நின்ற இயக்கங்களிடம் இருந்தன.

ஆயுதங்கள் இருந்தன. ஆட்கள் இருந்தன. போதிய நிதி கோடி கோடியாக இருந்தது. மாகாண சபை இருந்தது. ஆனால் பிரதானமான மூன்று மட்டும் இருக்கவில்லை.

1) உறுதியான தலைமை. 2) கட்டுப்பாடு. 3) போர்க்குணம்.

எனவே, 1989 டிசம்பரில் திருமலை நோக்கி ஈ.பி.ஆர்.எல்.எஃப். அணிகள் போய்ச் சேர்ந்தன.

குறிப்பிட்ட சில பொறுப்பாளர்கள் மட்டும் ஆயுதங்களை பத்திரமாக புதைத்து வைத்துவிட்டுப் போனார்கள்.

**தோல்வி கண்ட அணுகுமுறை**

இயக்கத்திற்கு உறுப்பினர்களை சேர்க்க காட்டிய அக்கறையில் ஒரு வீதத்தைக்கூட அந்த உறுப்பினர்களை பாதுகாப்பதில் காட்டவில்லை என்பது மற்றொரு சோகம்.

சமூக விரோதிகளாக இருந்தால் என்ன, ஓடுகாலிகளாக இருந்தால் என்ன இயக்கத்தில் சேரவந்தால் உள்வாங்குவது பத்மநாபா பாணியாகும்.

எப்படியோ இயக்கத்தில் ஆள் இருந்தால் போதும். எப்படி இருக்கிறார்கள், என்ன செய்கிறார்கள் என்பது பற்றி பின்னர் கவலைப்படுவதே கிடையாது.

இந்த அணுகுமுறைக்கு கிடைத்த மகத்தான மரண அடிதான் இந்தியப்படை காலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புக்கு ஏற்பட்ட வீழ்ச்சியாகும்.

இந்தியப் படையினர் ஈ.பி.ஆர்.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்க் கட்சிகளின் சவாரி

## அலசுவது- இராஜதந்திரி

திருமலை மாவட்டம் கிண்ணியா உப்பாற்றில் இருந்த தமிழ்க் குடும்பங்கள் பொலிசாராலும் படையினராலும் வெளியேற்றப்பட்டனர்.

இராணுவ நடவடிக்கைக்கான ஏற்பாடாக இருக்கலாம் என்று பொதுமக்கள் தாமாக ஊகித்துக்கொண்டனரே தவிர, எவ்வித காரணமும் கூறாமலேயே அம் மக்கள் விரட்டப்பட்டனர்.

கடந்த வாரம் இப் பகுதியில், ஐ.தே.கட்சியின் ஆட்சிக் காலத்தில் மடுப் பகுதி மக்களை அங்கிருந்து அகற்றி, பாதுகாப்பான பகுதியில் தங்கவைத்துவிட்டு இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளப் போவதாக ரஞ்சன் விஜயரத்தின அறிவித்தது பற்றி குறிப்பிட்டிருந்தோம். தொண்டர் நிறுவனங்கள் மற்றும் தமிழ்க் கட்சிகளது எதிர்ப்பால் அம் முயற்சி கைவிடப்பட்டது என்றும் குறிப்பிட்டிருந்தோம்.

**ஐ.தே.கட்சி ஆட்சிக் காலத்தைவிட சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிக் காலங்களில் பாதுகாப்பு இறுக்கங்கள் கடுமையாக இருந்து வருவதை சுட்டிக்காட்டவே அதனை நினைவூட்டி இருந்தோம்.**

சென்றவார 'முரசு' வெளியான சூட்டோடு, கிண்ணியாவில் உப்பாறு பகுதியில் தமிழ்க் குடும்பங்கள் வெளியேற்றப்பட்ட செய்தி கிடைத்தது.

**தமிழ்க் கட்சிகள், அரசுக்கு ஆதரவு கொடுத்துவரும் தமிழ் எம்.பிகள் ஆகியோர் குரல் கொடுத்தும்கூட உடனடியாக அம்மக்களுக்கு நீதி பெற்றுக்கொடுக்க இயலவில்லை.**

ஐ.தே.கட்சி அரசாங்கமும் இனப்பிரச்சனைக்கு இராணுவத் தீர்வில் நாட்டம் கொண்டிருந்த அரசாங்கமேயாகும்.

ஆயினும், தமிழ்ப் பேசும் கட்சிகளதும், பாராளுமன்ற உறுப்பினர்களதும் கருத்துக்களை ஓரளவு கணக்கில் எடுத்துக் கொள்ளக்கூடிய தன்மை அப்போது காணப்பட்டது.

**அரசியல் தீர்வுக்கான அடிப்படை விடயங்களில் ஐ.தே.கட்சி அரசாங்கமும் பேரினவாத நிலைப்பாட்டிலேயே இருந்தது. ஆயினும் தமிழ்பேசும் மக்கள் எதிர்நோக்கிய அன்றாடப் பிரச்சனைகள் விடயத்தில் தமிழ்க் கட்சிகளது கோரிக்கைகளின் பிரகாரம் சில விட்டுக் கொடுப்புக்களுக்கு முன்வந்திருந்தது.**

அதனால், பாதுகாப்பு நெருக்கடிகளை ஓரளவேனும் தளர்த்த தமிழ்க் கட்சிகள் உதவ முடிந்தது.

கைதுகள் விடயத்தில்கூட தமிழ்க் கட்சிகளது சிபாரிசுகளை உடனுக்குடன் கவனிக்கின்ற தன்மை ஐ.தே.கட்சி ஆட்சிக்காலத்தில் நிலவியது.

ஜனாதிபதி பிரேமதாசா கொல்லப்பட்ட பின்னர்கூட கொழும்பில் தமிழ் மக்கள் மீதான கெடுபிடிகள் தற்போதுள்ளதுபோல தீவிரம் பெற்றிருக்கவில்லை.

**ஆனால், தற்போது அரசுக்கு ஆதரவான தமிழ்க் கட்சிகளது ஆதரவாளர்கள்கூட தடுப்புக் காவலில் தள்ளப்பட்டு வருகின்றனர். அரசுக்கு ஆதரவான தமிழ்க் கட்சிகளது சிபாரிசுகள்கூட சந்தேகக் கண்கொண்டே பார்க்கப்பட்டு வருகின்றன.**

பாஸ் கொடுபிடிகள், தடை முகாம்கள், போக்குவரத்துத் தடைகள், அன்றாடக் கைதுகள், துன்புறுத்தல்கள், சொந்தப் பகுதிகளைவிட்டு தமிழ் மக்களை விரட்டியடித்தல், விடுதிகளில் இருந்து துரத்தல் என்று அன்றாட அவலங்கள் நாளும் பொழுதும் அதிகரித்து வருகின்றன.

இவ்விவகாரங்களில் தலையிடவோ, கெடுபிடிகளை சற்றுக்கூட தளர்த்தச் செய்யவோ அரசுக்கு ஆதரவான தமிழ்க் கட்சிகளால் முடியாது உள்ளதையே காணமுடிகிறது.

கிழக்கு வாகனத் தடை தளர்வுகூட தமிழ் பேசும் கட்சிகளின் கோரிக்கைகளுக்காக செய்யப்பட்டதல்ல.

**தமிழ் முஸ்லிம் சமூகங்களை சேர்ந்த மக்கள் ஒன்றுபட்டு போராடுவதற்கான தளமாகவும், துவக்க முனையாகவும் அப்பிரச்சனை மாறிவிடும் என்று அரசுக்கு சுட்டிக்காட்டப்பட்டதன் காரணமாகவே தடை தளர்த்தப்பட்டது.**

அரசுக்கு முண்டுகொடுத்துவரும் தமிழ்க் கட்சிகளால் அரசியல் தீர்வு விடயத்தில் மட்டுமன்றி, அன்றாட அவலங்கள் தொடர்பாகக்கூட குறைந்த பட்ச பரிகாரத்தைக்கூட பெற்றுத்தர முடியாது என்பது தெள்ளத் தெளிவாக தெரிந்துள்ளது.

**வடக்கு-கிழக்கு பகுதிகளில் அபிவிருத்திக்கும், உள்ளூராட்சி சபைகளுக்கும் நிதி ஒதுக்கீடுகள் நடைபெறுவது தமிழ்க் கட்சிகளின் புத்திசாலித்தனத்தால் கிடைக்கின்ற அனுகூலங்களல்ல.**

இக் கட்சிகள் அரசுக்கு ஆதரவு கொடுக்காவிட்டாலும்கூட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கொண்டே இருக்கும்.

இன்று, வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்கு என்ற பெயரில் பெருமளவான நிதி உதவிகள் அரசுக்கு கிடைத்து வருகின்றன.

**யாழ் குடாநாட்டை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்களை தீட்டிக் கொடுத்து வெளிநாடுகளில் பாரிய உதவிகள் பெறும் வாய்ப்பும் அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது.**

வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்காக பெறப்படும் நிதி உதவிகள் அப்பகுதிகளுக்கு மட்டும்தான் பயன்படுத்தப்படும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் கிடையாது.

ஐ.தே.கட்சி ஆட்சிக் காலத்திலும் வடக்கு-கிழக்குக்காக பெறப்பட்ட நிதி உதவிகள் தென்னிலங்கையில்தான் பயன்பட்டன. போருக்கும் உபயோகமாகி வந்தன.

யாழ் குடாநாட்டில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை நடத்தி முடித்தது மூலம் அங்கு சிவில் நிர்வாகம் ஏற்பட்டுவிட்டதாகக் கூறி பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

**இத் திட்டங்கள் அனைத்தும் நடைமுறைக்கு வரும் என்று கூறுவதற்கில்லை. ஆனால் இத்திட்டங்களை சமர்ப்பித்து உதவி வழங்கும் நாடுகளிடமும், அரசுகளிடமும் பெருமளவு கடன் பெற்றுக்கொள்ளமுடியும்.**

அதன்பின்னர் குறிப்பிட்ட திட்டங்களை நிறைவேற்ற சில தடைகள் இருப்பதாகக் கூறிவிட்டு, அந்த நிதி உதவியை நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு பயன்படுத்தவும் முடியும்.

உதாரணமாக யாழ் குடாநாட்டில் விவசாய அபிவிருத்தி பற்றிய ஒரு திட்டத்தை தயாரித்துச் சமர்ப்பித்து பாரிய நிதி உதவியை வெளிநாடொன்றில் இருந்து அரசு பெற முடியும்.

ஆனால், யாழ் குடாநாட்டில் பெரும்பாலான விவசாயக் காணிகள் மக்கள் குடியேற அனுமதிக்கப்படாத பகுதிகளிலேயே அமைந்துள்ளன. அங்கிருந்து படையினர் வெளியேறினால்தான் அக் காணிகளில் விவசாய அபிவிருத்தி ஏற்படக் கூடியதாக இருக்கும்.

**எனவே, தற்போதைய சூழ்நிலையில் விவசாய அபிவிருத்திக்காக பெறப்படும் நிதி யாழ் குடாநாட்டில் பயன்படுத்தப்பட மாட்டாது. அதற்காக என்று பெறப்பட்ட நிதி உதவி வேறுபகுதிகளுக்கு திருப்பிவிடப்படலாம்.**

**இவ்வாறாக, 'சின்ன மீனைப்போட்டு பெரியமீனைப் பிடிக்கும்' தந்திரமாகவே**



**வடக்கு அபிவிருத்தி பற்றிய ஆட்சியாளர்களது கரிசனைப் போக்கு அமைந்துள்ளது.**

வடக்கு-கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்க ஒப்புக்கொள்வது, 'உள்ளூராட்சி சபைகளுக்கு நிதி ஒதுக்கீட்டை அள்ளித்தரத் தயார்' என்று வாக்குறுதி வழங்குவது போன்றவையும் மேற்கண்ட தந்திரத்தின் ஒரு பகுதியாகவே விளங்குகிறது.

எனவே, வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ் பேசும் கட்சிகள் அரசுக்கு ஆதரவாக கையுயர்த்திக் கொண்டிருப்பதால்தான் மேற்கண்ட நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்படுகின்றன என்று நினைப்பது மிகத் தவறான எண்ணமாகும்.

தமிழ்க் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களைவிட, சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வடக்கு-கிழக்கில் பெரும்பான்மையாக இருந்திருப்பார்களேயெனில் தற்போதுள்ளதைவிட கொஞ்சம் கூடுதலான நிதி ஒதுக்கீடுகள் நடைபெற்றிருக்கக்கூடும்.

எனவே, அரசுக்கு ஒத்துழைப்பதன் மூலமாக, யாரும் செய்ய முடியாத சாதனைகளை தாம் செய்து வருவதாகவோ, தமது விவேகத்தின் வெளிப்பாடுகள் என்றோ குறிப்பிட்டுச் சொல்லும்படியான எக் காரியத்தையும் தமிழ்க் கட்சிகள் இதுவரை சாதிக்கவில்லை என்பது புலனாகின்றது.

அதுமட்டுமல்லாமல் பாலம் போடுவது கோவில்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வைப்பது, பாடசாலைகளுக்கு தளபாடங்கள் வாங்குவது போன்றவை மட்டும்தான் அன்றாடப் பிரச்சனைகள் என்பது போல நாடாளுமன்ற கட்சிகளும் உள்ளூராட்சி சபை கட்சிகளும் சித்தரிக்க முற்படுகின்றன.

**இவையாவும் அன்றாடப் பிரச்சனைகள்தான் ஆனால் தமிழ் மக்கள் உயிர் வாழ்வதற்கான உத்தரவாதம் இன்மையும், இரண்டாம் தரப் பிரஜைகளாக நடத்தப்படும் பாதுகாப்புக் கெடுபிடிகளுமே முக்கிய அன்றாட பிரச்சனைகளாகும்.**

## நிவாரணம் கேட்கும் தொண்டு நிறுவனங்களா? நியாயம் கேட்கும் அரசியல் கட்சிகளா?

பாலம் போடவும், பாடசாலை கட்டவும் குரல் கொடுப்பதற்கும், அரசுடன் பேசுவதற்கும் அரசியல் கட்சிகள் தேவையில்லை. சமூகத் தொண்டு நிறுவனங்களே போதுமானவையாகும்.

**மக்கள் கௌரவமாக வாழவும், மக்களின் அரசியல், ஜனநாயக உரிமைகளை பாதுகாக்கவும், அந்த உரிமைகள் மறுக்கப்படும் போது அவற்றை போராடிப் பெறுவதுமே அரசியல் கட்சிகளின் தலையாய கடமையாகும்.**

நிவாரணம் பெற்றுக்கொடுப்பதை மட்டுமே பணியாக கொண்டவையை தொண்டு நிறுவனங்கள் என்றழைக்கலாம். நியாயம் கிடைக்கப் போராடுவனவே அரசியல் கட்சிகள் என்றழைக்கப்படுகின்றன.

**நிவாரணங்களை பெற்றுக்கொடுப்பதை தங்கள் சாதனைகளாகக் கூறிக்கொண்டும், தமிழ் மக்களுக்கு நியாயங்கள் மறுக்கப்படும்போது, அரசுக்கு மனுப்போட்டுவிட்டு, அதனை பத்திரிகைகளுக்கு செய்தியாக வழங்கிக் கொண்டும் சொகுசாக கட்சி நடத்தும் புதிய முறை ஒன்றை தமிழ்க் கட்சிகள் கண்டுபிடித்துள்ளன.**

அரசுக்கும், புலிகளுக்கும் இடையிலான போர் தொடர்வதால் மட்டுமே மேற்கண்ட பாத்திரத்தை தமிழ்க் கட்சிகளால் வகிக்க முடிகிறது.

இல்லையெனில், இக் கட்சிகளின் கணக்கை முடித்துவிட்டு, தங்கள் நேரடி முகவர்களை ஆட்சியாளர்கள் நியமித்துக் கொள்வர்.

**ஆக, ஐ.தே.கட்சி ஆட்சியாளர்களுக்கு தமிழ்க் கட்சிகள் பயன்பட்டதைவிட, பல மடங்கு அதிகமாக இன்றைய ஆட்சியாளர்களுக்கு பயன்பட்டு வருகின்றன.**

அதேசமயம், ஐ.தே.கட்சி ஆட்சியாளர்கள் தமிழ்க் கட்சிகளுக்கு காட்டிய கொஞ்ச நஞ்ச மரியாதைகூட இன்றைய ஆட்சியில் தமிழ்க் கட்சிகளுக்கு இல்லாமல் போயுள்ளது என்பதையும் நன்கு கவனிக்ககூடியதாகவுள்ளது.

**மக்களின் முன்பாக நின்று வழிநடத்திச் செல்வதே கட்சி என்ற சொல்லுக்கு பொருத்தமானதாகும்.**

ஆனால், யாழில் காணாமல் போனோர் விவகாரமாகட்டும், கிழக்கு மாகாண வாகனத் தடையாகட்டும் மக்கள் முன்னால் நிற்க, இக்கட்சிகள் மக்களின் முதுகுகளுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டன.

**அதேசமயம், பரிகாரங்கள் கிடைக்கும் என்று தெரிந்தால், அதற்கு காரணம் தாங்களே என்று உரிமை பாராட்டவும், மக்கள் தாமாக நடத்திய போராட்டங்களை இரண்டாம் பட்சமாக்கவும் இக் கட்சிகள் தயங்கியதும் இல்லை.**

மக்களின் முதுகுகளில் தமிழ்க் கட்சிகள் சவாரி செய்வது மிக அப்பட்டமாகத் தெரிகிறது. ஆனால் மக்கள் எப்போதும் முதுகுகளைக் காட்டிக் கொண்டிருக்க மாட்டார்கள் என்பதையே வரலாறு நமக்கு உணர்த்தி நிற்கிறது.

'யாருக்கும் துரோகம் செய்யலாம், யாரை வேண்டுமானாலும் ஏமாற்றலாம். இதெல்லாம்தான் அரசியல்' என்ற மிகத் தப்பான எண்ணத்தை தமிழ்க் கட்சிகள் கொண்டுள்ளன என்று தெரிகிறது. இந்த எண்ணப்பாடு இருபுறமும் கூர்கொண்ட கத்தி போன்றது என்பதை இக் கட்சிகள் உணரவேண்டிய தருணம் வராமல் போகாது.

---

## சந்திக்கு வராத சங்கதிகள் — நக்கீரன்

# இந்தியாவின் புதிய பாதுகாப்பு அமைச்சர் சுவாமியின் கொக்கரிப்பு

இந்தியாவின் புதிய பாதுகாப்பு அமைச்சராக ஜோர்ஜ் பெர்னாண்ட்டஸ் நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கை அரசுக்கு வயிற்றில் புளியைக் கரைக்கிற சமாச்சாரம் இது.

பாரதிய ஜனதா பதவிக்கு வரக்கூடாது என்பதுதான் இலங்கை அரசின் வேண்டுதலாக இருந்திருக்கும்.

சோனியா வந்திருந்தால் சோக்காக இருந்திருக்கும். கைகோர்த்து நின்று காரியம் பார்த்திருக்கலாம். புலிகள்மீது அவருக்கு வெறுப்பிருக்கும். ஆகவே, புலிகளுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் என்ன செய்தாலும், எதைச் செய்தாலும் கண்டுகொள்ள மாட்டார்.

என்ன செய்வது, இந்தியப் பொதுஜனத்துக்கு சோனியாவைவிட, பாரதிய ஜனதாவைப் பிடித்திருக்கிறதே!

ஜோர்ஜ் பெர்னாண்டஸ் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டதை சுப்பிரமணியம் சுவாமி என்பவர் எதிர்த்திருக்கிறார்.

சுப்பிரமணியம் சுவாமியை 'அரசியல் கோமாளி' என்றும் அழைப்பார்கள். ஜெயலலிதா புண்ணியத்தில் எம்.பியாகிவிட்டு தர்ம நியாயம் பேசிக்கொண்டிருக்கிறார்.

சுப்பிரமணியம் சுவாமிக்கும் ஈழப்போராளிகளுக்கும் இடையிலான தொடர்பு பற்றிய முன்கதைச் சுருக்கம் ஒன்று சொல்கிறேன்.

அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.யின் கையாள் என்று இவர் கருதப்பட்டார். அதனால் ஆரம்பத்தில் 'ரெலோ' தவிர்ந்த இயக்கங்கள் இவரை நெருங்கியதில்லை.

அதிரடி அறிக்கைகள், ஆட்சிகளைக் கவிழ்க்கும் காலக்கெடுக்கள் மூலம் செய்திகளில் இடம் பிடிப்பதுதான் பொழுதுபோக்கு.

நம்நாட்டு தமிழ்க் கட்சிகளை இவருக்கு நிகராக கூறினால் அது மிகையல்ல.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தையும் இவர் ஏற்கவில்லை. ராஜீவுடன் ஏற்பட்ட தனிப்பட்ட பிரச்சனைகளால்தான் அவரால் செய்யப்பட்ட ஒப்பந்தத்தை ஏற்பது சுவாமிக்கு கௌரவப் பிரச்சனையாகியது. விஷயம் அதுதான்.

ரெலோவின் தலைவராக இருந்து, பின்னர் புலிகளால் கொல்லப்பட்ட சிறீசபாரத்தினத்தின் சகோதரர் ஸ்ரீகாந்தா என்பவரும் தன்னுடன் சில 'பொடியளை' வைத்துக் கொண்டு 'நானே ரெலோ' என்று கூவிக்கொண்டிருந்தார்.

அவரைப் பிடித்து இலங்கை, இந்திய ஒப்பந்தத்துக்கு எதிராக சென்னையில் ஒரு ஊர்வலம் நடத்தினார் சுவாமி. ஐம்பதுபேர்கூட கலந்து கொள்ளவில்லை. சுவாமிக்கு அத்தனை மரியாதை!

அமெரிக்காவின் சி.ஐ.ஏ.தூண்டிவிட்டதால் தான் ஒப்பந்தத்தை எதிர்க்கிறார் என்று கருதப்பட்டது.

இவர் ஒப்பந்தத்தை எதிர்த்தும்கூட புலிகள் இவரை அண்டியதில்லை. இந்த மாதிரியான ஆட்களுக்கு புலிகள் பட்டுக் குஞ்சம் கட்டுவதில்லை, தப்பான ஆசாமிகளை தலையில் தூக்கி வைப்பதில்லை என்பதுதான் பிரபாகரனது தனித்துவங்களில் ஒன்று. புலிகள் பலமாக இருக்கவும் அதுவும் ஒரு காரணம் எனலாம்.

அதுதான் புலிகள்மீது சுவாமிக்கு பலே கோபம். தன்னை ஒரு பெரிய ஆள் என்று கனம் பண்ணுவதில்லை என்று புகைச்சல்.

இந்தியாவின் இராணுவ இரகசியங்களையே வெளிநாடுகளுக்கு விற்றுவிடக்கூடிய சந்திரா சுவாமி போன்றோருக்கு 'சல்யூட்' அடிப்பவர் இந்த சுப்பிரமணியம் சுவாமி. இவர் இந்திய பாதுகாப்பு பற்றிப் பேசுவது நல்ல தமாஷ்.

சுப்பிரமணியம் சுவாமி இப்போது துள்ளுவதற்கு காரணம் புலிகள்மீதான எதிர்ப்பு மட்டுமல்ல. தனக்கு மந்திரிப் பதவி கிடைக்கவில்லையே, பாரதிய ஜனதா தன்னை புறங்கையால் அலட்சியப்படுத்திவிட்டதே என்பதுதான் பிரதான காரணம்.

ஆனால், சுவாமியின் புகைச்சலும், எரிச்சலும் இலங்கை அரசின் காதில் தேன் வார்த்திருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனாலும் சுவாமி நினைப்பது நடப்பதில்லை. ஏனெனில் நடக்கக் கூடியவற்றை அவர் நினைப்பதில்லை.

ஜோர்ஜ் பெர்னான்ட்டஸ் பல வருடமாக சற்றும் தளராமல் விடுதலைப் புலிகளை ஆதரித்து வருபவர். ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுப் பயணம் செய்து தமிழர் அமைப்புக்கள் நடத்திய கூட்டங்களில் கலந்து கொண்டு ஈழத் தமிழருக்கு ஆதரவாக குரல் கொடுத்தவர்.

இந்தியப் படையை இலங்கைக்கு அனுப்பியதை கண்டித்தது, கிட்டு வந்த கப்பலை இந்தியா வழிமறித்ததைக் கண்டித்தது, புலிகளை இந்தியா தடை செய்ததைக் கண்டித்தது போன்ற பல நடவடிக்கைகளில் முன்னின்றவர். முன்னரும் ஜனதா தள அரசில் மத்திய அமைச்சராக இருந்தவர்.



ஜோர்ச் பெர்னான்ட்டஸ்

இலங்கைத் தமிழருக்காக நடத்தப்பட்ட ஆதரவுக் கூட்டம் ஒன்றுக்கு தடைவிதிக்கப்பட்ட போது, தடையை மீறி தன் வீட்டிலேயே கூட்டம் நடத்தி பரபரப்பு ஏற்படுத்தியவரும் ஜோர்ஜ் பெர்னாண்ட்டஸ்தான்.

நேர்மையான மனிதர். சந்தர்ப்பவாதியல்ல. ஆனாலும், இந்திய அரசின் வெளியுறவுக் கொள்கை ஒரே இரவில் மாறக்கூடியதல்ல. ஜோர்ஜ் பெர்னாண்டசுக்கு சொந்தக் கருத்து எதுவாக இருந்தாலும், அமைச்சர் என்ற வகையில் அரசின் கருத்துகளுக்கு மாறாக பகிரங்கத்தில் பட்டவர்த்தனமாக பேசமாட்டார்.

அதன் அர்த்தம் அவர் தனது முன்னைய கொள்கைக்கு மாறாக நடப்பார் என்பதல்ல. இலங்கை உட்பட வெளிநாடுகளது விவகாரம் வெளியுறவு அமைச்சால்தான் கையாளப்படும்.

ஆனால், இலங்கையில் அமெரிக்க தலையீடு இந்தியாவின் பாதுகாப்போடு சம்பந்தப்பட்ட விடயம் என்பதால் பாதுகாப்பு அமைச்சும் அதில் கவனம் செலுத்தும்.

தேவைப்பட்டால் அணுக்குண்டு செய்யவும் தயங்கோம் என்றுள்ளார் இந்தியப் பிரதமர். அது தவிர பாகிஸ்தானோடு இலங்கை சமீபத்தில் மேலும் நெருக்கமான விடயம் பாரதிய ஜனதா அரசுக்கு இனிப்பான செய்தியல்ல.

எனவே, வெளிப்படையாக தெரியாவிட்டாலும், மனக் கசப்புக்களை இராஜதந்திர வார்த்தை ஜாலங்கள் மூடிமறைத்தாலும், இலங்கை விவகாரத்தில் முன்பிருந்த அரசுகளை விட பாரதிய ஜனாதாவின் கொள்கை தமிழ் பேசும் மக்களுக்கு சாதகமாகத்தான் இருக்கும்.

இதனை உணர்ந்துதான் பாதிக்கப்பட்ட இந்துக் கோயில்களுக்கு இலங்கை அரசு உடனடியாக நிதி ஒதுக்கியது. இல்லாவிட்டால் இத்தனை நாள் இல்லாத அக்கறை திடீரென்று வருவானேன், நிதி தருவானேன்?

இந்தியப் பாதுகாப்பில் புதிய அரசு அதிக கரிசனம் கொள்ளும் என்பதன் அடையாளமே அக்கூற்று.

இங்கு போரால் பாதிக்கப்பட்ட இந்துக் கோயில்கள் பற்றிய விபரங்களை விலாவாரியாகத் திரட்டி பாரதிய ஜனதா அரசுக்கு அனுப்பி வைக்க ஒரு அமைப்பு தீவிர கவனம் செலுத்திக் கொண்டிருப்பதாகவும் கேள்வி.



படிப்பகம்

www.padippakam.com

## புதிய உண்மைத் தொடர்

## அதிர் இடி 1

# இடி அமீன்

ஆறு அடி நான்கு அங்குலம் உயரமான அந்த மனிதன் தன் எதிரியை புரட்டி எடுத்துக் கொண்டிருந்தான்.

அவன் விட்ட ஒவ்வொரு குத்திலும் அவனுடன் மோதியவன் திக்கித் திணறிக் கொண்டிருந்தான்.

**"என்ன பையா, போட்டியை இத்தோடு முடித்துக் கொள்ளலாமா? ஓடிவிடு. உன்னை உதைக்க மாட்டேன்" என்று கூறிவிட்டு கடகடவென்று சிரித்தான்.**

அவன் குரல் இரும்புச் சட்டங்கள் உராய்வது போலிருந்தது. அவன் தோற்றம் கறுப்பு நிறத்தோடு கூடிய பயங்கரமாக, உருண்டு திரண்டு காட்சியளித்தது.

எதிர்த்துச் சண்டையிட்டவனுக்கு தன் தோல்வி உறுதி என்பது மிக நிச்சயமாக, மிக மிக நிச்சயமாக தெரிந்திருந்தது.

பார்வையாளர்கள் 'கொல்' என நகைத்தனர். அதனால் தோற்றாலும் பரவாயில்லை புறமுதுகு காட்டி ஓடுவதில்லை என்று தீர்மானித்தான்.

மறுபடி குத்துச் சண்டை ஆரம்பமானது.

**"நீ நல்லபடி சொன்னால் கேட்கமாட்டாய். இந்தா தொலைந்து போ!"** என்றபடி அந்த கரிய மனிதன் மாறி மாறிவிட்ட அதிரடி குத்துக்களால் அவனுடன் மோதியவன் மேடையின் மையமாக மல்லாந்து சரிந்தான்.

மல்லாந்து விழுந்தவனின் கால் ஒன்றை சட்டென்று மடக்கி, தடியை உடைப்பதுபோல அவன் முறித்த முறிப்பில், அரங்கமே பயத்தில் உறைந்து போனது.

அவனது ஆதரவாளர்கள் மட்டும் அவனது செயலை பாராட்டும் விதமாக கோஷமிட்டார்கள். ஆரவாரித்தார்கள்.

**"இடி அமீனுக்கு ஜே"**

பெயருக்கு ஏற்ப இடியாகத்தான் சிரித்தான்.

குத்துச் சண்டை விதிமுறைப்படி அமீன் செய்த தவறை சுட்டிக்காட்ட அவனை நெருங்கிய நடுவர் அடுத்த நொடியே அவனால் குண்டுக் கட்டாகத் தூக்கப்பட்டு பார்வையாளர்களை நோக்கி வீசி எறியப்பட்டார்.

பார்வையாளர்களில் பயத்தில் உறைந்திருந்தவர்கள் போக, மீதிப்பேர் அமீனின் அதிரடி வன்முறையை மெய் மறந்து இரசித்தனர்.

அவர்களுக்குள் பெண்களும் இருந்தனர். அமீனின் பார்வை அதற்குள் ஊட்டமாக, தள தளவென்று இருந்த பெண்ணின்மீது அம்பாகப் பாய்ந்து துளைத்து நின்றது.

தன் உதவியாளர்களின் ஒருத்தனை அழைத்தான்.

அந்தப் பெண்ணை தன் சுட்டு விரலால் காட்டி **"அவள் வேண்டும். இன்று எனக்கு விருந்தாக!"** என்றான் கண்டிப்பான குரலில்.

அவனது தனியறையில் அந்தப் பெண் வந்து நின்றாள். **"உன்னைச் சாப்பிடப் போகிறேன்"** என்றான். அவள் பயந்துபோனாள்.

சட்டென்று எழுந்து பேய்த்தனமாக கட்டியணைத்தான்.

"நான் விரும்பித்தான் வந்திருக்கிறேன். ஏன் இந்த முரட்டுத்தனம். எப்படி வேண்டுமானாலும் உனக்கு ஒத்துழைக்கக் காத்திருக்கிறேன்" என்றாள் அந்தப் பெண்.

இடி அமீன் அவளைக் கன்னத்தில் அறைந்தான்.

**"எனக்கு யார் புத்தி சொன்னாலும் பிடிக்காது. நான் சொல்வதைத்தான் நீ கேட்க வேண்டும்."** என்றான்.

பின்னர் மூச்சை இழுத்துவிட்டுக் கொண்டே உறுதியான குரலில் சொன்னான்:

**"நீ என்ன, இந்த நாடே நான் சொல்வதைத்தான் ஒருநாள் கேட்கப் போகிறது!"**

இடியென்று அவன் சிரித்த சிரிப்பில், அந்தப் பெண் அடங்கிப் போனாள்.

அவள் ஆடைகளை ஒவ்வொன்றாக, ஓவியம் ஒன்றின் திரையை விலக்கும் இரசனையுடன், மிக நிதானமாக களையத் தொடங்கினான் இடி அமீன்.

**

இடி அமீனின் கதைக்குள் மேலும் செல்ல முன்னர், உகண்டா பற்றிய ஒரு சுருக்கமான விளக்கம்:

மத்திய ஆபிரிக்காவில் சுமார் இரண்டு இலட்சம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டது உகண்டா.

உகண்டாவின் மக்கள் தொகை ஒரு கோடி 80 இலட்சம்.

உகண்டாவின் வடக்கே இருப்பது சூடான். மேற்கே ஸயர். தெற்கே றுவாண்டா, தான்ஸானியா. கிழக்கே கென்யா ஆகிய நாடுகள் உள்ளன.

உலகில் மிக நீளமான நைல்நதி உகண்டாவில்தான் உற்பத்தியாகிறது. உகண்டாவில் மலைகளும் உள்ளன. மழையும் அடிக்கடி பெய்யும். சுருக்கமாகச் சொன்னால் நீர் வளமும், நிலவளமும் கூடிக் குலவும் நாடு.

உகண்டா என்ற பெயர் எப்படி வந்தது? கண்டா என்னும் இனமக்கள் பெரும்பான்மையாக இருப்பதாலும், புகண்டா என்ற இராச்சியத்தை உள்ளடக்கியதாலும் உகண்டா



என்று பெயர் வந்தது.

இலங்கைத் தீவில் யாழ்ப்பாணம், வன்னி, கண்டி என்றெல்லாம் ஒருகாலத்தில் இராச்சியங்கள் இருந்தது போல, உகண்டாவிலும் புகண்டா, புனியோரா, அங்கோல் மற்றும் ரோஹோறா என்று நான்கு இராச்சியங்கள் இருந்தன.

அந்த நான்கு இராச்சியங்களும் ஒன்றிணைந்த நாடுதான் உகண்டா.

புகண்டா அரசில் மக்கள் தொகை அதிகம். அங்கு செல்வ வளமும் தாராளம். நான்கு இராச்சியத்துக்கும் நான்கு மன்னர்கள் இருந்தாலும் புகண்டா மன்னர்தான் மன்னர்களுக்கு மன்னர்.

இவை தவிர, பசிகா, பசிசு, புகேடி, பலேகா ஆகிய பூர்வீகக் குடிகளும் உள்ளனர். ஒவ்வொரு குடிக்கும் ஒரு மொழி இருக்கிறது.

பூர்வீக வழிபாட்டு முறைகளும், கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாம் மதங்களும் பரவி உள்ளன.

ஆங்கிலமே உத்தியோக மொழி. ஆனாலும் பூர்வீகக் குடிகளின் மொழிகளும்



பிரதேச மொழிகளாக ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளன.

உகண்டாவின் வனப்பைக் கண்டு அதனை கட்டியாண்டு சுரண்ட பிரிட்டிஷ்காரர்கள், ஃபிரான்சுக்காரர்கள், ஜெர்மனியர்கள் ஆகியோர் கண்வைத்தனர்.

இறுதியில் உகண்டாவை பிடித்து வளைத்துப் போட்டுக் கொண்டவர்கள் பிரிட்டிஷ்காரர்கள்தான்.

வர்த்தகத்துக்காக உகண்டாவில் குடியேறிய முஸ்லிம்கள் அங்கேயே தங்கினார்கள்.

உகண்டா வானொலியில் 24 மொழிகளில் செய்தி வாசிக்கப்படுவது சிறப்பான விஷயம்.

பிரிட்டிஷ் பிரதமர் வின்சன்ட் சேர்ச்சில் உகண்டாவை 'ஆபிரிக்காவின் முத்து' என்று வர்ணித்தார்.

உகண்டாவில் உள்ள ஆண்கள் அநேகமானோர் ஒரு மனைவியுடன் நிறுத்திக் கொள்ளமாட்டார்கள். இரண்டு மனைவிகள் வேண்டும்.

இதில் ஒரு விஷயம் யாதெனில், முதல் மனைவிதான் இன்னொரு திருமணம் செய்யுமாறு கணவனைத் தூண்டுவாராம். அந்தளவுக்கு கணவனின் தொல்லைகளை சமாளிக்க முடியாத நெருக்கடி போலிருக்கிறது.

ஒரு பெண்ணை மணம் புரிவது என்றால் 100 மாடுகளை பெண்ணின் பெற்றோருக்கு கொடுத்தால் போதும். உடனே பெண் தயார்.

மாடுகளை வாங்கி வரிசையாக கட்டிவிட்டு, தங்கள் பெண்ணை கொடுத்து விடுகிறார்கள்.

அடிக்கடி இனமோதல்கள் இங்கு நடக்கும். அந்த இனமோதல்களை பயன் படுத்தி ஆட்சி நடத்தத்தான் நான்கு இராச்சியங்களையும் ஒன்றாக்கி வைத்தனர் பிரிட்டிஷ்காரர்.

தனித்தனியாக இருப்பதைவிட ஒன்றாக இருந்தால்தான் சண்டை சச்சரவுகள் அதிகமாகும் என்பது பிரித்தாளும் சூழ்ச்சியின் ஒரு அம்சம்.

1962ம் ஆண்டு உகண்டாவுக்கு பிரிட்டிஷ்காரர்கள் சுதந்திரம் கொடுத்தனர். அதற்கு ஆறுமாதத்திற்கு முன்னரே அங்கு பொதுத் தேர்தல் நடைபெற்றது.

'உகண்டா மக்கள் காங்கிரஸ்' பாராளுமன்றத்தில் அதிக இடங்களைக் கைப்பற்றியது.

அக் கட்சியின் தலைவர் மில்டன் ஒபொடே முதல் பிரதமராக பதவி ஏற்றார்.

புகண்டா மன்னர் கபாகா ஜனாதிபதியானார்.

பிரதமருக்கும், ஜனாதிபதிக்கும் இடையே ஆரம்பத்தில் உறவு நல்லவிதமாகத்தான் இருந்தது.

பின்னர் பதவி ஆசை, அதிகாரப் போட்டி என்ற நச்சுச் சூழலுக்குள் அந்த உறவு காணாமல் போகத் தொடங்கியது.

இந்த பகையின் பின்னணியில்தான் இடி அமீனின் வளர்ச்சி ஆரம்பமானது.

□□□

உகண்டாவில் ஸயர் எல்லையை ஒட்டி வாழ்ந்த 'ககாவா' இனத்தைச் சேர்ந்தவன்தான் இடி அமீன்

அதிபாரக் குத்துச் சண்டை வீரன். சாகசம் செய்வதில் அலாதிப் பிரியம் கொண்டவன்.

அழகான பெண்கள் என்றால் பேயாக அலைவான். தன் படுக்கைக்கு கொண்டு வரும்வரை தூங்கவே மாட்டான்.

**"நான் சொல்வதை ஒரு நாள் இந்த நாடே கேட்கப்போகிறது"** என்று சும்மா ஒரு பேச்சுக்காகத்தான் சொன்னான்.

பெண்களிடம் எப்போதும் ஜம்பம் அடித்துப் பேசுவதுதான் அவனது வழக்கம். பெண்கள் தன் முன்னால் அடங்கிப் போவதை தன் மூர்க்கத்தின் முன் திணறித் துடிப்பதை காண்பதில் அவனுக்கு தனி இன்பம்.

அதனால் பேச்சிலும் ஜம்பமடித்து மிரட்டுவான். அப்படித்தான் அந்த வார்த்தையையும் முதலில் கூறினான்.

ஆனால், எப்போதும் இல்லாதபடிக்கு அந்த வார்த்தைகள் அவனுக்கே திரும்பத் திரும்ப கேட்ட வண்ணம் இருந்தன.

**"நான் சொல்வதை இந்த நாடே ஒரு நாள் கேட்கப்போகிறது"**

**நான் சொல்வதை இந்த நாடே ஒருநாள் கேட்கப்போகிறது."**

**"நான் சொல்வதை இந்த நாடே ஒருநாள்...."**

சட்டென்று தலையை உதறிக்கொண்டு, அவளிடம் இருந்தும் தன்னை உதறிக் கொண்டு எழுந்து விட்டான் இடி அமீன்.

இடை நடுவே எழுந்தவனை தடுத்தாள் அவள். கோபமாக அறைபட்டாள்.

**"போடி எழுந்து"** என்றான். தன் உடைகளை அணிந்து கொண்டு அந்த அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தான்.

**தருவது ரசிகன்**

'ஏன் முடியாது. நினைத்தால் முடியாதது என்ன இருக்கிறது? முடியும்! நான் இந்த நாட்டின் தலைவனாக முடியும்!'

மேசையில் ஓங்கிக் குத்தினான் அமீன்.

அந்த பழைய மேசை பொசுக்கென்று உடைந்ததில், சிராம்பு ஒன்று அமீனின் கையைக் கிழித்து இரத்தம் கசிந்தது.

கசிந்த இரத்தத்தை பார்த்து அமீன் தன் வழக்கமான பாணியில் சிரித்தான்.

**"இரத்தம் சிந்தாமல் வெற்றியில்லை."** உரத்துக் கூறிக்கொண்டான்.

கண்ணாடி முன்னால் நின்று தன் உருவத்தைப் பார்த்தான்.

அவன் உருவப் பொலிவும், முகத் தோற்றமும் அவனுக்கே பிடித்திருந்தது.

**தன்னைத்தானே காதலித்தான்.** தன்னைத்தானே பெருமையாக நினைத்தபடி கண்ணாடி முன் நின்று மூன்று தடவைகள் கூறிப்பார்த்தான்.

**'உகண்டா ஜனாதிபதி**
**இடி அமீன்.**
**உகண்டா ஜனாதிபதி**
**இடி அமீன்**
**உகண்டா ஜனாதிபதி**
**இடி அமீன்!'**

இப்போது சிரித்தான். உகண்டா மக்களின் நிம்மதியை பறிக்கப்போகும் முன்னறிவிப்புத்தான் அந்தச் சிரிப்பு என்று அறிந்து காலமும் சிரித்தது.

(தொடர்ந்து வரும்)


# சரத்துடன் உறவு முறிந்தது

## நக்மா பரபரப்பு பேட்டி

சரத்குமார்-நக்மா காதல் விவகாரம் சினிவிசிட்டில் பல முறை இடம்பெற்றது. காதலாவது, கத்தரிக்காயாவது? என்று இருவரும் மறுத்துக் கொண்டிருந்தனர். முதல் முறையாக நக்மா மறைமுகமாக ஒப்புக் கொண்டு 'விகடனுக்கு' பேட்டியளித்துள்ளார். பேட்டியில் இருந்து:

**கே: தமிழில் உங்களைப் பார்க்கவே முடியவில்லையே?**

நக்: இதுக்கு ஒரு பின்னணி இருக்கு.



நீங்க புரிஞ்சுக்கணும். கிளாமர் ரோல்ஸ் நான் நிறையப் பண்ணியாச்சு. கொஞ்சம் குணசித்திர பாத்திரங்களில் கவனம் செலுத்த ஆரம்பித்தேன். அதுக்குள்ளே சரத்தோடு என்னை இணைத்து கிசுகிசுக்கள் வந்தது....

**கே: அதுதான் நக்மா... நிறைய நியூஸ் வந்தது. அதுபற்றி உங்கள் கருத்து என்ன?**

நக்: எனக்கு சரத் பிடிக்கும். 'ரகசிய பொலிஸ்' படத்தில் ஆரம்பித்து மூணு படம் தொடர்ந்து பண்ணினோம். அப்போது எங்களுக்குள்ள ஒரு சின்ன நட்புறவு வளர்ந்ததை நான் மறுக்க மாட்டேன். அப்போ சரத் மார்க்கெட் கொஞ்சம் டல்லா இருந்த நேரம். மனசு உடைஞ்சு போயிருந்தவருக்கு என் நட்பு ஆறுதலா இருந்தது. எங்களிடையே நெருக்கம் வளர்ந்தது. நாங்கள் இரண்டு பேருமே அதனை இரசிக்க ஆரம்பித்தோம்.

**கே: முக்கியமாக நடிகைகள் பெரும்பாலும் இரண்டாவது திருமணத்தில் மாட்டிக் கொளகிறார்கள். சாவித்திரியில் இருந்து ஸ்ரீதேவி வரை நிறைய உதாரணங்கள் சொலலலாம், இது ஏன்?**

நக்: ஒரு பொண்ணு தன் வாழ்க்கையை இன்னொரு பெண்ணுடன் பங்குபோடுவது கொடுமையான விஷயம்.

சினிமாவில் நிலை வேறு. லைஃப்ல இது மாதிரி மாட்டிக் கொள்ளும்போது வாழ்க்கை பற்றிப் பயம் வரும். நம்மை அழித்து விடுவார்களோ என்ற கவலையில் தூக்கம் வராது நிம்மதி பறிபோய்விடும். அப்போது ஆறுதலாக யாராவது நின்றால் சட்டுனு சரணடராகத்தான் தோன்றும்.

**கே: காதல் பற்றி உங்கள் கருத்து என்ன?**

நக்: ஒரு உறவில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் நிறைய வித்தியாசங்கள் உண்டு.

ஆண்கள் அவசரமானவர்கள். நிலாவைக் கொண்டுவரட்டுமா? நட்சத்திரம் பறிச்சுத் தரட்டுமா? என்று பொயட்டிக் அண்ட் இடியாடிக் சென்ஸோட கவரப் பார்ப்பாங்க. அப்போ பெண்கள் அமைதியாக இருப்பாங்க. அது அவனை அனுமதிக்கிற வரைக்கும்தான். ஒன்ஸ் காதல் வந்த பிறகு பெண்கள் ஒரேயடியா இளகிடுவாங்க. ஆனால், ஆண்கள்தான் மாறிடறாங்க.

**கே: தேர்தலில் சரத்குமார் போட்டி போட்டபோது அவருக்கு ஆதரவாக பிரசாரம் செய்யப்போகவில்லையே, ஏன்?**

நக்: ஸாரி. தேர்தலில் அவர் தோற்று நிக்கிற இந்த நேரத்திலே நான் ஏதாவது சொல்லி அவரை வேதனைப்படுத்த வேணாம் என்று நினைக்கிறேன். பொதுவாக எனக்கு அரசியலில் ஆர்வம் கிடையாது. அவர் அரசியலில் இறங்கி தேர்தலில் போட்டி போட்டு ஜெயிக்கணும் என்று ஆசைப்படும் ரகம்.

**கே: உங்கள் திட்டம் என்ன?**

நக்: .... சரத்துக்கும் எனக்கும் சண்டை எதுவு இல்லை. பெரிசா பிரச்சனை வரல்லை. தப்பிச்சு ஓடணும் என்று தோன்றவில்லை. ஆனால் இது சரிவராது என்றுபட்டது. காரணம், சரத்துடைய மைண்ட் செட் வேறு.

நான் வீட்டுப் பறவை. அதனால் அந்த உறவு ஒரு ஷேப் எடுக்க முன்னரே முடிஞ்சு போச்சு. இதைச் சொல்ல கஷ்டமா இருக்கு. ஆனால் உண்மையை ஒப்புக் கொள்ளணும். இட்ஸ் ஓவர்.

ஆறு மாதமாக இதை யோசித்துத்தான் பேசுகிறேன். இனிமேல் நான் புதுசாக வாழ்க்கையை ஆரம்பிக்கணும். ஆனால், நான் இப்போது மிக சுதந்திரமாக உணர்கிறேன். எனக்கு இது முக்கியம்.

## தூங்காத நகரம்

சோவியத் யூனியன் அமெரிக்காவின் சதியால் பல துண்டுகளாக உடைந்தது. அதன்பின்னர் அங்குள்ள நாடுகள் பல கடும் சீரழிவுக்கு உள்ளாகியுள்ளன.



மொஸ்கோ நகரில் இரவு கேளிக்கை விடுதிகள் பெருகிவருகின்றன. சூதாட்ட விடுதிகளும் பெருகிவிட்டன.

மொஸ்கோவில் நிரோத் மெஷின் என்று ஒன்றை அறிமுகப்படுத்தப் போகின்றனர். இந்த மெஷினில் பணம் போட்டால் ஆணுறைகள் கிடைக்குமாம்.

இந்தளவுக்கு ரசியாவின் தலைநகர் கெட்டுப்போயுள்ளது. ஆனால் ரசிய அதிபர் யெல்ட்சின் மாதத்தில் பாதிநாள் படுக்கையில் கிடக்கிறார். கடும் நோய் அவரைப்பிடித்தாட்டுகிறது. அப்படி இருந்தும் பதவி ஆசையால் நாற்காலியை கெட்டியாகப் பிடித்திருக்கிறார்.

மொஸ்கோவை முன்னர் ஒருகாலத்தில் புரட்சியாளர்களது புனித மண் என்று அழைப்பர்.

இப்போது 'தூங்காத நகரம்' என்று செல்லப் பெயருடன் காதல் களியாட்டமையமாகிவிட்டது.

## இனிமேல் தனியாக



அமெரிக்க இராணுவத்தில் உள்ள பெண்களை ஆண் அதிகாரிகள் இம்சைப்படுத்துவது பற்றி ஏகப்பட்ட புகார்கள்.

அமெரிக்க ஜனாதிபதி பில்கிளின்ரனே அங்கே இங்கே தாவும்போது படை அதிகாரிகள் மட்டும் நல்ல பிள்ளைகளாக இருப்பார்களா?

பாலியல் இம்சையில் இருந்து பெண்களை பாதுகாப்பதற்காக புதிய சட்டம் வந்துள்ளது. இனிமேல் அமெரிக்க இராணுவத்தில் பயிற்சி பெறும் பெண்கள் தனியான குடியிருப்புக்களில் தங்க வேண்டும்.

தனிக் குடியிருப்புக்களுக்கும் ஆண் இராணுவத்தினர் தாவிவிடாமல் இருப்பதற்காக தீவிர கண்காணிப்புச் செலுத்தப்படுமாம்.

## போலிச் சாமியார்

தமிழ்நாட்டில் மாயவன் என்றொரு போலிச் சாமியார் மாட்டிக் கொண்டிருக்கிறார்.

பெண்களை பக்தைகளாக்கி மயக்கிப்போட்டு, ஆபாசப் படம் எடுப்பதுதான் இந்தச் சாமியாரின் ஸ்டைல்.

ஆபாச வீடியோ பட ஆதாரங்களுடன் இவரைப் பொலிசார் மடக்கிப் பிடித்திருக்கிறார்கள்.



பிரேமானந்தா

போலிச்சாமி பிரேமானந்தா போன்று மாயவனும் பெண் பக்தர்கள் குளிப்பதை பார்த்து ரசிப்பவனாம். இப்போது கம்பி எண்ணிக் கொண்டிருக்கிறான்.

இதற்கிடையே யாழ்ப்பாணத்தில் சுன்னாகத்தில் பிரேமானந்தா பெயரில் ஒரு ஆசிரமம் இருப்பதாக 'முரசு' முன்னரே செய்தி வெளியிட்டிருந்தது. இங்கும் இளம் பெண்கள் சென்று வருவதாகத் தகவல். விழிப்பாக இருப்பது நல்லது.

இந்த ஆசிரமம் தொடர்பாகவும் பல்வேறு தகவல்கள் வெளியாகி வருகின்றன. ஜாக்கிரதை!



படிப்பகம்

www.padippakam.com



## மெழுகுச் ஷேன்

↑ உலகில் இன்றைய தலைச் சிறந்த சுழற்பந்து வீச்சாளர் சந்தேகமேயில்லாமல் ஷேன் வோர்ன்!

டெண்டுல்கர் போன்ற துடுப்பாட்ட வீரர்கள் சில சமயங்களில் இவரது பந்துகளை பிளந்துகட்டிவிட்டாலும்கூட, பெரும்பாலான துடுப்பாட்ட வீரர்களுக்கு பிரதான வில்லன் இவர்தான். பல போட்டிகளின் தலை விதியைத் தீர்மானிக்கும் கதாநாயகனாகவும் இருந்துள்ளார்.

அவுஸ்திரேலியாவிலும் இவருக்கு பயங்கர மரியாதை. இளம் ரசிகைகளிடம் மாட்டிக்கொண்டால் தொலைந்தார்.

படத்தில் இரண்டு ஷேன் வோர்ன்கள். தந்திரம்போலத் தெரியலாம். ஆனால் இரண்டில் ஒன்று தத்ருபமாக செய்யப்பட்ட மெழுகுப் பொம்மை. அதன் அருகில் நின்று ஷேன் வோர்ன் போஸ் கொடுத்திருக்கிறார். உயிருள்ள ஷேன் வோர்ன் யார்? கண்டுபிடித்துக் கொள்ளுங்கள். அவுஸ்திரேலியாவில் உள்ள கிரிக்கெற்றேர்ஸ் ஒவ் ஸ்ராஃப் கஃபேயில் இந்த மெழுகுப் பொம்மை இருக்கிறது. மெல்லியதாக இருப்பதுதான் பொம்மை ஷேன் வோர்ன்.




## விளையும் வீரம்

↑ ஈராக் அதிபர் சதாம் உசேன் பற்றி அமெரிக்கப் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் இல்லாத பொல்லாத பயங்கரக் கதைகளையெல்லாம் கட்டிவிட்டுக் கொண்டிருக்கின்றன. ஏற்கனவே ஸ்ராலின், பிடல் காஸ்ட்ரோ, சேகுவேரா போன்ற பல தலைவர்களைப் பற்றியும் அமெரிக்காவில் பொய்க் கதைகள் உலாவந்தன.

ஆனால், ஈராக் மக்கள் சதாம்மீது கொண்டுள்ள பற்று அக் கதைகளை கந்தலாகக் கிழித்துப் போட்டு விடுகிறது. ஈராக் மக்கள் ஆண்கள், பெண்கள், முதியவர்கள், சிறுவர்கள் என்ற பேதம் இல்லாமல் சதாம் பின்னால் அணிவகுத்து நிற்கிறார்கள்.

படத்தில் பாருங்கள், முதியவர் ஒருவர் ஆயுதப் பயிற்சி பெறுகிறார். அமெரிக்கா இன்று பதுங்கலாம். நாளை பாயலாம், அதனை நம்பமுடியாது, நாம் தயாராக இருக்க வேண்டும் என்று ஆயுதப் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர் ஈராக் மக்கள். சதாம் தலைமையில் ஈராக்கில் விளைவது வீரம். அமெரிக்காவுக்கு மூக்கின்மேல் கோபம் வருவதும் அதனால்தான்.



## அபூர்வ குழந்தைகள்

↑ பிறந்ததுமே பிரபலமாகிவிட்ட குழந்தை இது. தலை இரண்டு, கைகள் மூன்றுடன் பிறந்துள்ளது.

தமிழ்நாட்டில் சேலம் மாவட்டத்தில் உள்ள ஓமலூர் அரச மருத்துவமனையில் இந்த அதிசயக் குழந்தை பிறந்தது. செய்தி பரவியதும் ஏராளமான மக்கள் ஏதோ கண்காட்சி பார்ப்பதுபோல மருத்துவமனைக்கு படையெடுத்தனர்.

சங்கரம்மாள் என்னும் நெசவுத் தொழிலாளியான பெண்ணுக்கே இந்த அபூர்வ குழந்தை பிறந்துள்ளது. வயிற்றில் உள்ள குழந்தையை 'ஸ்கேன்' செய்து பார்க்கும் நவீன மருந்துவ வசதிகள் வந்துவிட்டன. ஆனாலும் வசதி குறைந்தவர்களுக்கு இன்னும் அவை எட்டாக் கனிகள் தானே! அதனால் பிறந்த பின்னர்தான் குழந்தையின் குறைபாட்டை அறிய முடிந்திருக்கிறது.

அபூர்வ குழந்தையைப் பார்க்க கூட்டம் கூடினாலும், பெற்றவள் மட்டும் வாட்டத்துடன் தான்!

## ரூ இன் வன்



↑ ரூ இன் வன் என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே அதன்படி ஒன்றுக்குள் இரண்டு சமாச்சாரம் அடங்கியதுதான் இந்த வாகனம்.

புதிதாக சந்தைக்கு வந்து, வாடிக்கையாளர்களது சிந்தையைக் கவர முயல்கிறது. அதுதான் சூப்பர் அழகிகளை வைத்து செலுத்தி காண்பிக்கிறார்கள். மோட்டார் சைக்கிள் போல் ஓட்டலாம், பின்னால் கார் போன்ற வசதி உள்ளது. முன்னால் இருவர் அமரலாம். பின்னால் உள்ள காரில் மூவர் தாராளமாக பாடிப்பாடி அமர்ந்திருக்கலாம்.

ஆனால், இந்த வாகனம் நல்ல வாளிப்பான சாலைகளில்தான் ஓடும். குண்டும், குழியுமான நம்நாட்டு சாலைகள் போன்றவற்றில் ஓடுவதற்கு ஒத்துழைக்காது. நம்நாட்டில் பல சாலை நிலவரங்களுக்கு மாட்டு வண்டி கூடத்தான் ஒத்துழைக்காது என்கிறீர்களா? டபிள் ஓ.கே! (படஉதவி அருளானந்தன்)

**தகவல் பெட்டி**



## சூப்பர் பூசணி

→ உலக மகா பூசணி. அணைத்து தூக்க இரண்டு கைகள் போதாது. கைக்கும் அடங்காத, கண்ணுக்கும் அடங்காத இந்த பூசணியின் எடை 150 கிலோ. ஐக்கிய அரபு குடியரசை சேர்ந்த இந்த விவசாயி நாலரை மாதங்களாக கடும் உழைப்பால் உருவாக்கிய சூப்பர் பூசணி இது. உழைப்பின் பயனை நினைத்தபடி, சூப்பர் பூசணியை அணைத்தபடி கொடுக்கிறார் பாருங்கள் ஒரு போஸ்.



## நாய் ஆடை

பூச்சூடி, பொட்டிட்டு, சட்டைமாட்டி அழகு பார்ப்பது குழந்தைகளுக்கு மட்டும்தானா? இப்போது அந்த இடத்தை செல்லப் பிராணிகளுக்கும் பகிர்ந்து கொடுக்க ஆரம்பித்துவிட்டனர்.

படத்தில் பாருங்கள் சிறுமியின் செல்ல நாய் ஆடை கட்டிக் கொண்டு வருகிறது. ரசியாவின் சென்ற் பீட்டர்ஸ் பேர்க் நகரில் நடைபெற்ற நாய் ஆடை கண்காட்சியில் முதலிடம் பெற்ற ஆடை இதுதான்!

பாஷன் ஷோவில் அழகர்களும், அழகிகளும் மட்டும்தான் தோன்ற வேண்டும் என்று சட்டமா என்ன?!



படிப்பகம்

www.padippakam.com

# மினி சினி

* சி. சுந்தர் இயக்கத்தில் பார்த்திபன் 'அனாமிகா' என்ற படத்தில் கதாநாயகனாக நடிக்க இருந்தார். 'அனாமிகா' படத்தில் தனது பாத்திரத்திற்கு அதிக வாய்ப்பில்லாததால் தற்போது அதில் நடிக்க மறுத்து விட்டார்.

* வெங்கடேசுடன் மீனா தெலுங்கில் நடித்த 'சூர்யவம்சம்' வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, 'கில்லி கஜாலு' என்ற புதிய தெலுங்குப் படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். இப்படத்தில் தெலுங்கு நடிகர் ஸ்ரீகாந்த் மீனாவுக்கு ஜோடியாக நடிக்கிறார்.

* 'அவதாரம்', 'தேவதை' ஆகிய படங்களை இயக்கிய நாஸரிடம் தற்போது 4 கதைகள் தயார் நிலையில் உள்ளன. வரும் ஆகஸ்ட் மாதத்திற்குப் பின்னர் 4 கதைகளில் ஒன்றை இயக்க முடிவெடுத்துள்ளார்.

* 'இந்தியா குடே' படத்தில் கைதி வேடத்தில் நடிக்கும் மம்முட்டிக்கு ஜோடியாக நடிக்கிறார் புதுமுகம் தாரா. சி.பி.ஐ. அதிகாரியாக நடிக்கும் சாய்குமாருக்கு மகேஸ்வரி ஜோடியாக நடிக்கிறார்.

* எம்.எஸ்.வி. முரளி தயாரிக்கும் 'ஸ்மைல் ப்ளீஸ்' படத்தில் கதாநாயகனாக நடித்துவரும் பிரகாஷ்ராஜ், அப்படத்தின் சென்னை நகர விநியோக உரிமையை ஊதியமாகப் பெற்றுள்ளார்.

* 'தினந்தோறும்' படத்தில் முரளியின் தங்கையாக நடித்திருக்கும் புதுமுகம் யார் தெரியுமா? தீபா வெங்கட். 'பிரேமி', 'ரகுவம்சம்' போன்ற தொலைக் காட்சித் தொடர்களில் நடித்திருக்கிறார்.

* இளையராஜாவின் சொந்தப்படத்தை இயக்கப்போவது மு. களஞ்சியம் என்பது தெரிந்த செய்தி. அப்படத்திற்கு 'சங்கீதத் திருநாள்' என்று பெயரிடப்பட்டிருக்கிறது என்பது புதிய செய்தி.

* விஜயகாந்த் நடிக்கும் புதிய படமொன்றை இயக்கும் வாய்ப்பு இளவரசனுக்குக் கிட்டியுள்ளது. ஏற்கனவே இளவரசன் 'தாய்மொழி', 'ரகசிய பொலிஸ்' ஆகிய படங்களை இயக்கியுள்ளார்.

* 'விடுகதை' படத்தைத் தொடர்ந்து கரணுக்கு ஜோடியாக 'கண்ணாத்தாள்' என்ற ஒரேயொரு படத்தில் கதாநாயகியாக நடித்துவரும் நீனா, கம்பியூட்டர் கற்று வருகிறார்.

* அப்பாஸ் கதாநாயகனாக நடிக்கும் 'உனக்காக மட்டும்' படத்தை இயக்கித் தயாரிக்கவுள்ள சின்னி ஜெயந்த், இப்போது மலையாளப்படமொன்றை சொந்தமாக வாங்கித் தமிழில் மொழிமாற்றி வருகிறார்.

## மனிஷாபோல் இருப்பாளா?

ரெலிஃபோன் மணிபோல் சிரிப்பவள் இவளா? என்றொரு பாடல் 'இந்தியன்' படத்தில் இடம்பெற்றிருந்தது.

'நினைத்தேன் வந்தாய்' படத்தில் அதே சாயலில் ஆரம்பிக்கிறது இன்னொரு பாடல்:

"மனிஷா, மனிஷா
இருப்பாளா?
மாதுரி டிக்ஷித்போல்
சிரிப்பாளா?..."

என்று தொடர்கிறது. பாடலை எழுதியவர் பழனிபாரதி. இசை: தேவா. விஜய், ரம்பா, தேவயாணி ஆகியோர் நடித்துவரும் படம். இயக்கம்: கே. செல்வபாரதி.

## கராத்தே ஹீரா

நடிகை ஹீராவும் அஜித்குமாரும் நிரந்தரமாகக் கழன்றுகொண்டுவிட்டனர். இப்போது ஹீரா கராத்தே பயின்று வருகிறார்.

'சுந்தர பாண்டியன் படத்தில் கார்த்திக்குடன் பிசினாக ஒட்டிக்கொண்டு நடிக்கிறார். அவர் கராத்தே பயிலும் தகவல் அறிந்து எல்லோரும் சற்றுத் தள்ளியே நிற்கிறார்களாம்.

கராத்தே பயில்வது ஏன்? "இந்த ஆம்பளைங்களை நம்பவே முடியாது. நான் வித்தியாசமான பெண். வெளிநாடெல்லாம் போவேன். என்னிடம் வாலாட்டுகிறவர்களுக்கு பாடம் புகட்டத்தான் கராத்தே" என்கிறார் ஹீரா.

## புத்தாண்டு போட்டி

சித்திரைப் புத்தாண்டுக்கு வெளியாகப் போட்டி போடும் படங்கள்: 'ஜீன்ஸ்', 'காதலா காதலா', 'இனியவளே', 'திருவிழா'.

'ஜீன்ஸ்', 'காதலா காதலா' இரண்டும் தைப்பொங்கலுக்கு வெளியாக இருந்து தள்ளிப்போன படங்கள்.

'பொன்மனம்' படம் நல்ல கதையிருந்தும், நல்ல நடிப்பிருந்தும்கூட எதிர்பார்க்கப்பட்டளவு ஓடவில்லை. அதனால் 'இனியவளே' படத்தின் வரவை எதிர்பார்க்கிறார் பிரபு.



பிரசாந்த்-ஐஸ்வர்யா ராய்
படம்: ஜீன்ஸ்

## திரையுலக மறுபக்கம் 48
## பழிதீர்த்துக் சகோதரி கொ…

சகோதர நடிகைகளில் இளையவர் அவர். கண்ணன்மீது பிரே… பாத்திரத்தின் பெயரை தன் பெயராக கொண்டவர்.

இன்றைய ஏழு முன்னணி நாயகர்களில் ஒருவரான 'கார்' நடிகருடன்… யாக அறிமுகமானார். மண்வாசனை இயக்குநர்தான் அந்த நடிகையை… படுத்தினார்.

நடிகையின் அக்கா நடிகையுடன் இயக்குநருக்கு நெருக்கம் இரு… நடிகை முன்னணி கதாநாயகியாக கொடி கட்டிப் பறந்தபடி, ப… நாயகர்களுடன் ஒட்டியும் இருந்தவர்.

அக்கா நடிகைக்காக தங்கைக்… கொடுத்தார் இயக்குநர். மேக்-அப் … பதற்காக அழைத்தவருக்கு இன்ப அ… மிக அழகாக இருந்ததுதான் … அதிர்ச்சிக்கு காரணம்.

எப்படியெல்லாம் நடந்… வேண்டும், இயக்குநரின் அணுகு… இருக்கும் என்றெல்லாம் த… வகுப்பு நடத்தித்தான் அனுப்… தார் அக்கா நடிகை.

அதனால் இயக்குநா… தன்மேல் பட்டபோதெல்… கொள்ளாததுபோல இரு… அந்த தைரியத்தி… அதிக சுதந்திரம் எடுத்… தொடங்கிவிட்டார். … கூச்சத்தால் நெளி… ருந்தார். ஆனா… சொன்ன புத்தி… உறுத்தியதால்… கொண்டார்.

இயக்குந… செல்லச் … கையை க… தும் கட்ட… விட்டார்… கட்டி… கொ…



"கண்ணுக்குள்ளே வந்து
கலகம் செய்வதும் எதுக்காக? மெள்ளக்
காதுக்குள்ளே உந்தன்
கருத்தைச் சொல்லிவிடு முடிவாக!"

…என்கிறார்கள். எப்… கதிகலங்கப்போகிற… சௌந்தர்யா… 'அருணாச்சலம்' படத்… கூட சரியான வாய்ப்… கிடைக்கவில்லை. 'கா… வெளியான பின்னரா… ஏற்படுமா?

## "உலகம் பிறந்தது எனக்காக"

அஜித்குமார் மன ஆறுதலுக்காக வெளிநாட்டுப் பயணம் சென்றுவிட்டு வந்தாராம். தோல்விகளைக் கண்டு கலங்காமல் இருப்பதாகக் காட்டிக் கொள்ள பார்க்கிறார்.

கே: வரிசையாக உங்கள் படங்கள் தோல்வியடைவது ஏன்?

அ: இந்தக் கேள்வியை என்னிடம் மட்டும் கேளாதீர்கள். ஒரு படத்தின் வெற்றி தோல்விக்கு ஹீரோ மட்டும் காரணமல்ல.

கே: உங்கள் மார்க்கெட் மறுபடி வீழ்ச்சி கண்டுள்ளதாக கூறுகிறார்களே?

அ: இடையிலே சிறு தொய்வு ஏற்பட்டிருப்பது உண்மைதான். அடுத்தடுத்த படங்கள் வந்தபின்னர் ஓஹோ என்று புகழப்போகிறீர்கள்.

கே: வெளிநாட்டுப் பயணம் எப்படி இருந்தது?

அ: உலகம் பிறந்தது எனக்காக ஓடும் நதிகளும் எனக்காக என்று சுதந்திரமாக யார் தொல்லையும் இல்லாமல் சுற்றித்திரிந்தது சந்தோசம். அப்படியிருந்தும் சிலர் அடையாளம் கண்டு அன்புகாட்டி திக்குமுக்காடச் செய்துவிட்டார்கள்.

கே: உங்கள் பெண் நண்பர்கள் பற்றி.......

அ: அந்தரங்கமான கேள்விகளுக்கு பதில் சொல்லி பட்டதுபோதும். இனிமேலும் கையை சுட்டுக்கொள்ள வேண்டாம் என்று பார்க்கிறேன்.



பாக்யராஜ்
படம்: வேட்டிய மடிச்சுக்கட்டு

பிரபுதேவாவை வைத்துப் படம் எடுக்க முன்வந்தார் இயக்குநர் அதியமான். பிரபுதேவா கேட்ட சம்பளத்தால் அதிர்ந்துபோனார் இயக்குநர். "உங்கள் சம்பளப் பணத்தில் ஒரு படமே எடுத்து முடித்துவிடுவேன்" என்றாராம் "முடியுங்களேன்" என்றுவிட்டு போய்விட்டாராம் பிரபுதேவா.

## காதோடு சொல்லுகிறோம்

'அம்பிக' நடிகை சின்னத்திரை புகழ் நடிகர் ஒருவருடன் அடிக்கடி காணப்படுகிறார். இருவரும் கடுமையான நட்புக் கொண்டுள்ளதாக கூறப்படுகிறது. முன்னாள் நண்பர்களான ஹீரோக்கள் தன்னைக் கவனிப்பதில்லை என்பதால் சின்னத்திரை நடிகருடன் தொற்றிக்கொண்டார் நடிகை.

'கனக' நடிகைக்கு திருமண ஆசை வந்துவிட்டது. இந்தப் பிழைப்பு போதும். குழந்தை, குட்டிகளுடன் பொழுதைப் போக்கலாம் என்று நினைக்கிறார். தாய்க்குலமான 'தேவி' தடைக்கல்லாக நிற்கிறார். மகளை பெரிய நடிகையாக்கி காட்டிவிட்டுத்தான் ஓய்வேன் என்று சபதம் செய்திருக்கிறார் முன்னாள் நடிகையான தாய்க்குலத்தின் சபதம் நிறைவேறுவது எப்போது? 'கனக' நடிகையின் ஆசை நிறைவேறுவதுதான் எப்போது?

'பூ' நடிகை பற்றிய பல உண்மைச் செய்திகளை சுந்தர இயக்குநரின் குடும்பத்தினர் அறிந்துள்ளனராம். அதனால் நடிகையை விட்டு ஓரம்போ என்று இயக்குநருக்கு ஆலோசனை கூறுகிறார்களாம். இதனை அறிந்த 'பூ' நடிகை குண்டுவெடித்த பிரதேசம் போன்ற அதிர்ச்சியில் இருக்கிறாராம்.

கையளவு மனசுள்ள 'கீத' நடிகை, மாவீரன் பெயர் கொண்ட நடிகருடன் திசைகளைக் குறிக்கும் பெயர் கொண்ட படத்தில் நடித்தார். அதனால் ஒருவருக்கொருவர் அக்கறைப்படுமளவுக்கு பழக்கம் ஏற்பட்டது. நடிகையின் சிபாரிசால் கன்னடப்படம் ஒன்றில் நடிக்க சான்ஸ் வாங்கியிருக்கிறார் நடிகர்.

குட்டிக்கதை சொல்லி பிரசாரம் செய்தும் தனது கட்சி தோல்வி கண்டதால் கடும் அதிர்ச்சியில் இருக்கிறார் ரமில் 'ரா' நடிகை. 'தமிழ்நாட்டு மக்களையே நம்பமுடியவில்லை.' என்று புலம்புகிறார். சொல்லாமல் கொள்ளாமல் சில கோடிகளை சுருட்டிக்கொண்டு ஓடிய வெளிநாட்டுக் கணவரை அழைத்துவர விரைவில் அமெரிக்கா செல்லவுள்ளாராம்.

'சிம்ம' நடிகையை புரூனே மன்னர் அழைத்திருக்கிறாராம். அப்படி இருந்தும் சூப்பர் ஸ்டாருடன் ஜோடி சேருவதற்காக புரூனே பயணத்தை ஒத்திவைத்துவிட்டுக் காத்திருக்கிறாராம். இது நடிகையின் பந்தாக் கதை. மேக்-அப் இல்லாமல் இந்த நடிகையை கண்டால் புரூனே சுல்தான் மயங்கிவிழுந்துவிடுவார் என்கிறது கோடம்பாக்க வட்டாரம்.

மூன்றெழுத்து இளம் நடிகரின் கொடி பறக்கிறது. பிடி அவரை என்று துரத்துகிறார்கள் நடிகைகள். அவரது முன்னாள் காதலியான 'சங்க' நடிகையும் மறுபடி அணுகினாராம். ஃபோனில் பேசவே மறுத்து விட்டார் நடிகர்.

## ஜீன்ஸ் ரெடி

'பூவுக்குள் ஒளிந்திருக்கும்
கனிக்கூட்டம் அதிசயம்
வண்ணத்துப் பூச்சி
ஒவியங்கள் அதிசயம்.
துளை செல்லும் காற்று
மெல்லிசையாதல் அதிசயம்
குருநாதர் இல்லாத
குயில்பாட்டு அதிசயம்'

வைரமுத்துவின் பாடல் ஏ.ஆர். ரகுமான் இசையில் ஒலிக்க, பிரசாந்த், ஐஸ்வர்யா இணைந்து தூள் கிளப்பும் படம் ஜீன்ஸ்.

உலக அதிசயங்களை படம்பிடித்து, உலக அழகியான ஐஸ்வர்யாவை பிரசாந்த் கொஞ்சி மகிழவைத்து பிரமாண்டமாக படம் எடுத்துள்ளார் இயக்குநர் ஷங்கர்.

இந்தா அந்தா என்று தள்ளிக்கொண்டே போன ஜீன்ஸ் விரைவில் வரப்போகிறது.

'ஜென்டில்மேன்', 'காதலன், 'இந்தியன்' நாலாவதாக 'ஜீன்ஸ்'. இந்தப் படமும் ஹிட்டானால் ஷங்கர் காட்டில் மழை கொட்டோ கொட்டென்று கொட்டும்.

## மாணவி நாயகி

'பந்தா' என்ற பெயரில் புதிய படம் ஒன்று தயாராகிறது. கதாநாயகன் புதுமுகம். பெயர்; சந்தோஷ். கல்லூரி மாணவர். கதாநாயகியின் பெயர் டயானா. ஒன்பதாம் வகுப்பு படிக்கும் மாணவி.

இயக்கம்: இந்திரஜித். இசை: எஸ்.ஏ.ராஜ்குமார். கே.எஸ். ரவிக்குமார், ஆர். சுந்தர்ராஜன், வடிவுக் கரசி, பாண்டு குமரிமுத்து ஆகியோரும் நடிக்கின்றனர்.

## அஜித்-தேவயாணி

'காதல் கோட்டை' பட வெற்றி ஜோடி அஜித்குமார்-தேவயாணி இவர்களில் தேவயாணி இப்போது நம்பர் வன் இடத்தை பிடித்துக்கொண்டிருக்கிறார். அஜித்குமாரின் நிலை பரிதாபமாக இருக்கிறது.

'காதல் கோட்டை' இயக்குநர் அகத்தியன் தனது புதிய படம் ஒன்றில் மீண்டும் இந்த ஜோடியை நடிக்க வைக்கப்போகிறார். 'காதல் கோட்டை' போன்ற வெற்றிப்படம் ஒன்றை அதே ஜோடியை வைத்து எடுத்துக் காட்டப்போகிறாராம்.

அகத்தியன் கேட்டதும் அஜித்குமாரும், தேவயாணியும் மிக்க மகிழ்ச்சியுடன் சம்மதித்துள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com

# ...கொண்டார் நடிகை
## ...டுத்த ஆலோசனை

கொண்ட
ன் நேரடி
அறிமுகப்
.. அக்கா
முன்னணி
வாய்ப்புக்
..டு பார்ப்
..சி. தங்கை
..க்குநரின்
கொள்ள
..றை எப்படி
தங்கைக்கு
வைத்திருந்
கைகள்
..ம் கண்டு
..ார் தங்கை.
இயக்குநர்
கொள்ளத்
..டிகையோ
கொண்டி
.. அக்கா
.. மனதில்
சகித்துக்
.. நேரம்
..ல்ல நடி
..லில் வீழ்த்
..த நெருங்கி
..திடீரென்று
..ணைத்தும்
..டார்.

தங்கை நடிகைக்கு எல்லாமே புது அனுபவம். பயந்துபோய் வாய்விட்டுக் கதறியழத் தொடங்கிவிட்டார். இயக்குநர் எத்துனையோ விதமாக சமாதானம் சொல்லியும் நடிகை அழுகையை நிறுத்தவில்லை.

படப்பிடிப்பில் நடிகைகளை கன்னத்தில் அறைவதில் புகழ்பெற்றவர் இயக்குநர். அழுகையை நிறுத்த மறுத்த தங்கை நடிகைக்கு விட்டார் ஒரு அறை.

நடிகை அரண்டுபோய் விக்கித்து நிற்க, இயக்குநர் தன் வக்கிர நோக்கத்தை நிறைவேற்ற ஆரம்பித்தார்.

### சகஜம் என்றார்

நடிகை தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை அழுதழுது அக்கா நடிகையிடம் கூறினார். அவரோ இதெல்லாம் சகஜம் என்பதுபோல தோளில் தட்டிக்கொடுத்தாராம்.

ஆனால் தங்கையால் அப்படி எடுத்துக்கொள்ள முடியவில்லை. பிரபலமான பின்னர் அந்த இயக்குநரை பலவிதமாக அலையவைத்து பழி தீர்த்துக்கொண்டார்.

தன்னால் அறிமுகம் செய்யப்பட்ட நடிகைகளை சில காலத்திற்கு தன்கட்டுப்பாட்டில் வைத்திருந்து பழக்கப்பட்ட இயக்குநரால், அந்த நடிகையை மட்டும் கட்டுப்படுத்த இயலவில்லை.

முதல் படமே ஹிட்டானதால் அப்போது அரசியலில் உச்சத்தில் இருந்த பிரமுகர் ஒருவரது பார்வை நடிகைமீதுபட்டது. அந்தப் பிரமுகரது தயவு கிட்டியதால் இயக்குநரை மிரட்டிப் பணிய வைப்பது நடிகைக்கு ஒன்றும் பெரிய காரியமாக இருக்கவில்லை.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் நடிகையும் இயக்குநரும் எப்படியோ ராசியானார்கள். 'திலக' நடிகரின் ஜோடியாக கனமான பாத்திரம் ஒன்றில் அந்த நடிகையை நடிக்கவைத்தார் இயக்குநர்.

தற்போது அந்த நடிகை சினிமா உலகைவிட்டு குடும்ப வாழ்க்கைக்கு சென்றுவிட்டார். இயக்குநர் இப்போதும் புகழோடும், சர்ச்சைகளோடும் இருக்கிறார்.

## ...டுக்கிப்பிடி

..காதலா காதலா' படத்தில்
..ந்தர்யாவைப் பிழிந்து எடுத்து
..ார் கமல். காதல் காட்சிகளில்
..டியொரு நெருக்கம். அப்படி
.. உருக்கம். கிடுக்கிப்பிடி
..டு கமல் பிடித்த பிடியில்
..புகள் முறியாததுதான்
..ந்தர்யாவுக்கு மகா ஆச்சரி
..ம். சௌந்தர்யாவும்
..க்கு நன்றாகவே ஈடு
..த்துள்ளாராம். கமல்
.. பாய்ந்தால் இவர்
..றடி பாய்ந்தார்
..டியோ ரசிகர்கள்
..கள்.
.. ரஜினியுடன்
..ல் நடித்தாலும்
.. கள் தமிழில்
..ா காதலா'
.. திருப்பம்

## இரண்டு வருடம் பிஸி

ரஜினி, கமல், விஜய் ஆகியோருக்கு அடுத்த இடத்தில் இருப்பவர் யார் தெரியுமா? முரளி. 'காலமெல்லாம் காதல் வாழ்க', 'காதலே நிம்மதி', 'பொற்காலம்' ஆகிய படங்கள் ஹிட்டானதால் முரளி முதல்தர கதாநாயகர்களில் ஒருவராகிவிட்டார்.

தற்போது ஒன்பது கதைகளைக் கேட்டு ஓ.கே. பண்ணிவைத்திருக்கிறாராம். ஒன்பது புதிய இயக்குநர்கள் முரளி மூலமாக அறிமுகமாகப் போகின்றனர்.

பாலசந்தரின் கவிதாலயா பட நிறுவனத்திற்காகவும் முரளி ஒரு படம் நடிக்கவுள்ளார். அதனை கஸ்தூரிராஜா இயக்கவுள்ளார். இரண்டு வருடங்களுக்கு பிஸியாக இருக்குமளவுக்குக் கைவசம் படங்கள் உள்ளன.

## விஜய் ரசிகை

தற்போதைய நிலவரப்படி ரம்பாவுக்கு பிடித்த கதாநாயகன் விஜய். அவரே சொல்லி இருக்கிறார். 'நினைத்தேன் வந்தாய்' படப் பிடிப்புக்காக ரம்பாவும், விஜய்யும் சுவிற்ஸர்லாந்துக்குப் பறக்கப்போகிறார்கள். அங்கு ரசிப்புத்தன்மை மேலும் சிறக்க வாய்ப்பு உண்டு.

ரம்பாவின் ரசனையும் விஜய் ரசனையும் ஒத்துப் போனால் அடுத்த படத்திலும் ரம்பாவுக்கு வாய்ப்பு நிச்சயம்.

## முத்தச் சோகம்

நானும் ஐஸ்வர்யாராயும் முத்தமிட்டுக் கொண்டிருந்த காட்சி படமாகிக் கொண்டிருந்தது. உணர்ச்சிகரமாக நடித்துக்கொண்டிருந்தோம். அப்போதுதான் டயானாவின் மரணச் செய்தி எங்களுக்குக் கிடைத்தது.

சம்பவம் நடந்த இடமும் எங்கள் படப்பிடிப்பு நடந்த இடமும் வெகு அருகில் தான். அதன் பின்னர் எப்படி எங்களால் நடிக்க முடியும்? மனமே உடைந்துவிட்டது.

நானும் இயக்குநரும் டயானா மரணமான இடத்திற்குச் சென்று பார்த்தோம். தரையில் டயானாவின் இரத்தக் கறையைப் பார்த்ததும் ஷங்கர் கதறிவிட்டார். அன்று முழுக்க யாரும் சாப்பிடவில்லை. இவ்வாறு கூறியிருப்பவர் பிரசாந்த். ஜீன்ஸ் படப்பிடிப்பு ஃபிரான்ஸிலும் நடந்தது.



பாண்டியராஜன்-சுவலட்சுமி
படம்: கவலைப்படாதே சகோதரா

## மாதுரி வியப்பு

தமிழ்ப்பட உலக ஹீரோக்களது புகைப் படங்களை வாங்கிப் பார்த்தாராம் மாதுரி டிக்ஷித். கமல், ரஜினி போன்றவர்கள் மாதுரிக்கு நன்கு தெரிந்தவர்கள். சரத்குமார் படத்தைப் பார்த்ததும், அவருடன் நடிக்க விரும்புவதாக சொன்னாராம்.

ராமராஜன் படத்தைப் பார்த்ததும் மாதுரி முகத்தில் ஆச்சரியம். "இவரும் இங்கே ஹீரோவா?" என்று கேட்டாராம். அவர் எம்பியாகி நிஜ ஹீரோவே ஆகிவிட்டார் என்று மாதுரிக்கு தெரியுமா?

## எட்டு

ஜீன்ஸ் படத்தில் உலகில் உள்ள ஏழு அதிசயங்களைக் காண்பிக்கிறார்கள். ஐஸ்வர்யாவுடன் சேர்ந்து எட்டு அதிசயங்கள் என்கிறார் பிரசாந்த்.



## சொர்ணமுகி

'சொர்ணமுகி' நன்றாக ஓடிக் கொண்டிருக்கிறது. பார்த்திபனின் நடிப்பு ரசிகர்களைக் கவர்ந்திருக்கிறது.

பிரகாஷ்ராஜ், தேவயாணி ஆகியோரைவிட பார்த்திபனுக்காகத்தான் படம் ஓடுகிறது என்கிறார்கள். மணிவண்ணனையும் அதனோடு சேர்த்துக் கொள்ளலாம். படத்தை இயக்கி இருப்பவர் அதியமான். பார்த்திபன் தூள் கிளப்புவதால் அதியமான் பெயர்கூட அமுங்கிவிட்டது.

முகப்பில்
அஜித்குமார்
தேவயானி



பார்த்திபன்
படம்: சொர்ணமுகி

## பிரபு—தேவயாணி

'பொன்மனம்' படத்தை இயக்கிய பி.ராஜ்குமார், பிரபு நடிக்க அடுத்து இயக்கும் படம் 'என் உயிர் நீதானே'. முதலில் 'அன்புள்ள மன்னவனே' என்று பெயர் வைத்தார். இப்போது பெயர் மாற்றம்.

பிரபுவின் ஜோடியாக நடிப்பவர் தேவயாணி. இருவரும் முதன் முதலாக ஜோடி சேரும் படம் இது.

விஜயகுமார், சுஜாதா, செந்தில், சார்லி, தியாகு ஆகியோரும் நடிக்கின்றனர். இசை: தேவா. ஒளிப்பதிவு பி. கண்ணன்.

## பிடிக்காது

எனக்கு வரப்போகும் கணவர் எப்படியிருக்க வேண்டும் தெரியுமா? என் வளர்ச்சியில் முழு அக்கறை கொண்டவராக இருக்க வேண்டும். என் உணர்ச்சிகளைப் புரிந்து கொண்டவராக இருக்க வேண்டும். ஆண் ஆதிக்கம் எனக்கு ஆறவே பிடிக்காது என்று அடுக்கிக் கொண்டே போகிறார் ஊர்வசி.

## மறுபடி கலக்கல்

'வேட்டிய மடிச்சுக்கட்டு' ஒரே கலகலப்பாகப் போகிறது. பல படங்களில் அடுத்தடுத்து தடுக்கி விழுந்த பாக்யராஜ் வேட்டியை மடிச்சுக்கட்டிக் கொண்டு புகுந்து விளையாடியிருக்கிறார். நகைச்சுவையுடன் விறு விறுப்பும் உண்டு.

படத்தில் அனைவரையும் கொக்கி போட்டு இழுப்பது பாக்கியராஜின் மகனான குட்டிப் பையன் சந்தனு. நக்மா கவர்ச்சிக் குலுக்கலுக்காக வந்து போகிறார்.

## திண்டாட்டம்

அர்ஜுன்-மந்த்ரா-சிம்ரான் ஆகியோர் நடித்த படம் 'கொண்டாட்டம்'. பெயரில்தான் கொண்டாட்டம் இருக்கிறது. படம் படு தோல்வி. தயாரிப்பாளர் திண்டாட்டத்தில் இருக்கிறார்.

கிட்டத்தட்ட ஒன்றேகால் கோடி ருபா அமோக நஷ்டம். அர்ஜுன் மார்க்கெட்டும் டல்லாகிவிட்டது.


படிப்பகம்

# சாவோடு வாழ விடு!

ஒரு யுக சோகத்தின் கண்ணீர்
எனக்குள்ளே
ஆர்ப்பரிக்கிறது!
இன்னும் கொஞ்சம்-எனை
சாவோடு வாழவிடு;
சம்மதமில்லையாயின்
அழுது தீர்க்கவாவது சற்று
அவகாசம் கொடு!
-o-
எனைச் சூழவுள்ள
விலங்குகளை உதறிவிட்டு
வானில் பறப்பதற்கு
வழி காட்டுகிறாய்!
-o-
உலகிலுள்ள
எல்லா சோகங்களையும்
எனது தலையில்
வீழ்த்திக் கொண்டு
வேதனைப் படுவதாக
விவாதிக்கின்றாய்!
-o-
உனக்குத் தெரியுமா.....
மனது சுமக்கும்
மௌன துயரத்தின் பாரத்தினால்
பூமிக்குள்ளே என் வாழ்வு
புதையுண்டு கிடப்பதை?
-o-
எனக்காக வருக்கப்பட்ட
பின்பும்
என் பாதம் பதியாத
வீதிகள் எல்லாம்
ஏமாற்றத் தவத்தோடு
எனை எதிர்கொள்ளக்
காத்திருப்பதை அறிவாயா?
-o-
என் வேதனைகளை
உனக்கு நான்
பங்கிட்டுத் தர முடியுமா?
இல்லை
உனது நிம்மதியிலிருந்து
ஒரு துளியையேனும்
நீ எனக்குத்
தந்திட முடியுமா?
-o-
முடித்து வைக்க முடியாத
என் சோகங்களிடம்-நீ ஏன்
முற்றுப்புள்ளியோடு
வருகிறாய்?
-o-
வாழ்க்கையின
அர்த்தமிழந்த
அன்று முதல்
பாதிக்கு மேல் நான்
செத்தாகி விட்டது;
எதிர்பார்ப்புகளைப்
பரப்பி வைக்க
எனது ஆத்மாவில்
இனியுமெங்கே
இடமிருக்கிறது?
-o-
கண்ணீர் ஊறிய
என் கடந்த காலத்
தடயங்களை
புதிய இலட்சியங்களின்
புழுதியினால்
தூர்த்துவிடச் சொல்கிறாய்;
இருள் மண்டியதும்
புயல் எழுவதுமான-என்
புண்பட்ட இதயத்தினுள்ளே
தீபங்களை
ஏற்றிவைக்கச் சொல்கிறாய்;
இல்லாத வாழ்வை நோக்கி
என் முறிந்த சிறகுகளோடு
பறந்து போகச் சொல்கிறாய்!
-o-
ஒரு யுக சோகத்தின் கண்ணீர்
எனக்குள்ளே
ஆர்ப்பரிக்கிறது!
இன்னும் கொஞ்சம்-எனை
சாவோடு வாழ விடு!
சம்மதமில்லையாயின்
அழுது தீர்க்கவாவது-சற்று
அவகாசம் கொடு!

டஹ்மா ஜஹான்-
அட்டாளைச்சேனை.

# நதியாவாய் என்ற நம்பிக்கையில்.....



விறகு சுமந்து
மலையேறும்
கர்ப்பிணியைப்போல
மெதுவாக
ஏறிக்கொண்டிருக்கிறது
இருள்!
**
இரவில்
அடுக்கப்பட்ட
நட்சத்திரப் படிக்கட்டுகளினூடே....
தாவி வந்து,-என்
உணர்வுகளை
ஆக்கிரமித்துக் கொள்கிறது
உன் ஞாபகம்!
ஏழையின்
வாழ்வைப்போல
பூமியெங்கும்
கங்குல் கவிழ்ந்திருக்க,
ஓடிக் களைத்த உலகம்
உறங்கிப் போய்விட்டது!
எனினும்,- என்
விழிப்பும் தேடலும் மட்டும்,
தீர்ப்பை வேண்டி நிற்கும்-ஒரு
கைதியின் எதிர்பார்ப்போடும்,
தீனைத்தேடி நிற்கும் ஒரு
கொக்கின் கவனத்தோடும்,
உன் திசையை
வெறித்து நிற்கின்றன!
**
உனக்கென்ன.....?!
குண்டு வெடித்ததும்
நாட்டை விட்டுப் போய்விடும்
உல்லாசப் பயணியைப் போல
சொல்லாமல் போய்விட்டாய்.....!
சபையைவிட்டு.
நானிங்கு
ஒவ்வொரு
சுவாசத் திருப்பத்திலும்-ஒரு
மதிலைப்போல வந்து நிற்கும்
உன் நினைவுகளில் மோதியே
செத்துக் கொண்டிருக்கிறேன்!
**
இலங்கையின்
சமாதானத்தைப்போல
தூரமாகிப் போனவளே!
காலம் முழுதும்
நான் கடலாய் காத்திருப்பேன்;
என்றோ ஒருநாள்- நீ
நதியாவாய் என்ற
நம்பிக்கையோடு...!

பர்ஸான்- யடவத்த,
நிகெகொள்ள.







# காயமே இது மெய்யடா

பாரிய கப்பலின் தளத்தில் இது உல்லாச உறக்கமல்ல! கப்பலே மருத்துவமனையாக மாறியுள்ள கோலமதான் இது. இரண்டாம் உலகப் போரில் காயப்பட்ட படைவீரர்களை கப்பல் கப்பலாக ஏற்றிச் செல்ல வேண்டியிருந்தது. போருக்கு திரும்பிப் போகாத சிப்பாய்களுக்கு காயப்பட்டு திரும்பி வருவது சந்தோசம் போலிருக்கிறது. சிலர் புன்னகைக்கிறாகள் பாருங்கள்!

நம்நாட்டில் விமானங்களிலும் ஹெலிகளிலும் காயமடைந்த படை வீரர்களை போர்க் களத்திலிருந்து கொண்டுவருகின்றனர். கடற் போக்குவரத்துக்கு கடற்புலிகளது அச்சுறுத்தல் இருப்பதால் இங்கு வான்வழி மூலமே காயமடைந்தோர் ஏற்றிவரப்படு கிறார்கள். உடலில் பட்ட காயங்கள் ஆறிவிடும்; போரின் விளைவுகளால் மனதில் பட்ட காயங்கள் ஆறுமா?

# நசுக்கப்பட்ட...

நாம்
சிந்தும் கண்ணீர்
சொரியும் குருதி
என்றோ ஒருநாள்
எழுந்து நிற்கும்!
**
விதைகள்
தினந்தோறும் வீழ்ந்தாலும்,
இன்னும் எழவில்லை
எம் விடிவும்
ரோஜா பூக்களும்!
**
எல்லைகள் வரையறுத்தாயிற்று!
தூரம் அதிகம்
இல்லை- ஆனால்
எங்கு நிற்கிறோம்...
என்ன செய்கிறோம்?
**
எல்லோரும் வழிகாட்ட
முனைந்ததால்
நாமும் வழிகாட்டி
ஆகிவிட்டோம்!
**
மனங்களை திறக்காமல்
போதி.
மரங்களை தேடியே
களைத்துப் போனோம்!
**
பாதைகளை நீட்டுவது
பற்றி
நீ கவலைப்பட
**
அடுத்த தகர்ப்பு
பற்றி
அவர்கள் கவலைப்பட
**
எப்போது சிதறுவோம்
என்று
நாம் கவலைப்பட
**
வாழ்க்கை
நீளும்
யுத்தம் போல!

சுபா வரன்-கண்டி.

# பேனா நண்பர்கள்



பெயர்: ரி. மகேஸ்வரன்,
வயது: 25
முகவரி:
32, மில் வீதி,
வவுனியா.
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்:
பி.நாலனிகுமாரி,
வயது: 20
முகவரி: டெல்கிட் குறூப், அல்கா ஏன தோட்டம், பதுரலிய.
பொழுது போக்கு:
பத்திரிகை.



பெயர்:
எம்.ஜிப்ரி,
வயது: 17
முகவரி: 641, தாயிப் நகர், தம்பலகாமம்.
பொழுது போக்கு:
வானொலி,
பத்திரிகை.



பெயர்:
அப்துல் ஜலீல் அமீரா,
வயது: 15
முகவரி:
எல்.பி.4, வீட்டிலக்கம்-225, ஆஸாத் நகர், கினிவெட்டி.
பொழுது போக்கு:
வழமையானவை.

## இந்த வாரம் உங்கள் பலன்

(29.03.1998 தொடக்கம் 04.04.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

மீனம் - சூரியன், புதன், சனி.
மேடம் - செவ்வாய்.
சிம்மம் - இராகு.
கும்பம் - வியாழன், வெள்ளி, கேது.

சந்திரன்- மீனம், மேடம், இடபம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் | | |
|---|---|---|---|
| ஞாயிறு- கடன் தொல்லை, மனக் கவலை. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பகல் | 11 | மணி |
| புதன்- பிரயாணக் கஷ்டம், தொழில் மந்தம். | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- வீண் குறை கேட்டல், மனக் கிலேசம். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பகல் | 11 | மணி |
| சனி- செல்வு மிகுதி, மனப் பயம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக் கவலை, இடப் பிரிவு. | பகல் | 12 | மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| புதன்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- இனசன நன்மை, கௌரவ மிகுதி. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. | 1 | மணி |
| சனி- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்- வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், கௌரவ மிகுதி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- புதிய முயற்சி, பணக் கஷ்டம். | பகல் | 12 | மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, மனக் கலக்கம். | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| சனி- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசன மகிழ்ச்சி, ஆடம்பர வாழ்வு. | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, முயற்சி பலிதம். | பகல் | 12 | மணி |
| புதன்- துயர் நீங்கும், உயர்ந்த வாழ்வு. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, பண வரவு. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- செய்தொழில் நன்மை, காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, கௌரவ மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, கௌரவ மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| புதன்- அந்நியர் உதவி, மனக்குறை நீங்கும். | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பகல் | 11 | மணி |
| வெள்ளி- வீண் சந்தேகம், குடும்பக் கலகம் | மு.ப. | 10 | மணி |
| சனி- துயர் அதிகம், கௌரவக் குறைவு. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசனப் பகை, மனக் கலக்கம். | மு.ப. | 10 | மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, பண வரவு. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| புதன்- பயனுள்ள செயல், கௌரவ மிகுதி. | பகல் | 11 | மணி |
| வியாழன்- முயற்சி பலிதம், தொழில் மேன்மை. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, மனக்குறை அதிகம். | பி.ப. | 2 | மணி |
| சனி- இனசன நன்மை, முயற்சி பலிதம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, பலவித பேறு. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, உயர்ந்த நட்பு. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| புதன்- அந்நியர் உதவி, பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- உறவினர் பகை, மனக் கலக்கம். | மு.ப. | 10 | மணி |
| சனி- பலவித கஷ்டம், தேகசுகம் பாதிப்பு. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் சகாயம், மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- வீண் கலக்கம், உயர்ந்த நட்பு | பி.ப. | 2 | மணி |
| புதன்- தொழில் கஷ்டம், பண முடங்கல். | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- பிரயாண மிகுதி, செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, மனக் கல்க்கம். | பகல் | 11 | மணி |
| சனி- துயர் நீங்கும், அந்நியர் உதவி. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், துயர் அதிகம். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- வீண் மனஸ்தாபம், பெரியோர் பகை. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, கௌரவ மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| புதன்- தொழில் மந்தம், பணச் செலவு. | பகல் | 11 | மணி |
| வியாழன்- அந்நியர் சகவாசம், வெளியிட வாழ்க்கை. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. | 1 | மணி |
| சனி- இனசனப் பகை, மனக் கலக்கம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-5

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் | | |
|---|---|---|---|
| ஞாயிறு- செலவு மிகுதி, கடன்படல். | பகல் | 11 | மணி |
| திங்கள்- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் | 12 | மணி |
| புதன்- கடன் தொல்லை, கௌரவக் குறைவு. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- அந்நியர் சகாயம், செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பி.ப. | 1 | மணி |
| சனி- வெளியிடப் பிரயாணம், மனக் கலக்கம். | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக்குறை நீங்கும், புதிய முயற்சி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, கௌரவ மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, துயர் மிகுதி. | பகல் | 12 | மணி |
| வியாழன்- இனசன நன்மை, பணக் கஷ்டம். | பகல் | 11 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| சனி- வீண்குறை கேட்டல், பெரியோர் பகை. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- அந்நியர் நட்பு, மனக் கிலேசம். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பகல் | 11 | மணி |
| புதன்- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், உயர்ந்த நட்பு. | பகல் | 12 | மணி |
| சனி- தொழில் மந்தம், பண முடங்கல். | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

## விளம்பரங்களை நம்பாதீர்கள்

சோப் வகைகளுக்குத்தான் எத்தனை எத்தனை விளம்பரங்கள்?

'உங்கள் மேனி எழிலுக்கு' என ஏகப்பட்ட கவர்ச்சிகரமான விளம்பர வாசகங்கள்.

இதன் உண்மை நிலைதான் என்ன?

தினமும் உபயோகப்படுத்தும் சோப்புக்களுக்கு இவ்வளவு கவர்ச்சியை உருவாக்கியது விளம்பரங்கள்தான்.



அப்போ, சோப்பின் பயன்தான் என்ன?

அழுக்கைப் போக்கி உடலைச் சுத்தமாக வைத்திருக்கும். அதைத் தவிர்த்து நிறத்தையும் அழகையும் கூட்ட எந்த சோப்பாலும் முடியாது என்பதே உண்மை.

குளிப்பதற்குப் பயன்படுத்தும் சோப்பை பாத் சோப் என்று கூறினாலும் அதில் இரண்டு வகைகள் உள்ளன. அவை: டொய்லெட் சோப், பாத்திங் பார்.

இயற்கையான எண்ணெயில் மட்டும் தயாரிக்கப்படுவது டொய்லெட் சோப். பாத்திங் பார் தயாரிக்க எண்ணெயோடு சில செயற்கைப் பொருட்களும் சேர்க்கப் படுகின்றன.

அநேகமாக 12 தடவை வரை ஒரு சோப்பைப் பயன்படுத்துவதாக சில ஆய்வுகளின்படி கூறப்படுகிறது. ஒவ்வொரு தடவையும் உடலில் சோப்பைத் தேய்க்கும் போதும் ஐந்து முதல் எட்டு சதவீதம் வரை கரைகிறது. ஆனால் உடலில் இருக்கும் அழுக்கைப் போக்க இந்த அளவுக்கு சோப்பைத் தேய்க்க வேண்டியதில்லை. அதாவது தேவையைவிட இரண்டு மடங்கு தேய்க்கிறோம்.

சோப் போட்டுக் குளிக்கும்போது அதில் நுரை வர வேண்டும் என்று எல்லோரும் நினைக்கிறார்கள். அதனால்தான் நுரைப்பதற்குத் தேவையான பொருட்கள் அதில் சேர்க்கப்படுகின்றன.

உங்கள் சருமத்திற்கு தொல்லை தரும் சோப்புக்களைத் தேர்ந்தெடுக்காதீர்கள். அலர்ஜி இருப்பதாக நினைத்தால் அந்த சோப்பைப் பயன்படுத்த வேண்டாம். விளம்பரத்தைப் பார்த்து அடிக்கடி சோப்பை மாற்றினால் அதனால் பாதிக்கப்படுவது உங்கள் சருமம்தான்.

## பல் வலியா? இதோ யோசனை

உங்களுக்குப் பல்வலியா? அப்படியானால் இதைக் கவனியுங்கள்.

* ஒரு சொட்டு கராம்புத் தைலத்தைப் பஞ்சில் தோய்த்து பல்வலிக்கும் இடத்தில் வையுங்கள். அரைமணிநேரம் கழித்து அதை எடுத்து விட்டு ஒரு சொட்டு யூகலிப்டஸ் தைலத்தை ஒரு பஞ்சில் தோய்த்து வையுங்கள். இப்படி ஒன்றன்பின் ஒன்றாக ஆறுதடவை வையுங்கள். இப்படி வைக்கும் போது பல் ஈறில் அதிகம் படாமல் வைக்க வேண்டும்.
* பழுத்த மாவிலை, கொய்யா இலை போன்றவற்றை நீரில் போட்டு நன்றாகக் கொதிக்க வைத்து, அந்த நீரில் சிறிதளவு சமையல் உப்பைக் கலந்து வாய் கொப்பளிக்க வேண்டும். நீர் ஆறி லேசான சூட்டில் இருந்தால் போதும்.
* மிளகு, உப்பு, கற்பூரம் ஆகியவற்றைச் சம அளவுகளில் எடுத்துத் தூளாக்கி, வலிக்கும் பல்லில் சிறிது நேரம் வைக்கலாம்.
* சுக்குத்தூள், கற்பூரம், உப்பு ஆகியவற்றைக் கலந்து தூளாக்கி பல்தேய்த்து விட்டு வாய் கொப்பளிக்கலாம்.



இன்னொரு முக்கியமான விஷயம்:

தாயின் கர்ப்பத்தில் இருக்கும் போதே சிசுவுக்குப் பற்கள் அமைகின்றன. தாய் கர்ப்பிணியாக இருக்கும் போது சாப்பிடும் சிலவகை மருந்துகளால் குழந்தையின் பற்கள் மஞ்சளாகி விடக்கூடும்.

சாதாரணமாக குழந்தைகளுக்கு 6 மாதம் முதல் 10 மாத பருவத்தில் பற்கள் முளைக்கின்றன. குழந்தைகளுக்கு 6 மாதத்திலே சோறூட்டுவதால் அப்போது முதல் வாயைச் சுத்தப்படுத்த வேண்டும். தண்ணீரில் நனைத்து சுத்தமான துணியால் குழந்தைகளின் ஈறுகளைத் துடைத்துச் சுத்தம் செய்ய வேண்டும்.

## சுற்றுலா

சிறுவர்கள் பாடசாலைகளில் இருந்து சுற்றுலா செல்லும்போது...

* பள்ளிக்கூடங்களில் இருந்து சுற்றுலா செல்லும்போது பாடசாலை சீருடைகளை அணிந்து செல்வது நல்லது. சிறுவர்கள் வழி தவறிப் போனாலும் அடையாளம் கண்டுபிடிக்க வசதியாக இருக்கும்.

* சிறுவர்கள் திடீரென அறிமுகமில்லாதவர்களிடம் நெருங்கிப் பழகாத அளவுக்கு ஆசிரியர்கள் கவனித்துக் கொள்ள வேண்டும்.

* ஒருநாள் சுற்றுலா என்றால், அன்றைக்குத் தேவைப்படும் உணவை குழந்தைகள் எடுத்துச் சென்று விட வேண்டும்.

* முதலுதவிப் பெட்டியைக் கண்டிப்பாக உடன் எடுத்துச் செல்ல வேண்டும். அதில் பஞ்சு, துணி, டெட்டோல், சோப், தலைவலி மாத்திரைகள் போன்றவை இருப்பது அவசியம்.

# கண்ணீரில் கரைந்த இரவுகள் 28

பு வ னா

அரண்மனை வாழ்க்கையில் கசந்து கொண்டிருந்த டயானாவுக்கு எதிர்பாராத விதமாக அந்த நட்புக் கிட்டியது.

அந்த கம்பீரமான, கச்சிதமான உடற் கட்டுடன் காணப்பட்ட இளைஞருடன் டயானா கைகுலுக்கும்போது, தன் வாழ்க்கையில் புயலைக் கிளப்பப்போகும் இன்னொரு ஆண்மகன்தான் அவர் என்று அறியவில்லை.

அந்த இளைஞன் கப்டன் ஜேம்ஸ் ஹெவிற்.

அரச குடும்பத்தவர்களுக்கு குதிரையேற்றம் கற்றுக் கொடுப்பவர்.

ஜேம்ஸ் ஹெவிற் பிரசித்தி பெற்ற போலோ விளையாட்டு வீரர் என்பதால், முன்னரே அவரது படங்களை டயானா பத்திரிகைகளில் பார்த்திருக்கிறார்.

விளையாட்டு வீரர்கள்மீது டயானாவுக்கு எப்போதுமே ஒரு ஈடுபாடு இருந்து வந்தது.

அதனால் பத்திரிகைகளில் வெளியாகும் படங்களை கூர்ந்து கவனிப்பது உண்டு.

பாடசாலை மாணவியாக இருந்த போது, தனது சிநேகிதிகள் சிலர் விளையாட்டு வீரர்களது படங்களை தங்கள் படுக்கை அறைச் சுவர்களில் ஒட்டி வைத்திருப்பதை டயானா பார்த்திருக்கிறார்.

தங்கள் தலையணைகளின் கீழே தங்களுக்குப் பிடித்தமான வீரர்களது படங்களை வைத்திருந்து முத்தம் கொடுத்த சிநேகிதிகளும் இருந்தனர்.

ஆனால், டயானா மட்டும் வீரர்களை ரசிப்பதோடு நிறுத்திக்கொண்டார். தன் உணர்ச்சிகளை விளம்பரப்படுத்திக் காட்டுவதில் டயானாவுக்கு பிரியமில்லை.

ஜேம்ஸ் ஹெவிற்றின் இளமையான தோற்றம் சினிமா நட்சத்திரங்கள் போன்று இருந்தது.

### குதிரையேற்றம்

குதிரையேற்றம் தெரிந்து வைத்திருப்பது அரச குடும்பத்திற்குரிய தகுதிகளில் ஒன்று.

அதனால் குதிரையேற்றப் பயிற்சியாளர்கள் பலர் இருந்தனர்.

குதிரையேற்றத்தில் அரச குடும்ப பெண்களும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அரச குடும்பப் பெண்களுக்கு குதிரையேற்றம் பழக்க வருபவர்கள், குதிரையேற்றப் பயிற்சியை மட்டும் கற்றுக் கொடுக்கக்கூடிய வயதினராகவே இருப்பர்.

ஆனாலும், அரச குடும்பப் பெண்கள் எப்போதுமே அரண்மனைக்குள் அடைந்து கிடப்பவர்கள். இயந்திரத்தனமாக வாழப் பழக்கப்பட்டவர்கள்.

குதிரையேற்றம், நீச்சல் போன்ற பயிற்சிகளின் போது அந்நிய ஆடவர்களின் ஸ்பரிசம் படும்போது அதனை உள்ளூர ரசிக்கவே செய்தனர்.

வயதான பயிற்சியாளர்கள்கூட அரச குடும்ப இளம் பெண்களால் சலனத்துக்கு உள்ளான சம்பவங்களும் உள்ளன.

, குதிரையேற்ற பயிற்சியை கற்றுக் கொடுக்க வந்தவர்களுக்கு, அரச குடும்பத்து பெண்கள், வேறு சுவாரசியமான பயிற்சிகளை கற்றுக் கொடுத்தனர்.

இதெல்லாம் அரண்மனை பெரிசுகளுக்கு தெரிய வருவதில்லை. சிலவற்றை கண்டும் காணாமல் இருந்துவிடுவர்.

டயானாவுக்கு கற்றுக் கொடுக்க நியமிக்கப்பட்ட ஜேம்ஸ் ஹெவிற்தான் குதிரையேற்ற பயிற்சியாளர்களில் இளமையானவர். அழகானவர். துடிப்பானவர்.

குதிரையேற்றப் பயிற்சியின்போது ஜேம்ஸ் ஹெவிற்றின் இளமையான, திடகாத்திரமான கைகள் டயானாவைத் அடிக்கடி தீண்டும்.

அப்போதெல்லாம் இனம் புரியாத ஒரு சிலிர்ப்பு டயானாவின் உடலில் தோன்றும்.

ஒரு முறை டயானா குதிரையில் ஏறுவதற்கு வசதியாக ஹெவிற் தன் கைகளால், டயானாவின் பின்புறத்தில் உந்துதல் கொடுத்தார்.

வேறு யாராவது அவ்வாறு செய்திருந்தால் டயானா சினந்திருப்பார்.

ஜேம்ஸ் ஹெவிற் அப்படிச் செய்த போது, அச் செயலை உள்ளூர இரசித்தார்.

ஜேம்ஸ் ஹெவிற்றுடன் தனது நெருக்கம் நாளும் பொழுதும் அதிகரித்துக் கொண்டிருப்பதை டயானாவால் தவிர்க்க முடியவில்லை.

ஜேம்ஸ் ஹெவிற்றும் காதல் லீலைகளில் கைதேர்ந்தவர். பல பெண்களுடன் தொடர்புகள் உள்ளவர்.

டயானா தனது நெருக்கத்தை இரசிக்கத் தொடங்கிவிட்டார் என்பதை ஜேம்ஸ் ஹெவிற் அறிந்து கொண்டார்.

ஆனாலும், டயானாவின் மனதை அறியாதவர்போல நடந்து கொண்டார். அதே சமயம் டயானாவின் மனதில் சபலத்தையும், ஆசையையும், ஏக்கத்தையும் உருவாக்கும் சின்ன சின்ன சில்மிஷங்களில் ஈடுபடத் தவறவில்லை.



குதிரையேறும்போது டயானாவின் இடையை தன் கைகளால் மென்மையாக வளைத்து பிடிப்பது, வயிற்றில் விரல்களால் அழுத்திவிடுவது, தற்செயலாக மார்பில் கைபடுவது போன்ற சில்மிஷங்களால் டயானாவை வசியப்படுத்த ஆரம்பித்தார்.

டயானாவும் ஜேம்ஸ் ஹெவிற்றின் கைகளால் தீண்டப்படுவதை நாடுவதுபோல பல சமயங்களில் நடந்து கொண்டார்.

வேண்டுமென்றே குதிரையில் இருந்து சாய்வது, ஹெவிற் வந்து தாங்கும்போது, அவரது முகம் அருகே தன் துடிக்கும் உதடுகளை கொண்டு செல்லுவது, கண்களால் கிறக்கமாகப் பார்ப்பது என டயானாவும் தன் பங்குக்கு காதல் லீலைகளுக்கான முன்னோட்டங்களில் இறங்கினார்.

## ஜேம்ஸ் ஹெவிற்றுடன் அறிமுகம்

### அன்புப் பரிசு

கப்ரன் ஜேம்ஸ் ஹெவிற்றுக்கு தோதான புது உடையை வாங்கிப் பரிசளித்தார் டயானா.

அதுதான் டயானா தன் கைகளால் அவருக்கு கொடுத்த முதல் பரிசு. அந்த உடையைத் தேர்ந்தெடுக்க கடை கடையாக ஏறி இறங்கினார்.

மொத்தம் ஆறு ஏழு மணி நேரங்கள் செலவழித்து தனக்குப் பிடித்த உடையை டயானா தேர்வு செய்திருந்தார்.

உடையைப் பார்த்ததும் ஜேம்ஸ் ஹெவிற் நன்றி சொன்னார். "உடனே சென்று அணிந்து கொண்டு வாருங்கள். நான் கண்ணாரக் காண வேண்டும்" என்று சிறு பிள்ளைபோல அடம் பிடித்தார் டயானா.

ஜேம்ஸ் ஹெவிற்றும் உடனடியாக அந்த உடையில் தோன்றினார். "என் உடலை தழுவுவது உங்களால் தெரிவு செய்யப்பட்ட உடை என்பது எனக்கு பெருமையாக இருக்கிறது!" என்றார் ஜேம்ஸ் ஹெவிற்.

"பெருமை ஏன்?"

"நீங்கள் இளவரசி, நான் சாதாரண பிரஜை!"

"நீங்களும் இளவரசர்தான்!"

"ஓ.நல்ல ஜோக்"

"ஜோக் அல்ல. விளையாட்டுலகில் நீங்கள் இளவரசர். அழகில், குணத்தில் இளவரசர்" என்று தன்னை மறந்து சொல்லிக் கொண்டே போனார் டயானா.

அதுதான் சமயம் என்று டயானாவை நெருங்கி அவரது முகத்தை தன் கைகளில் ஏந்திக் கொண்டார் ஜேம்ஸ் ஹெவிற்.

டயானாவின் உதடுகள் துடித்தன. அவை புதிய ஸ்பரிசத்துக்காக தவித்தன. ஜேம்ஸ் ஹெவிற் இராட்சதன். அவற்றின் அழைப்பை உடனடியாக ஏற்க மறுத்தான்.

தன் மூக்கால் டயானாவின் மூக்கை உரசினான். தன் விரல்களால் டயானாவின் இதழ்களை அளந்தான். முத்தம் மட்டும் இட்டானில்லை.

டயானாவால் தாங்க முடியவில்லை. அதற்கு மேலும் பொறுமையில்லை. தன் கைகளால் ஜேம்ஸ் ஹெவிற்றின் பிடரியை வளைத்து, தன்னை நோக்கி அழுத்தி அவன் உதடுகளுடன் தன் உதடுகளை இணைத்துக் கொண்டாள்.

'பட்சி தானாக விழுந்துவிட்டது' ஜேம்ஸ் ஹெவிட் தன் ஆண்மையை உள்ளூர வியந்து கொண்டான்.

அன்று ஆவேசமான முத்தத்துடன் அவர்கள் விடைபெற்றுக் கொண்டனர். அன்று இரவு முழுவதும் டயானா தூங்கவில்லை.

சரியாக இரவு 12 மணிக்கு ஜேம்ஸ் ஹெவிற்றிடமிருந்து டயானாவுக்கு தொலைபேசி அழைப்பு வந்தது.

"தூங்கவில்லையா?" என்று ஏக்கத்துடன் அவன் குரல் தொலைபேசி வழியாக டயானாவின் செவிக்குள் இறங்கி, நெஞ்சுக்குள் வழுக்கியது.

டயானாவுக்கு இன்ப அதிர்ச்சியாக இருந்தது. ஜேம்ஸ் ஹெவிற் நிறையப் பொய்கள் சொல்லி கிசுகிசுத்தான்.

எல்லாப் பொய்களும் டயானாவுக்கு இனித்தன.

"நான் எந்தப் பெண்ணுக்கும் இதுவரை முத்தமிட்டதில்லை என்று சொல்லமாட்டேன். ஏனெனில் அது பொய்! ஆனால், நான் முத்தமிட்டதில் என்னை கொத்தியது உங்கள் முத்தம் மட்டும்தான். இன்னமும் சுவை போகவில்லை. ஈரம்கூட காயவில்லை. இத்தனை ஏன், நான் இன்னமும் உணவுகூட சாப்பிடவில்லை. நிஜம்" என்றான். ஆனால் பொய். நன்றாக மூக்குமுட்ட சாப்பிட்டிருந்தான்.

"ஐய்யோ.. அப்படியானால் இனி வேண்டாம்! உங்களை சாப்பிடாமல் பட்டினி போடும் பழிகாரி என்ற பெயர் எனக்கு வேண்டாம்." டயானா நீண்ட நாட்களுக்கு பின்னர் கலகலவென்று சிரித்தாள்.



பாராமுகம்

"அப்படியானால் நான் உண்ணாவிரதம் இருக்கப்போகிறேன். முத்தம் தொடரும் என்று உத்தரவாதம் தரும்வரை உண்ணாவிரதம் தொடரும்" என்றான்.

"சரி... சரி.. நாளை ஒன்றுக்கு இரண்டு..."

"வாவ். இந்த மகிழ்ச்சியோடு தூங்கிப் போய் விடுகிறேன்" என்று கொஞ்சினான் ஹெவிற்.

மறுநாள் சந்தித்தபோது தன் காதல் தோல்வி பற்றி டயானாவிடம் விபரித்தான் ஜேம்ஸ் ஹெவிற்.

டயானா உருகிப் போனாள். தன்னைப் போலவே ஜேம்ஸ் ஹெவிற்றும் காதலில் தோல்வி கண்டவன் என்று அறிந்ததும், முன்பைவிட நெருக்கமானார்.

அடிக்கடி பரிசுப்பொருட்களை வாங்கி இரகசியமாக பரிசளிப்பார் டயானா.

அவற்றை வாங்கி பத்திரப்படுத்திக் கொள்வான் ஜேம்ஸ் ஹெவிற்.

தன் இல்லத்துக்கு வருமாறு ஒருநாள் அழைப்பு விடுத்தான். டயானா முதலில் தயங்கினாலும் பின்னர் அழைப்பை ஏற்றுக் கொண்டார்.

(அடுத்த வாரமும் வரும்)


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

வாரம் ஒரு பட்டுச் சேலை DK

பெயர்:........................

முகவரி:........................

........................

தொழில்:........................

கையொப்பம்:........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 04-04-1998

அனுப்பவேண்டிய முகவரி- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.



## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? கொழும்பு வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

என். ஃபாத்திமா,
இல. 149/2 ஏ, ஸ்டேட் வீதி,
கொழும்பு-14.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக-வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்துவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?


இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.





www.padippakam.com
படிப்பகம்





உச்சிதனை முகந்தால்-கர்வம்
ஓங்கி வளருதடி
மெச்சி உனை ஊரார்-
புகழ்ந்தால்
மேனி சிலிர்க்குதடி!
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# முள்ளம் பன்றியும் பாம்புகளும்

சில பாம்புகள் ஒன்று சேர்ந்து ஒரு குகையில் வசித்து வந்தன.

ஒருநாள் முள்ளம்பன்றி ஒன்று அந்தப் பக்கமாக வந்தது. அது பாம்புகள் வசிக்கும் குகையைக் கண்டது.

அந்தக் குகையில் தான் வசிப்பதற்கு ஆசைப்பட்டது. எனவே குகையின் உள்ளே சென்றது. உள்ளே சென்ற முள்ளம்பன்றி அங்கே பாம்புகள் இருப்பதைக் கண்டது.

உடனே பாம்புகளிடம் முள்ளம்பன்றி: "வணக்கம் நண்பர்களே! நீங்கள் எல்லாரும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வரும் இந்தக் குகையில் நானும் வாழ ஆசைப்படுகிறேன். எனக்கும் இங்கே ஒரு இடம் தருவீர்களா?" என்று கேட்டது.

அடக்கத்துடன் முள்ளம்பன்றி கேட்டவுடன், எதையும் யோசிக்காமல் பாம்புகள் அதற்குச் சம்மதித்தன. முள்ளம் பன்றிக்குக் குகையில் ஓர் இடம் கிடைத்தது.

ஆனால் முள்ளம் பன்றி குகையில் ஓரிடத்தில் இருக்காமல், அந்தக் குகையே தனக்குச் சொந்தம் என்பது போல் கும்மாளம் போட்டது.

முள்ளம்பன்றி அங்குமிங்கும் ஓடியாடித் திரிந்தபோது அதன் முட்கள் பாம்புகளுக்குக் குத்தின. வலிதாங்க முடியாத பாம்புகள் முள்ளம்பன்றியைக் கொத்தின. முள் அவற்றின் வாயிலும் குத்தின.

முள்ளம் பன்றியைத் திருப்பித் தாக்கவும் முடியாமல், அதனோடு ஒன்றாக இணைந்து வாழவும் முடியாமல் பாம்புகள் திண்டாடின.

பாம்புகள் எல்லாம் ஒன்று கூடி முள்ளம் பன்றியைக் குகையில் இருந்து வெளியேற்ற முடிவு செய்தன.

அவை முள்ளம்பன்றியிடம் சென்று, "நண்பரே! நீங்கள் இந்தக் குகையில் எம்மோடு இருப்பதால், எமக்கு சற்று வசதிக் குறைச்சலாக இருக்கிறது. நீங்கள் வேறு இடத்திற்குச் சென்று விடுகிறீர்களா?"



என்று கேட்டன.

அதற்கு முள்ளம்பன்றி கோபத்துடன், "நான் ஏன் இந்தக் குகையை விட்டுப் போகவேண்டும்? உங்களுக்கு வசதிக் குறைச்சலாக இருந்தால், ஏதாவது புற்றில் போய் வாழ்ந்து கொள்ளுங்கள். நான் இந்த இடத்தை விட்டு நகர மாட்டேன்!" என்று கூறியது.

முள்ளம்பன்றி குகையை விட்டுப் போகாது என்பதை உணர்ந்த பாம்புகள், எதையும் யோசிக்காமல் முள்ளம்பன்றியைத் தம்மோடு சேர்த்துக்கொண்டதை எண்ணி நொந்து கொண்டன.

'இனிமேலும் குகையில் இருந்தால் முள்ளம்பன்றியின் முட்களால் குத்துப்பட்டு இறந்து விடுவோம்!' என அஞ்சி, குகையை விட்டுப் பாம்புகள் வெளியேறின.

**ஒருவரின் குணமறிந்துதான் அவரை எம்மோடு சேர்த்துக் கொள்ள வேண்டும். ஒவ்வாத நண்பர்களுடன் கூட்டுச் சேர்ந்தால் நம் உயிருக்கே ஆபத்து வந்து விடும்.**

# அதிசயம்–ஆனால் உண்மை!



**அக்காரி மீன்:**
தென்னமெரிக்காவில் இருக்கும் இந்த மீன் ஒரு அடி நீளம் வரை வளரும். இதன் உடல் கண்ணாடி போன்ற எலும்புக் கவசத்தால் மூடப்பட்டிருக்கும்.

**அக்காடியன் பிளை கட்ச்சர்:**
இப்பறவை தனது கூட்டை அமைக்கும்போது, அதில் ஒரு அடி நீள வாலையும் தொங்கவிடும்.



**மாவுக் கட்டடம்:**
மொராக்கோவில் உள்ள மெவில்லா என்ற இடத்தில் உள்ள வீடுகள் பழுதான கோதுமை மாவு கொண்டு கட்டப்பட்டவை.



**பீரங்கி நாணயம்:**



பல வருடங்களுக்கு முன்னர் போர்னியாவில் சிறிய பீரங்கிகள் நாணயமாகப் பயன்படுத்தப்பட்டன.

# வாரம் ஒரு நாடு



## அசர் பெய்ஜான்

**தலைநகர்**– பாக்கு
**பரப்பு**– 86,600 சதுரகிலோமீட்டர்
**மக்கள் தொகை**– 76 இலட்சம்
**மொழி**– அஸேரி, துர்க்கிஷ், ரஷ்யன்
**சமயம்**– இஸ்லாம்
**நாணயம்**– மனாட்
**எழுத்தறிவு**– 52%
**தனிநபர் வருமானம்**– 636 டொலர்

**அமைவிடம்:**
ட்ரான்ஸ் காக்காசியாவின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ளது. மேற்கே அர்மீனியாவும்; வடக்கில் ஜோர்ஜியா மற்றும் ரஷ்யக் கூட்டமைப்பும்; கிழக்கில் கஸ்பியன் கடலும்; தெற்கில் ஈரானும் இதன் எல்லைகளாக அமைந்துள்ளன.

**வரலாறு:**
முன்னாள் சோவியத் குடியரசுகளில் ஒன்றான அசர்பெய்ஜான் 1991ல் சோவியத் ஒன்றியத்திலிருந்து பிரிந்தது. இங்கு முஸ்லிம்கள் அதிகமாக வாழ்கின்றனர்.

**பொருளாதாரம்:**
தானியங்கள், பருத்தி, திராட்சை, புகையிலை, பால்பொருட்கள், எண்ணெய், இரும்பு, அலுமீனியம், உப்பு, சுண்ணாம்புக்கல் போன்றவை முக்கிய உற்பத்திப் பொருட்கள் ஆகும்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 04.04.1998.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 238
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.


### வர்ணம் தீட்டும் போட்டி இல: 236

**பரிசுக்குரியவர்:**
ரெபேக்கா பர்னாந்து,
புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலயம், கொழும்பு-13.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எம். ஐனுல் றிஸ்மியா, சேர் ராசிக் பறீமு,மா.வி., பண்டாரவளை. | சி. சுலக்ஷனா, இந்து மகளிர் கல்லூரி, வெள்ளவத்தை. |
| ஆர். சுபத்ரா, இந்தகல தமிழ் வித்தியாலயம், இந்தகல. | செல்வி செ. சுபதர்ஷனி, பரி/ சாந்த கிளேயர் ம.மா.வித்தியாலயம், கொழும்பு-06. |
| செய்யட் அலி, மகா வித்தியாலய மாவத்தை, கொழும்பு-13. | சி. சுதாகர், சி/ நஸ்ரியா மத்திய கல்லூரி, சிலாபம். |
| வே. கோபிகா, தெகிவளை தமிழ் வித்தியாலயம், தெகிவளை. | எம். முனவ்வரா, அல்-அக்ஸா மத்திய கல்லூரி, கல்பிட்டி. |
| ஜே. அகல்யா பிரியதர்ஷினி, கண்டி வீதி, பேலியாகொடை. | ஏ. மௌலானா, வேலுவன வீதி, தெமட்டகொடை, கொழும்பு-09. |

# வெள்ளை மாளிகை



அமெரிக்க ஜனாதிபதியின் இருப்பிடம் தான் வெள்ளை மாளிகை.

இது அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த கட்டடக் கலைஞரான ஜேம்ஸ் ஹோபன் என்பவரால் வடிவமைக்கப்பட்டு 1792ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 13ம் திகதி கட்டி முடிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் இந்தக்கட்டடம் சாம்பல் நிற மணல் கற்களைக் கொண்டு கட்டப்பட்டது 1812 நடந்த போரில் இக்கட்டடம் கொளுத்தப்பட்டது.

ஜேம்ஸ் ஹோபனின் ஆலோசனைப்படி இக்கட்டடம் புதுப்பிக்கப்பட்டு 1817ல் முடிக்கப்பட்டது. தீயால் கறையான சுவர்களுக்கு வெள்ளை நிறத்தால் பெயிண்ட் பூசப்பட்டது. அதிலிருந்து இதற்கு 'வெள்ளை மாளிகை' என்ற பெயர் வந்தது. இருப்பினும் இந்த பெயர் 1902க்குப் பின்னர்தான் அலுவலக ரீதியாக அழைக்கப்பட்டது.

'வெள்ளை மாளிகை'யில் உள்ள நீல அறை ஜனாதிபதி மற்றும் அவரது மனைவிக்குமான வரவேற்பறை. சிவப்பு அறையில் மன்னர் காலத்துப் பொருட்கள் வைக்கப்பட்டிருக்கும். பச்சை அறையில் முன்னாள் ஜனாதிபதிகளான ஜோன் ஆதாம் மற்றும் தோமஸ் ஜெபர்ஸன் காலத்துப் பொருட்கள் வைக்கப்பட்டிருக்கும். இளஞ்சிவப்பு நிற அறையில்தான் ஜனாதிபதியும் அவரது குடும்பத்தாரும் வசிக்கின்றனர்.

# தந்தைகள்

1. கேத்திரகணிதத்தின் தந்தையாகக் கருதப்படுபவர் 'யூக்ளிட்'. இவர் கி.மு. 3ம் நூற்றாண்டில் கிரேக்க நாட்டில் வாழ்ந்தவர்.

2. பொருளாதார சாஸ்திரத்தின் தந்தையாகக் கருதப்படுபவர் 'அடம்ஸ்மித்'. இவர் 1723 முதல் 1790 வரை வாழ்ந்த ஆங்கிலேயர்.

3. வரலாற்றின் தந்தையாகக் கருதப்படுபவர் 'ஹெரோடிட்டஸ்'. கி.மு. 484 முதல் 424 வரை வாழ்ந்த கிரேக்க நாட்டவர்.

4. இரசாயனத்தின் தந்தையாகக் கருதப்படுபவர் 'ரொபேர்ட் பொய்ல்'. இவர் 1627 முதல் 1691 வரை வாழ்ந்த அயர்லாந்துக்காரர்.

5. நகைச்சுவையின் தந்தையாகக் கருதப்படுபவர் 'அரிஸ்டோ ஃபேன்ஸ்'. கிரேக்க நாடகாசிரியரான இவர் கி.மு. 445 முதல் 385 வரை வாழ்ந்தவர்.

6. ஆங்கிலக் கவிதை இலக்கியத்தின் தந்தையாகக் கருதப்படுபவர் 'ஜெஃப்ரி சாசர்' இவர் 1340 முதல் 1400 வரை வாழ்ந்த ஆங்கிலேயர்.

7. கணிதத்தின் தந்தையாகக் கருதப்படுபவர் 'தேல்ஸ்'. கிரேக்க நாட்டைச் சேர்ந்த இவர் கி.மு. 640 முதல் 546 வரை வாழ்ந்தவர்.

# பேனா வந்த கதை

இந்தியாவில் பண்டைக்காலத்தில் எழுதுவதற்கு ஓலைகளைப் பயன்படுத்தி வந்தனர். ஓலையில் எழுத இரும்பாலான



கூரிய ஆணியை உபயோகித்தனர். அதுவே எழுத்தாணி எனப் பெயர் பெற்றது.

பண்டைய ரோமாபுரியில் மக்கள் எழுதுவதற்கு பலகை மீது மிருவான மெழுகைப் பூசி அதன் மீது எலும்பாலோ, தந்தத்தாலோ, உலோகத்தாலோ செய்த கூர்மையான கருவியினால் எழுதினார்கள்.

அதன் பின்னர் அவர்கள் நீண்ட நாணல் புல்லை கூர்மையாகச் சீவி முனையில் பிளவு ஏற்படுத்தி அதில் மையைத் தோய்த்து எழுதும் பழக்கம் ஏற்பட்டது.

அதன் பிறகு வந்தது இறகுப்பேனா. பறவைகளின் இறகைச்சீவி முனையில் பிளவு ஏற்படுத்தி மையைத்தோய்த்து எழுதினார்கள். 18ம் நூற்றாண்டு வரை இறகுப்பேனாக்களே புழக்கத்தில் இருந்தன.

19ம் நூற்றாண்டிற்குப் பின்னர்தான் ஊற்றுப்பேனா கண்டுபிடிக்கப்பட்டது. அதன் பின் குண்டு முனைப் பேனா (BALL POINT PEN) கண்டுபிடிக்கப்பட்டது.

# உயிரினமும் அறிவும்

உலகில் உள்ள உயிரினங்கள் ஓரறிவு முதல் ஆறறிவு வரை உள்ளன என்று வகைப்படுத்தப்பட்டு உள்ளது. அவை என்னென்ன என்பவை வருமாறு:

**ஓரறிவு:**
தொடுவுணர்வு. புல், மரம் போன்றவை ஓரறிவுள்ள உயிரினங்கள்.

**ஈரறிவு:**
தொடுவுணர்வு, சுவையுணர்வு. நத்தை, சிப்பி, சங்கு போன்றவை ஈரறிவுள்ள உயிரினங்கள்.

**மூவறிவு:**
தொடுவுணர்வு, சுவையுணர்வு, நுகர்வுணர்வு. எறும்பு, கறையான் போன்றவை மூவறிவுள்ள உயிரினங்கள்.

**நாலறிவு:**
தொடுவுணர்வு, சுவையுணர்வு, நுகர்வுணர்வு, பார்வையுணர்வு. தும்பி, வண்டு போன்றவை நாலறிவுள்ள உயிரினங்களாகும்.

**ஐந்தறிவு:**
தொடுவுணர்வு, சுவையுணர்வு, நுகர்வுணர்வு, பார்வையுணர்வு, செவியுணர்வு. பறவைகளும் விலங்குகளும் ஐந்தறிவுள்ள உயிரினங்களாகும்.

**ஆறறிவு:**
தொடுவுணர்வு, சுவையுணர்வு, நுகர்வுணர்வு, பார்வையுணர்வு, செவியுணர்வு ஆகிய ஐந்தறிவுடன் பகுத்தறியும் உணர்வு. உயிரினங்களில் ஆறறிவுள்ளவர்கள் மனிதர்கள் மட்டுமே.

# விலையுயர்ந்த புத்தகம்



உலகில் அதிக விலைக்கு விற்கப்பட்ட புத்தகம் கிறிஸ்தவர்களின் புனித நூலான பைபிள் ஆகும். 1933ம் ஆண்டு இங்கிலாந்து அருங்காட்சியகம் (மியூசியம்) ரஷ்யாவிலிருந்த இந்த பைபிளை ஒரு இலட்சம் ஸ்டேர்லிங் பவுண்களிற்கு வாங்கியது.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# நந்தினி 440 வோல்ட்

"எலியா...?"
"தோட்டக்கார நஞ்சன் கடப்பாறையாலே ஒரு எலியை.... 'நச்'சுன்னு அடிச்சு.. ரத்தமெல்லாம்... சிதறி...."

"அதைப் பார்த்துட்டுதான் அப்படிக் கத்தினியா...? நல்ல பொண்ணுமா நீ... நாங்க என்னமோ ஏதோன்னு பயந்துட்டோம்..."

எல்லோரும் சிரித்துக் கொண்டே நகர-பாரி தலையில் கைவைத்துக் கொண்டு கட்டிலில் உட்கார்ந்தான். "போச்... மானம் போச்..."

நந்தினி அவனருகே வந்து உட்கார்ந்தாள்.

"என்னங்க நான் ரொம்பவும் கத்திட்டேனா...?"

"கத்தலா அது? சரியான காட்டுக் கத்தல்! நந்து ஏன் இப்படி எதுக்கெடுத்தாலும் பயப்படறே...? ஒரு எலியை அடிச்சுக் கொன்னதுக்காகவா அப்படி சத்தம் போடுவே? பார்.. எல்லோரும் சிரிச்சுட்டுப் போறாங்க..."

"ஸாரிங்க..."

"என்ன ஸாரி... உன்னவிட மூணு வயசு சின்னவ- எம் தம்பியோட ஒய்ப் சொப்னா. அவ எவ்வளவு தைரியமா இருக்கா.? மர்மக்கதை, திகில் கதை எல்லாமே படிக்கிறா.. ராத்திரி எந்நேரமானாலும் வெளியே போயிட்டு வர்றா. நீ ராத்திரியில பாத்ரூம் போகணும்ன்னாக் கூட நல்லா தூங்கிட்டிருக்கிற என்னைத் தட்டி எழுப்பித் துணைக்குக் கூட்டிட்டு போறே...!"

"நான் என்னங்க பண்ணட்டும்? தனியா வீட்ல உட்கார்ந்துட்டு இருந்தா நெஞ்சு பூராவும் படபடன்னு அடிச்சுக்குது. சுவத்துல ஊர்ந்து போற பாச்சையைப் பார்த்தா... என்னோட உடம்பு ரோமம் பூராவும் சிலிர்த்துக்குது... இருட்டைப் பார்த்தா இருட்டுல யாரோ நின்னுட்டிருக்கிற மாதிரி தெரியுது..."

"இரு... இரு... உன்னை பம்பாய்க்கு கூட்டிட்டு போய்... முன்ன பின்னே தெரியாத அந்த ஊர்ல ஒரு நாள் பூராவும் தனியா விட்டுடப் போறேன்..."

"அய்யோ... அப்படியெல்லாம் பண்ணிடாதீங்க.... நீங்க அஞ்சு நிமிஷம் என் பக்கத்துல இல்லேன்னா அந்த பயத்திலேயே செத்துடுவேன்."

"தோ பார் நந்தினி... ஒரு பாச்சையோ, கரப்பான் பூச்சியோ உன்னை என்ன பண்ணிடும்...? வெறும் இருட்டு உன்னை என்ன பண்ணிடும்...? மனசுல கொஞ்சம் கொஞ்சமா தைரியத்தை வளர்த்துக்கோ... இப்படி எல்.கே.ஜி படிக்கிற குழந்தையாட்டம் இருக்காதே..."

"சரிங்க..."

"நான் குளிச்சுட்டு வந்துடறேன்... நீ பேக்கில் மெட்டீரியல்லெ தனியா எடுத்து வை. நான் ஒரு தடவை வந்து செக் பண்ணிக்கிறேன்."

"சரிங்க...."– நந்தினி மெதுவாய் நடந்து உள்ளறைக்குப் போனாள். அவள் போகட்டும் என்று காத்திருந்த மாதிரி அறையின் மூலையிலிருந்த இண்டர்காம் "நீ நீ நீ" என்று கூப்பிட்டது.

போய் ரிஸீவரை எடுத்தான் பாரி. மறுமுனையில் வயலெட் பேசினாள்.

"ஸார் நான் வயலெட்..."

"சொல்லு வயலெட்... எனிதிங்க் இம்பார்ட்டெண்ட்...?"

"எஸ்... ஸார்... நீங்க கோயமுத்தூர் புறப்பட்டுப் போகிற கார்ல சம் ட்ரபுள். டிரைவர் மாணிக்கம் சொல்றார்..."

"மாணிக்கம் பக்கத்துல இருக்கானா?"

"ஆமா...."

"அவன்கிட்டே ரிஸீவரைக் கொடு வயலெட்." அவள் கொடுக்க, மறுமுனையில் மாணிக்கம் "குட்மார்னிங் ஸார்!" சொன்னான். பாரி கேட்டான்:

"என்ன மாணிக்கம், கார்ல என்ன ட்ரபுள்?"

"வண்டி ஸ்பீடா போறப்ப ஜர்க் ஆகுது ஸார்..."

"சரி பார்த்துடு..."

"ஒரு மணி நேரமாகும் ஸார்..."

"பரவாயில்ல பார்த்துடு...! பாம்பே ஃபிளைட் மத்தியானம் ரெண்டு மணிக்குதான். பன்னிரெண்டு மணிக்கு கோயமுத்தூர் போனாக்கூட போதும்..."

"சரி ஸார்..."

ரிஸீவரை வைத்துவிட்டுத் திரும்பினான் பாரி.

நந்தினி நின்றிருந்தாள்.

"ஃபோன்ல யார் கூட பேசினீங்க...?"

"டிரைவர் மாணிக்கம்...!"

"என்ன சொன்னான்?"

"கார் என்னமோ மக்கர் பண்ணுதாம்..."

"அய்யோ...!"

நெஞ்சில் கை வைத்த நந்தினி பயத்தில் வாய் பிளந்து- கண்கள் விரிய நின்றாள். பாரி சிரித்துக் கொண்டே அவளுடைய தோளைத் தட்டினான்.

"பயப்படாதே...! காரை சரி பண்ணிடுவான்!"

## கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்

# திக் திக் திக் 04

ராஜேஸ்குமாரின் கதை என்றால் விறுவிறுப்புக்கு பஞ்சம் இருக்காதல்லவா? அதனை மீண்டும் நிரூபிக்கும் விதமாக வாரா வாரம் அசுர வேகத்தில் நகரும் கதையிது:

கணேசமூர்த்தி அக்கம் பக்கம் பார்த்துக் கொண்டு- வீரபத்ரனிடம் மெல்லிய குரலில் சொன்னான்: "பெரிய நாய்க்கரும், அவரோட மச்சினன் பூபதி நாய்க்கனும் ஆட்களை விட்டு உங்க வீட்டுக் குடிசைக்குத் தீ வெச்சாங்க..."

"ஏன்? ஏன்?"

"ஊர்ல பலவிதமா சொல்லிருக்கறாங்க. எனக்குத் தெரிஞ்ச காரணத்தை சொல்லட்டுமா, வீரபத்ரா?"

"சொல்லு!"– வீரபத்ரனின் விழிகளில் நிஜமாகவே அனல் பறந்தது. கணேசமூர்த்தி சொல்ல ஆரம்பித்தான்: "பூபதி நாய்க்கனும் உன்னோட தங்கச்சியும் ஒருத்தரையொருத்தர் விரும்பிப் பழகிட்டிருந்தாங்க. அதனாலே உன்னோட தங்கச்சி கர்ப்பமானா. உன்னோட அம்மாவுக்கு விஷயம் தெரிஞ்சுப்போய்- மகளையும் கூட்டிக்கிட்டு நேராக பெரிய நாய்க்கர்க்கிட்டேயே நியாயம் கேக்கப் போயிருக்கா... அதனாலே வந்த வினைதான் இது. பெரிய நாய்க்கனும் சரி, பூபதி நாய்க்கனும் சரி, எப்பேர்ப்பட்ட ஆளுங்கன்னு கிராமத்துக்கு பூராவும் தெரியும். பூபதி நாய்க்கன், உன் தங்கச்சிகூட பழகவேயில்லைன்னு சொல்லிட்டான். பெரிய நாய்க்கன் வீட்டு நாயை அவிழ்த்துவிட்டு, உங்கம்மாவை தொரத்திருக்கான். நாயாலே கடிபட்டு நார் நாரா சேலை கிழிஞ்சு பைத்தியக்காரிய மாதிரி உங்கம்மா தெருவில ஓடி வந்தா..."

வீரபத்ரனின் உடம்பிலிருந்த இரத்தம் முழுவதும் உஷ்ணமாகி- கொதி நிலைக்குப் போனது. கண்களில் கத்திக்குத்து மாதிரி ஆவேசம் பதிந்திருந்தது.

கணேசமூர்த்தி தொடர்ந்தான்.

"உங்கம்மாவையும் தங்கச்சி பார்வதியையும் விட்டு வெச்சா விஷயம் வெளியே பரவிடும்னு நினைச்சு, இராத்திரியோட இராத்திரியா குடிசைக்குத் தீ வெச்சுக் கொளுத்திட்டாங்க.... பொலிஸ் வந்தாங்க. பெரிய நாய்க்கனுக்கும், பூபதி நாய்க்கனுக்கும் பயந்து போன ஊர் ஜனங்க யாரும் வாயைத் திறக்கலை. அடுப்புல இருந்த தீ கவனக் குறைவாலே கூரையில பட்டு தீப்பிடிச்சு செத்துப் போனதா பொலிஸ் முடிவு பண்ணிக் கேஸ் பைலை க்ளோஸ் பண்ணிட்டாங்க..."

வீரபத்ரன் நிமிர்ந்தான்.

"கணேசமூர்த்தி! பொலிஸ்ல நீ கூடவா சொல்லலை...?"

"நான் பொலிஸ்ல உண்மையைச் சொல்லலாம்னு இருந்தேன்... வீரபத்ரா! ஆனா என்னோட வீட்ல அம்மாவும், அப்பாவும் ரொம்பவும் பயந்திட்டாங்க. உண்மையைச் சொன்னா நம்ம வீட்டையும் அவங்க வீட்டை மாதிரி கொளுத்திடுவாங்கன்னு நினைச்சு என்னோட வாயைக் கட்டிப் போட்டுட்டாங்க..."

வீரபத்ரன் ஆவேசமாய்த் தன் கை முஷ்டியை சுவரில் ஓங்கிக் குத்தினான். சுவரின் சுண்ணாம்புக் காரை பொலபொல வென்று உதிர்ந்தது. "கணேசமூர்த்தி! அந்த பெரிய நாய்க்கனும் பூபதி நாய்க்கனும் பொலிஸ்கிட்டருந்து தப்பிச்சுடலாம். ஆனா என்கிட்டயிருந்து தப்பிக்கவே முடியாது...!"

என்று சொன்னவன் விறுவிறுவென்று– மேட்டுத் தெருவில் இருந்த நாய்க்கனின் பங்களாவை நோக்கி ஓடினான்.

"வீரபத்ரா! நில்லு. ஆத்திரப்படாதே...!" கணேசமூர்த்தி கத்தக் கத்த அதைப் பொருட்படுத்தாமல் ஓடினான் வீரபத்ரன்.

தெருமுலையிலிருந்து திரும்பியதும் எதிர்ப்பட்ட மட்டச்சாலையில் உட்கார்ந்து இளநீரை வெட்டிச் சாப்பிட்டுக் கொண்டிருந்த சுப்புக் கவுண்டனின் கையிலிருந்த அந்த பளபளப்பான வீச்சரிவாளை, அவன் 'ஏ....ஏ....ஏய்ய்....ஏய்ய்...' என்று பதறப் பதற பிடுங்கிக் கொண்டான்.

"இந்த அரிவாளுக்குக் கொஞ்சம் வேலையிருக்கு சுப்புக் கவுண்டர்... வேலையை முடிச்சுக்கிட்டு நானே கொண்டாந்து தர்றேன்."

ஓடினான்.

கிழக்குச் சூரியன் முழுசுமாய் வெளியே வந்து- பூமியை வெளிச்சத்தால் நனைத்திருந்தான். போர்வைகளைப் போர்த்திக் கொண்டு வீட்டுத் திண்ணைகளில் உட்கார்ந்திருந்த கிழங்கள், ரோட்டோரமாய் உட்கார்ந்து- இயற்கை உபாதைகளை வெளிப்படுத்திக் கொண்டிருந்த குழந்தைகள், அந்தக் குழந்தைகளுக்கு அருகே நின்றிருந்த பெண்கள்-



எல்லாருமே-

பளபளக்கும் அரிவாளோடு ஒரு சின்னப் புயல் மாதிரி போய்க்கொண்டிருந்த வீரபத்ரனைப் பயத்தோடு பார்த்தார்கள்.

இரண்டே நிமிஷம்!

வீரபத்ரன் மேட்டுத் தெருவுக்குள் நுழைந்தான்.

தெருக் கோடியிலிருந்த நாய்க்கரின் பங்களா சமீபத்திய பெயிண்ட் பூச்சில் தெரிந்தது. மூடிக்கிடந்த காம்பௌண்ட் கேட்டை காலால் எட்டி உதைத்தான் வீரபத்ரன்.

கேட் தன் இரண்டு கைகளையும் அகல விரித்துக்கொண்டு 'க்றீச்' சென்ற சத்தத்தோடு பின்னுக்குப் போனது.

போர்டிகோ தூணில் கட்டிப்போட்டிருந்த அல்சேஷன் நாய்- ஆக்ரோஷமாகி எம்பிக் குரைத்தது. "லொள்...லொள்..."

வீரபத்ரன் உள்ளே நுழைந்தான்.

அல்சேஷனின் குரைப்பு தீவிரமானது.

முண்டாசு கட்டி- இடுப்பில் நாலுமுழ வேட்டியைச் சுற்றியிருந்த ஒரு ஆள் தோட்டத்துப் பக்கத்திலிருந்து வெளிப்பட்டான் "யார் வேணும்...?"

"ரெண்டு நாய்க்கன்களும்..."

அந்த ஆள்- பயமாய் வீரபத்ரனைப் பார்த்துக்கொண்டிருக்கும்போதே- கதவு திறக்க- பெரிய நாய்க்கர் தன் நரைத்துப் போன லாட மீசையை வருடிக்கொண்டே வெளிப்பட்டார். கரகரப்பான குரலில் கேட்டார்: "யார் ராது...?"

அல்சேஷன் ஆக்ரோஷமாய்க் குரைக்கக் குரைக்க–

அதன் குரைப்பைப் பொருட்படுத்தாமல்–

போர்டிகோ படியேறினான் வீரபத்ரன்.

சொன்னான்:

"நான் தாண்டா... வீரபத்ரன்..."

"ஓ...ஊரைவிட்டு ஓடிப்போன வெறும் பயலா...? எப்போ வந்தே...? உங்கம்மாவும் தங்கச்சியும் குடிசை எரிஞ்சு செத்துப் போன விஷயம் தெரிஞ்சு வந்தியா...?"

"குடிசை தானா எரியலை...! அதுக்கு நெருப்பு வெச்சதே நீயும் உன்னோட மச்சினனும் தான்..."

நாய்க்கர் முகம் மாறினார்.

(தொடர்ந்து வரும்)

---

## கியூபாவில் யுவேரா என்னும் கிராமத்தில் இருந்த எதிரி நிலைகள்மீது நடத்தப்பட்ட தாக்குதல் பற்றி சேகுவேரா எழுதியதில் இருந்து

இலக்கைக் குறித்துக் கொண்ட பிறகு நாங்கள் தாக்குதலுக்கான திட்டங்களை வரைய ஆரம்பித்தோம். திட்டமிடலுக்காக நாங்கள் எதிரிப்படைகளின் எண்ணிக்கை, புறக்காவல் நிலையங்கள், அவர்களது செய்தித் தொடர்பு வசதிகள், அதை நெருங்குவதற்கான வழிகள் போன்ற விவரங்களைச் சேகரிக்க வேண்டியிருந்தது. பின்னாளில் புரட்சிப்படையின் மேஜராக விளங்கிய தோழர் கால்டிரோ இந்த விவரங்களைச் சேகரிப்பதில் மிகவும் உதவினார்.

எங்களைப் பற்றிச் சுருக்கமாக- குறைந்த அளவிலோ, அதிக அளவிலோ- எதிரிகள் அறிந்திருப்பார்கள் என்று நாங்கள் நம்பினோம் ஏனெனில் புரட்சிப்படைக் குழுக்கள் இருக்குமிடத்தின் அமைப்பைப் பற்றியும், எங்களது பலத்தைப் பற்றியும் அறிந்து வருமாறு, பாடிஸ்டாவின் ஆளான காஸிலாஸ் அனுப்பிய இரண்டு பேர் எங்களிடம் பிடிபட்டனர்.

மே 27ம் திகதி எல்லாத் தளபதிகளும் கூடினோம். விரைவிலேயே யுத்தம் ஆரம்பமாகி விடும் என்றும் அதற்கு எல்லாக் குழுக்களும் தாக்குதலுக்குத் தயாராக இருக்க வேண்டும் என்றும் பிடல் விரும்பினார்.

"யுவேரா கொத்தளத்தின் சுற்றுப் புறங்களைப் பற்றியும், கொத்தளத்தை அடையும் வழிகளைப் பற்றியும் அறிந்திருந்த கால்டிரோ எங்களுக்கு வழிகாட்டினார். நாங்கள் ஒரே இரவில் 16 கிலோமீட்டர் பயணம் செய்ய வேண்டியிருந்தது. அது ஒன்றும் அவ்வளவு சுலபமல்ல. மலைப் பாதை சுற்றிச் சுற்றிச் சென்றது. செங்குத்தான இறக்கங்களில் நடக்க வேண்டியிருந்தது. 16 கிலோமீட்டரைக் கடக்க எட்டு மணிநேரம் பிடித்தது.

பல இடங்களில்-குறிப்பாக ஆபத்தான இடங்களைக் கடக்கும்போது நின்று நிதானித்து எச்சரிக்கையோடு போக வேண்டியிருந்தது. இறுதியாகத் தாக்குமாறு உத்தரவிடப்பட்டது. நாங்கள் புறக்காவல் நிலையங்களைக் கைப்பற்றி எல்லா வழிகளிலும் கொத்தளத்தை நெருங்க வேண்டும் எனத் திட்டமிடப்பட்டது.

கொத்தளத்திற்கு அரணாக விளங்கிய புறக்காவல் நிலையங்களில் குறைந்தது நான்கு வீரர்களாவது இருப்பார்கள் என்று எங்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

அடர்ந்து வளர்ந்திருந்த புதர்களில் மறைந்து நகர்ந்து நாங்கள் எதிரியின் இடத்தை நெருங்க முடிந்தது.



கொத்தளத்திற்கு நேர் எதிரே சற்று உயரமான இடத்தில் இருந்த காவல் நிலையத்தைத் தாக்குவது என்று முடிவு செய்யப்பட்டது.

ஆனால் வீடுகளின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்படக்கூடாது என்று கடுமையாக உத்தரவிடப்பட்டிருந்தது. ஏனெனில் அங்கே பெண்களும், குழந்தைகளும் இருக்கக்கூடும்.

யுவேரா கொத்தளம் கடற்கரையில் இருந்தது. எனவே அதைச் சூழ்வதற்கு நாங்கள் மூன்று பக்கங்களிலும் முன்னேற வேண்டியிருந்தது.

பிலாடிரோவிலிருந்து சாலையிலுள்ள புறக்காவல் நிலையத்தை ஜோர்ஜ் சோடஸ், கில்லெர்மோ கார்சியா ஆகியோரது தலைமையிலான குழு தாக்க வேண்டும். இந்த மேட்டிற்கு எதிரே உள்ள புறக்காவல் நிலையத்தை அல்மெய்டாவின் குழு தாக்க வேண்டும் எனத் திட்டம் வகுக்கப்பட்டது.

## வெற்றிகரமான தாக்குதல்

பிடல் மேட்டிலுள்ள காவல் நிலையத்தைத் தாக்குவார். ராலின் தலைமையிலுள்ள பிரிவு எதிரிலிருந்து கொத்தளத்தைத் தாக்கும். நான் இடையிலிருந்து தாக்க வேண்டும். எனது பிரிவுக்கும், ராலின் பிரிவுக்கும் இடையில் காமிலோ, அமெய்ரஸ் தலைமையிலுள்ள குழு இருக்க வேண்டும். ஆனால் அவர்கள் இருட்டில் தடம் மாறி, எனக்கு இடதுபுறம் இருந்து போராட வேண்டியவர்கள் வலது பக்கம்வந்து விட்டார்கள். கிரெசென்னியோ பெரெஸ் தலைமையிலுள்ள குழு யுவேரா- சிவிரிக்கோ சாலையில் நின்று புதிதாக எதிரிகளது படைகள் வராமல் தடுக்க வேண்டும்.

மிகச் சீக்கிரமே யுத்தம் முடிந்து விடும் என்று கருதப்பட்டது. ஏனெனில் இது முற்றிலும் எதிர்பாராத தாக்குதல். ஆனாலும், நேரம் கடந்து கொண்டே இருந்தது. நாங்கள் இன்னும் திட்டமிட்ட இடங்களைச் சென்றடையவில்லை. எங்களது வழிகாட்டிகளான கால்டிரோவிடம் இருந்தும் உள்ளூர்வாசி இலிஜியோ மென்டோஸாவிடமிருந்தும் தகவல்கள் வந்து கொண்டே இருந்தன.

சூரியன் உதயமாகி விட்டது. ஆனால் இன்னும் தாக்குதல் ஆரம்பமாகவில்லை. நான் ஒரு மேட்டிலிருந்து பார்த்தபோது கொத்தளம் இன்னும் தூரத்தில் இருந்தது. ஆகவே இன்னும் முன்னேறி மிகவும் பொருத்தமான ஒரு இடத்தை அடைவது என்று முடிவு செய்தோம்.

எங்களது படைப்பிரிவு முன்னேறியது. கொத்தளத்திற்கு வரும் பாதைகளைக் கண்காணிக்க அமைக்கப்பட்டிருந்த புறக்காவல் நிலையத்தை நோக்கி அல்மெய்டாவின் பிரிவு முன்னேறியது. எனக்கு இடது புறத்தில் 'வெளிநாட்டுச் சேனை' யினரது போன்ற தொப்பிகளையும் 'ஜூன் 26 இயக்கம்' என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட சின்னங்களையும் அணிந்து கொண்டு காமிலோ சியன்ப்யூகோஸ் முன்னேறிக் கொண்டிருந்தார்.

எதிரிகள் எங்களைப் பார்த்து விட்டனர். உடனே சுட ஆரம்பித்தனர். ஆனால் நாங்கள் எங்களைப் பாதுகாத்துக்கொண்டு தொடர்ந்து முன்னேறினோம். மற்றப் பிரிவுகளிலிருந்து தடம் மாறியவர்கள் எங்களது அணியில் வந்து சேர்ந்தனர். அவர்களுள், பிலானிலிருந்து வந்திருந்த, போம்பா என்று அழைக்கப்பட்ட தோழர் மரியோ லீயல், அகுனா ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

எதிரிகள் மிகவும் கடுமையாகச் சுட்டுக் கொண்டிருந்தார்கள். ஒரு திறந்த வெளிவரை நாங்கள் வந்து விட்டோம். இனி அதைக் கடக்க வேண்டும். எதிரிகள் சுட்டுக் கொண்டிருந்தனர். எங்களிடமிருந்து சுமார் 60 மீட்டர் தூரத்தில்தான் எதிரியின் நிலை இருந்தது.

பதுங்கு குழிகளில் இருந்து எழுந்து இரண்டு வீரர்கள் வீடுகளை நோக்கி ஓடுவதை நான் பார்த்தேன். உடனே, நான் சுட ஆரம்பித்தேன். ஆனால் அதற்கு முன் அவர்கள் ஒரு வீட்டில் புகுந்து விட்டனர். இனி நாங்கள் சுட முடியாது. ஏனெனில் அங்கே பெண்களும் குழந்தைகளும் இருந்தார்கள்.

இதனிடையே, குழுவினர் திறந்தவெளியைக் கடக்க ஆரம்பித்துவிட்டனர். எங்கும் குண்டு வெடிக்கும் சப்தம் கேட்டுக்கொண்டிருந்தது. திடீரென்று என்னருகே யாரோ முனகும் ஒலியை நான் கேட்டேன். அது யாரேனும் பாடிஸ்டாவின் படைவீரனாக இருப்பான் என்று தோன்றியது, நான் எச்சரிக்கையோடு முனகல் நடந்த திசை நோக்கி நகர்ந்தேன். அங்கே மாரியோலீயல் கிடந்தான். அவரது தலையில் காயம்பட்டிருந்தது. உடனடியாகக் கட்டுப் போட வேண்டும். ஆனால் எதை வைத்துக் கட்டுவது?

சிறிது நேரம் கழித்து என் பின்னே வந்து கொண்டிருந்த ஜோல் இக்லிஸியெஸ், அவரைப் புதர்களுக்குள் இழுத்துச் சென்றார். பிறகு, நாங்கள் தொடர்ந்து முன்னேறினோம். பிறகு அகுனா குண்டடிபட்டு வீழ்ந்தார். நாங்கள் தரைகளில் படுத்துக்கொண்டு எதிரிகள் ஒளிந்திருந்த பாதுகாப்பு அரண்களை நோக்கிச் சுட்டோம். மிகத் துணிச்சலோடு போராடித்தான் அந்தப் பாதுகாப்பு அரணைக் கைப்பற்ற முடியும். எப்படியும் கைப்பற்றுவது என்று முடிவெடுத்து அந்தப் பாதுகாப்பு அரணை வென்றோம்.

ஏதோ சில நிமிடங்களே சண்டை நடந்தது போல் தோன்றினாலும் உண்மையில், முதன் முதலாகச் சுட ஆரம்பித்ததிலிருந்து, கொத்தளத்தைக் கைப்பற்றியவரை, இரண்டு மணி நாற்பத்தைந்து நிமிடம் சண்டை நடந்திருந்தது.

இறுதியில் எதிரிகளது வீரன் ஒருவன் மர வீட்டிலிருந்து கைகளைத் தூக்கிக் கொண்டு கீழே குதித்தான். எல்லாத் திசைகளிலிருந்தும் சரணடைகிறோம் என்று சப்தம் வந்தது. நாங்கள் எழுந்தோம். கொத்தளத்தை நோக்கி ஓடினோம்.

லொறி ஒன்றில் கருவிகளையும் மருந்துகளையும் ஏற்றிக்கொண்டு நாங்கள் மலையை நோக்கிக் கிளம்பினோம். நாங்கள், எங்கள் இருப்பிடத்திற்குச் சீக்கிரம் போய்ச் சேர்ந்தோம். அங்கே நாங்கள் காயம்பட்டோருக்குச் சிகிச்சை செய்தோம். இறந்தோரைச் சாலையின் அருகே புதைத்தோம். ■



படிப்பகம்

www.padippakam.com

மஞ்சள் தேய்த்துக் கொள்ளாமல் குளித்தால் எனக்குக் குளித்ததைப் போலவே இருக்காது. அழகாக மஞ்சள் தேய்த்துக் குளித்த முகத்தை பவுடர் பூசி நாசம் செய்து கொள்ள எனக்குப் பிடிக்காது.

–நடிகை எஸ்வரலெட்சுமி ஒரு பேட்டியில்... 'கலை' ஆகஸ்ட் 1943 இதழில்–

# மேக்கப் புன்னகை



**23**

# பட்டுக்கோட்டை பிரபாகர்

அந்த ஹோட்டல் அறை வசதியாக இருந்தது. தொலைக்காட்சிப் பெட்டி, குளிர் சாதனப் பெட்டி எல்லாம் இருந்தது.

ஆளுயரக் கண்ணாடியில் தன் 'வெங்கட ரெட்டி' வேஷப் பொருத்தத்தைப் பார்த்துக் கொண்டான் கதிரவன்.

கிரீம் நிற சில்க் ஜிப்பா. தார்ப்பாய்ச்சி கட்டின வேஷ்டி. வாயில் பீடா குதப்பல். நெற்றியில் திரிசூரணக் கோடு. ஃபோன் ஒலித்தது. வாஷ்பேஸினுக்கு ஓடி வாயை அவசரமாகக் கொப்புளித்து விட்டு வந்து எடுத்தான்.

"ஹலோ... கதிரவன் பேசறேன் யாரு?" என்றான்.

"முட்டாள்! நான் ஈஸ்வர் பேசறேன். இப்ப நீ வெங்கட ரெட்டி! இப்படி அறிவு கெட்டத்தனமா உன் சொந்தப் பெயரைச் சொல்றியே?"

"ஸாரி சார்"

"ஹோட்டல்ல வெங்கடரெட்டின்ற பேர்லதான் ரூம் போட்டிருக்கு. கொஞ்ச நாளைக்கு நீ கதிரவன்றதையே மறந்துடணும்."

"சரி சார்"

"ஃபோனை எடுத்ததும் ஹலோன்னு மட்டும் சொல்லு. அப்புறம் வெங்கட ரெட்டின்னு பேரைச் சொல்லு. புரிஞ்சுதா?"

"சரி சார்"

"சினிமாப் புயல் பத்திரிகைக்கு அனுப்பி வைச்ச அந்த லெட்டருக்கு ஏதாச்சும் ரெஸ்பான்ஸ் உண்டா? யாராச்சும் நேர்ல வந்து உன்னைச் சந்திச்சாங்களா?"

"இல்லை சார்... வர்றதா ஃபோன் செஞ்சாரு ஒருத்தர்"

"யாரு?"

"காசிநாதன்னு அந்தப் பத்திரிகைல ரிப்போர்ட்டராம்!"

"அவனா, ரொம்ப இடக்கு முடக்கா கேள்வி கேக்கறவனாச்சே... சரி... எப்போ வர்றேன்னான்?"

"இன்னும் கொஞ்ச நேரத்தில வருவார் சார். அவரை எதிர்பார்த்துத்தான் அவசர அவசரமா வெங்கடரெட்டி கெட்-அப்புக்கு மாறி காத்துக்கிட்டிருக்கேன்."

"இத பாரு, யாராச்சும் வர்றப்பதான் நீ கெட்-அப் மாத்திக்கிறது வேணாம். எப்பவுமே வெங்கடரெட்டி கெட்-அப்பில இரு."

"இந்த ட்ரெஸ் அசௌகரியமா இருக்கு சார்"

"பணம் வாங்கலை? பொறுத்துக்கோ. அந்தக் காசிநாதன் வந்துட்டுப் போனதும் எனக்கு ஃபோன் செய்!"

"சரி சார்"

"ஹோட்டல் ரூம்லேர்ந்து பண்ணாதே. வெளில வந்து ஒரு பப்ளிக் பூத்லேர்ந்து பேசு"

"ஏன் சார்?"

"முட்டாள்! ஹோட்டல்ல உன் ரூம் பில் கணக்குல லோக்கல் ஃபோன் கணக்கும் சேர்ப்பாங்க. அப்ப நம்பரும் நோட் செய்யலாம். நாளைக்கு எந்த வகையிலும் நான் பிராப்ளத்துல மாட்டிக்கக் கூடாது."

"அப்போ நான் பிராப்ளத்தில மாட்டிக்கிட்டா பரவாயில்லையா?"

"நான் சொல்லிக் கொடுத்தபடி கச்சிதமா செஞ்சிக்கிட்டு வந்தியன்னா மாட்டறதுக்கு சான்ஸே இல்லை. அப்படி ஒரு வேளை சிக்கல் ஏற்படற மாதிரி இருந்தா உன்னை இந்த விவகாரத்தில இருந்து விடுவிச்சித் தப்ப வைக்கிறதுக்கும் என்கிட்டே யோசனை இருக்கு."

"நீங்க எப்படியும் என்னைக் கைவிட்டுட மாட்டீங்கன்ற நம்பிக்கையிலதான் சார் நான் இதில தைரியமா இறங்கியிருக்கேன்."

"காசிநாதன் தான் உன்னைச் சந்திக்கப் போற முதல் ரிப்போர்ட்டர். பதற்றம் இல்லாம, கச்சிதமா இயல்பா பேசு."

"சரி சார்"

"வெச்சிடட்டுமா?"

"ஒரு நிமிஷம் சார்."

"என்ன?"

"அந்தக் காசிநாதன் என்னை ஃபோட்டோ எடுக்கணும்னு சொன்னா அதுக்கு அனுமதிக்கட்டுமா சார்?"

எதிர் முனையில் ஈஸ்வர் சில விநாடிகள் யோசித்தார்.

"தப்பில்லை. போஸ் கொடு. நீயா முன் வந்து உன்னை ஃபோட்டோ எடுக்கச் சொல்லாதே.. வெச்சிடறேன்"

கதிரவன் என்கிற வெங்கடரெட்டி ரிசீவரை ஒரு நீண்ட பெருமூச்சுடன் வைத்தான். ஒரு சிகரெட் பற்ற வைத்தபடி அறையில் மெதுவாக உலாத்தினான். ஜன்னல் அருகில் நின்றான். திரைச் சீலையை கயிறு இழுத்து நகர்த்தினான்.

கீழே எட்டு வடிவத்தில் ஒரு அழகான நீச்சல்குளம் தெரிந்தது. அதில் பலர் நீச்சலடித்துக் கொண்டிருந்தார்கள்.

நாற்காலியை இழுத்துப் போட்டு அமர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த கதிரவன் அழைப்புமணியின் சத்தத்தில் பார்வை திருப்பினான். எழுந்து சென்று கதவைத் திறந்தான்.

புன்னகையுடன் கை கூப்பினான். தோளில் கேமிரா அணிந்த காசிநாதன்.

"நான் காசிநாதன். 'சினிமாப்புயல்' பத்திரிகை ரிப்போட்டர். ஃபோன் பண்ணியிருந்தேனே..."

"வாங்கோ... உள்ளே வாங்கோ சார்"

காசிநாதன் உள்ளே வந்து அமர்ந்தான். எதிரே கதிரவன் அமர்ந்து, இன்டர்காம் எடுத்து, "காபி சொல்லட்டுமா?" என்று கேட்டு, காசிநாதன் தலையசைத்ததும் காபி ஆர்டர் செய்துவிட்டு வைத்தான்.

"மிஸ்டர் வெங்கடரெட்டி, உங்க லெட்டர் எங்களுக்கு ரொம்ப அதிர்ச்சியா இருந்திச்சி," என்ற காசிநாதன் ஒரு சிறிய டேப் ரிக்கார்டரை வைத்து அதன் ரெக்கார்ட் பட்டனை அழுத்தினான்.

"பல சமயங்கள்ல உண்மை அதிர்ச்சியாத்தான் இருக்கும்"

"வரிசையா ஒவ்வொண்ணா கேக்கறேன். உங்க முழுப்பேர் என்ன?"

"முழுப் பேரா? வெங்கட ரெட்டிதான்."

"நீங்க இப்ப எங்க இருக்கீங்க?"

"சொந்த ஊர் ஹைதராபாத் பக்கத்துல ஒரு கிராமம். இப்போ நான் ஹைதராபாத்ல இருக்கேன்."

"என்ன செய்றீங்க அங்கே?"

"ரெண்டு மூணு பிஸினெஸ் செஞ்சேன். எல்லாத்திலயும் நஷ்டம். அதனால, இப்ப கைல இருக்கிற பணத்தை பேங்க்ல போட்டுட்டு மாசா மாசம் அதில இருந்து வர்ற வட்டில வாழ்ந்துகிட்டு இருக்கேன்."

"ஹைதராபாத்ல உங்க கூட வேற யார் யார் இருக்காங்க?"

"நான் மட்டும்தான் இருக்கேன்."

"நடிகை மதுமிதா உங்க மனைவின்னு உங்க லெட்டர்ல குறிப்பிட்டிருந்தீங்க. அது சம்பந்தமா சொல்லுங்க."

"என்ன சொல்லணும்?"

"அது உண்மையா இல்லை ஒரு புகழுக்காகக் கொடுத்த அதிர்ச்சி ஸ்டேட்மெண்ட்டா?"

"புகழுக்காகவா?"

"சில பேருக்கு திடீர்னு தன் பேர் ஒரே ராத்திரியில உலகம் பூரா பரவணும். ஏதோ ஒரு விதத்தில தன்னைப் பத்தி எல்லாரும் பேசற மாதிரி ஏதாச்சும் செய்யணும்னு ஆசை வரும். உதாரணத்துக்கு சோனியா காந்தி மகள் பிரியங்கா என் மனைவின்னு ஒருத்தர் அறிக்கை விட்டார். அப்புறம் அவரைக் கைது செஞ்சிட்டாங்க. அதுக்காகக் கேட்டேன்."

கதிரவன் வாய்விட்டுச் சிரித்து, "என் விஷயத்தில அந்தமாதிரி கைது செய்யறதா இருந்தா, எனக்கு துரோகம் செஞ்சிட்ட மதுமிதாவைத்தான் கைது செய்யணும்," என்றான்.

"எதனால அப்படிச் சொல்றீங்க?"

"மதுமிதா என்னை புருஷனாவே மதிக்கறதில்லை."

"உங்க ரெண்டு பேருக்கும் எப்படிக் கல்யாணம் நடந்துச்சி? விபரமா சொல்லுங்க."

"அப்போ மதுமிதா நடிகை ஆகலை. ஸ்கூல்ல படிச்சுக்கிட்டிருந்திச்சு. சாயங்காலத்தில டைப் கத்துக்கிச்சு... அங்க நானும் கத்துக்கிட்டேன். மதுமிதா ரொம்ப அழகுன்னு நான் சொல்லித்தான் உங்களுக்குத் தெரிய வேண்டியதில்லை. அந்த அழகு என்னை அடிச்சிப் போட்டுடுச்சு."

"அப்புறம்?"

"மதுமிதா மேல ஒரு வெறித்தனமான காதல் வந்துடுச்சி. நேராப் பேச தயக்கமா இருந்திச்சு. என் மனசுல உள்ளதை எல்லாம் கொட்டி ஒரு பெரிய லவ் லெட்டர் எழுதினேன். அதை தைரியமா அவகிட்டே கொடுத்திட்டேன்."

"அதுக்கு என்ன ரியாக்ஷன்?"

"அதுக்கு மதுமிதா ஒரு பதில் எழுதிக் கொடுத்தா. அந்தப் பதில்லேர்ந்துதான் அவளும் என் மேல ஆசை வெச்சிருக்கான்னு தெரிஞ்சுக்கிட்டேன். அந்த லெட்டரைப் பார்க்கறீங்களா? மதுமிதா தன் கைப்பட எனக்கு எழுதின காதல் கடிதம்."

"காமிங்க!"

கதிரவன் எழுந்து சென்று, சூட்கேஸ் திறந்து ஒரு கடிதம் எடுத்து வந்தான். நீட்டினான்.

'அன்பரே,

உங்கள் ஆசைக் கடிதம் பார்த்ததும் முதலில் அதிர்ச்சியும், பிறகு வியப்பும் மேலிட்டது. அதிர்ச்சி– உங்களிடமிருந்து அப்படி ஒரு கடிதம் எதிர்பார்க்காததால். வியப்பு–என் மனதில் ஓடிக் கொண்டிருக்கும் அதே எண்ணங்களை நீங்கள் வார்த்தையாக்கியிருப்பதால்.

மேற்கொண்டு உங்கள் விருப்பத்தைப் பற்றிப் பெரியவர்கள்தான் முடிவு செய்ய வேண்டும். என் அம்மாவிடம் பேசுங்கள்.

தங்கள், மதுமிதா.

காசிநாதன் ஏற்கனவே மதுமிதாவின் கையெழுத்தை அறிந்திருந்ததால், இந்தக் கடிதத்தில் உள்ள கையெழுத்து நிச்சயமாக மதுமிதாவினுடையது என்பதை உணர முடிந்தது.

(தொடரும்)



# நில்–கவனி–முன்னேறு

## கவியரசு கண்ணதாசன்



என் இனிய நண்பர்களே!

பாண்டவர்கள் வனவாசம் புரிந்த காலம்.

நெருக்கமான வனத்தின் நடுவே கீற்று வேய்ந்ததொரு பர்ணசாலை.

இரவு நேரம்.

சில்வண்டுகளின் ஒலி.

தவளைகளின் ஓசை.

காற்று சுகமாக வீசிக்கொண்டிருந்தது.

ஒரு புறத்தில் தர்மரும் திரௌபதியும் பள்ளி கொண்டிருந்தார்கள்.

தர்மருக்கு அரைகுறைத் தூக்கம். அவர் திரும்பித் திரும்பிப் படுப்பதை திரௌபதி கவனித்தாள்.

கொஞ்ச நேரம் மயில் தோகையால் விசிறிப் பார்த்தாள்.

சுகமான காற்றோடு மயில் தோகையின் காற்றும் சேர்ந்தது.

அப்போதும் தர்மருக்குத் தூக்கமில்லை. மெதுவாகக் கேட்டாள்:

"தூக்கம் வரவில்லையா?"

"இல்லை. தூக்கம் வரக்கூடாது," என்றார் தர்மர்.

"ஏன்...?"

"தர்மம் தூங்கினால் அதர்மம் விளையாடி விடுகிறது."

"நம்மைப் பொறுத்தவரை தர்மம் தூங்கித்தானே விட்டது? நாட்டுக்கு ராஜா தர்மர்; ஏழைப் பங்காளர், வரையாது கொடுக்கும் வள்ளல்; மனமறிய எந்த உயிருக்கும் தீங்கு புரியாதவர்; அந்த ராஜா தர்மர் தோல்வியடைந்தாரென்றால் தர்மம் விழித்துக் கொண்டிருப்பதாகவா பொருள்?"

திரௌபதியின் கண்களிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் தர்மரின் மார்பில் விழுந்தது.

மகாராஜா தர்மர் எழுந்து உட்கார்ந்தார்.

"தர்மம் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு முறை சோதிக்கிறது. அந்த சோதனையில் மீண்டு வரும்போது உடல் இரும்பாகவும், உள்ளம் வைரம் பாய்ந்த மரமாகவும் ஆகிவிடுகிறது. சோதனைக்குப் பிறகே மனிதன் புதியவனாகிறான்.

திரௌபதி! எதிர் வெயிலில் நடந்து போகும்போது முகத்திலும் மார்பிலும் வெய்யில் படிகிறது! முதுகிலே நிழல் படிகிறது. ஒரு பக்கத்து ஒளியே மறுபக்கத்து நிழல். வெயிலுக்குப் பயந்தவன் நிழலை அனுபவிக்க முடியாது. நமக்கு ஏற்பட்ட சோதனைகளிலெல்லாம் இதுவே பெரிய சோதனை. இதுவே கடைசிச் சோதனை.

–தர்மத்தின் வெய்யில் இப்போது நம் மீது அடிக்கிறது. அதன் நிழலும் நம் முதுகிலேதான் இருக்கிறது."

எந்தவித சலனமுமில்லாமல் பேசி முடித்த தர்மர், நிம்மதியாக ஒரு பெருமூச்சு விட்டார்.

குளிர்ந்த காற்றை மீறிக்கொண்டு அந்த மூச்சின் வெப்பம் திரௌபதியைத் தாக்கிற்று.

"பிரபு! ஏனிப்படி அனலடிக்கிறது?"

தர்மர் சொன்னார்:

"நெஞ்சிலே நியாயம் குளிர் காய்ந்து கொண்டிருக்கிறது. அந்த வெப்பம் நாசி வழியாக வருகிறது."

திரௌபதி சொன்னாள்:

"நான் மகாராஜா தர்மரை நம்புகிறேன். ஆனால் தர்மம், நியாயம் இவற்றில் நம்பிக்கை இழந்துவிட்டேன். நாணயமான மனிதன் வனவாசம் புரிவதும், கேவலமான கூட்டம் அரியாசனம் ஏறுவதும் தர்மத்தின் சோதனையென்றால், அந்த சோதனைக் காலத்தில் நாணயங் கெட்டவர்களாக இருந்து வாழ்க்கையை அனுபவிப்பதையே பலர் விரும்பமாட்டார்களா? பிரசித்தி பெற்ற சிற்பி செய்த சிலை, நதியோரத்தில் துணி துவைக்கும் கல்லாகக் கிடக்கிறது. ஆரவாரமிக்க போலிக் கலைஞர்களின் சிற்பத்துக்கு அபிஷேகம் நடக்கிறது. ஆயுள் காலத்தில் பெரும்பகுதி நல்லவர்களுக்குத் துயரத்திலேயே கழிகிறது. தத்துவங்களுக்கும் நடைமுறைக்கும் சம்பந்தமேயில்லை. மகாராஜா தர்மரைப் பற்றி உலகம் நினைப்பதற்கும் இறைவன் நினைப்பதற்கும் ஏனிந்த வித்தியாசம்?"

தர்மர் சிரித்தார்.

"அந்த வித்தியாசத்திலேதான் தர்மனின் அழியாத பெரும் புகழ் அடங்கிக் கிடக்கிறது திரௌபதி! காய்த்த மரத்தில் தானே கல்லடி விழுகிறது! மகாராஜா தர்மன் அரியாசனத்தில் இருந்தபோது அவன் மாளிகையின் முன்னே பெருங் கூட்டம் கூடிக் கிடந்தது. இப்போது இந்த அமைதியான வனவாசத்தில் கூட்டம் குறைந்திருக்கிறது. அப்போது என்னைப் பார்க்க வந்தவர்கள், தங்கள் காரியங்களுக்காகப் பார்க்க வந்தார்கள். இப்போது என்னைப் பார்க்க வருகிறவர்கள்தான் உண்மையாக என்னை நேசிக்கிறவர்கள். என்னிடம் எதுவும் கிடைக்காது என்று தெரிந்தும் என்னைப் பார்க்க வருகிறார்கள். உண்மையான மனிதர்களை அடையாளங் கண்டு கொள்ள இந்த வனவாசம் எவ்வளவோ உதவுகிறது! சூதாட்டத்தில் என்னைத் தோல்வியடையச் செய்த தர்மம், அரசியலில் எவ்வளவு சூதாடிகள் இருக்கிறார்கள் என்பதைக் கண்டு கொள்ள இந்த வாய்ப்பைத் தந்திருக்கிறது. இந்த வனவாசம் முடிந்து மீண்டும் நான் அரியாசனம் ஏறும்போது மனிதர்களை இனங்கண்டு அரவணைக்கும் சக்தி எனக்கு வந்து விடுகிறது. பெரிய வாழ்க்கையிலிருந்து சிறிய வாழ்க்கை; மாளிகையிலிருந்து மண்குடிசை; ஆரவாரத்திலிருந்து அமைதி; குழப்பத்திலிருந்து தெளிவு; வெற்றி பெற்றவர்கள் தங்கள் மார்பையே பார்க்க முடியாமலிக்கிறார்கள். தோல்வியுற்றவர்கள் தங்கள் முதுகையும் பார்க்கிறார்கள். அதன்மீது படிந்திருக்கும் நிழலையும் பார்க்கிறார்கள். அடுத்து நடக்கப் போகும் நிகழ்ச்சிகளையும் கணிக்கிறார்கள். நம் வாழ்வில் இனி என்ன நடக்கப் போகிறது என்பது பற்றி நான் சரியான முடிவுக்கு வந்து விட்டேன். அந்த முடிவை நீயும் சந்திக்கும் போது தர்மத்தின் மீது உனக்கும் நம்பிக்கை பிறக்கும்."

திரௌபதி சொன்னாள்:

"தர்மத்தை நான் சந்திக்கும் வரையில் நான் உயிரோடு இருக்க வேண்டும்."

தர்மர் சொன்னார்:

"தர்மம் உயிரோடு இருக்கும் வரை நாம் அதைச் சந்திக்காமற் போவதில்லை. அமைதியாகத் தூங்கு."

தர்மர் பலகையை இழுத்து வைத்துக் கொண்டு அதன்மீது தலையைச் சாய்த்தார்.

தர்மரின் தலை கொஞ்ச நேரம் தற்காலிகமாகச் சாய்ந்து கிடந்தது. ஓய்வுக்காகச் சாய்ந்து கிடந்தது தர்மரின் தலைமட்டுமல்ல; தர்மத்தின் தலையும் கூட. காலையில் தர்மர் விழித்தார். காலம் கடந்து தர்மம் விழித்தது.



படிப்பகம்

www.padippakam.com

# பொய் மெய்யானபோது!

அன்று வெள்ளிக்கிழமை. 'பாங்கோலி' கேட்டு, ஜும்ஆ தொழுகைக்காக மக்கள் பள்ளி வாசலை நோக்கிச் செல்கின்றனர். கூட்டத்தோடு கூட்டமாய் ஜவ்பர் ஹாஜியாரும் பள்ளிக்குச் சென்று ஒரு மூலையில் அமர்ந்து, கதீபின் 'குத்பா' பிரசங்கத்தை கேட்க ஆரம்பித்தார்.

"... அல்லாஹுத ஆலா, இஸ்லாத்தின் கடைசிக் கடமையாக இந்த ஹஜ்ஜை பிரகடனப்படுத்தி, பணவசதி படைத்த ஒவ்வொருவருக்கும் இதை கட்டாயக் கடமையாக்கினான். பணவசதியுடன், மனவுறுதி, உடல் உறுதி உடையவர்கள் இதைக் கட்டாயம் செய்ய வேண்டும்.

ஹஜ்ஜிக்காகச் செல்பவர்களின் நோக்கம் தூயதாக இருக்க வேண்டும். இன்று பல்வேறு நோக்கங்களுடன் ஹஜ்ஜிக்குச் செல்கின்றவர்களும் உண்டு. உழைப்பதற்காக, பொருள் கொண்டு வருவதற்காக, பெருக்காகவும், புகழுக்காகவும்..."

பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்த ஜவ்பர் ஹாஜியாரின் எண்ணங்கள் கடந்த காலத்தை நோக்கிச் செல்கின்றன.

ஏழு வருடங்களுக்கு முன்–

நோன்புப் பெருநாள் முடிந்து, ஆறு நோன்பும் முடிந்த பின்னர், இந்த முறை யார்யாரெல்லாம் ஹஜ்ஜிக்குப் போகிறார்கள் என்பதே ஊர் முழுக்க பேச்சாக இருந்தது.

"ஜவ்பர் முதலாளியும் ஹஜ்ஜிக்குப் போகிறாராம்!" என்பதுதான் ஊர் மக்களுக்கு பெரிய ஆச்சரியம்.

"என்றோ சென்றிருக்க வேண்டியவர், இப்பவாவது அல்லாஹ்வின் நாட்டத்தால் ஆயத்தமானாரே!" என்றனர் சிலர்.

ஜவ்பர் முதலாளி பெரும் செல்வந்தர். செல்வத்தை எந்த வழியிலேனும் பெருக்குவதில்தான் குறியாக இருப்பார். ஆனால் இப்போதோ மனைவியும் ஒரேயொரு மகளும் மட்டும்தான்.

மனைவியையும், மகளையும் கூட கூட்டிச் செல்ல வசதி இருந்தும், அவர் மட்டும் தனியே ஹஜ்ஜிக்குச் சென்றுவிட்டார்.

சவூதி அரேபியாவில்–

ஹஜ் கடமையை முடித்துக்கொண்டு தாய் நாடு திரும்புவதற்காக விமான நிலையம் வந்த இடத்தில், அதிகாரிகள் குறிப்பிட்ட அளவுக்குக் கூடிய பொருட்களை கொண்டு செல்ல முடியாது எனக் கூறவே, ஜவ்பர் ஹாஜியார் ஆடிப்போய்விட்டார்.

நகைகள், கடிகாரங்கள், உடுப்புக்கள் என தேவைக்கதிகமாகவே வாங்கிவிட்டார். இலங்கையில் கொண்டு போய் விற்று ஹஜ் செலவை 'கவர்' பண்ணலாம் என நினைத்துவிட்டார். விமான நிலைய அதிகாரிகள் அரபியிலும், கொச்சை ஆங்கிலத்திலும் ஏதேதோ கூற, இவர் ஒன்றும் தெரியாமல் முழிக்க நேரம் சென்றுகொண்டேயிருந்தது.

அதிகாரிகள் மேலதிகமாக உள்ள பொருட்களை தெிக்க ஆரம்பித்ததும், இவர், நெஞ்சில் அடித்துக்கொண்டு "மிஸ்கின்,



மிஸ்கின் நான் ஒரு மிஸ்கின்," எனக் கத்தத் தொடங்கிவிட்டார். (மிஸ்கின்=ஏழை) இவரை ஒருவித ஏளனத்துடனும், கண்டிப்புடனும் நோக்கிய அதிகாரிகள் (அரபியில்) "கொண்டுபோ, போ.... தொலை," எனக் கூறி சைகை செய்தனர்.

ஜவ்பர் முதலாளிக்கு தன் தந்திரம் பலித்ததில் மட்டற்ற மகிழ்ச்சி.

விமானம் அமைதியாக புனித பூமியை விட்டு தூரப்படுகிறது. ஜவ்பர் முதலாளியின் நினைவும் வானில் மிதக்கிறது. 'அடுத்த முறை ஹஜ்ஜிக்கு மனைவியையும், மகளையும் கூட்டி வரனும்; இத்தடவை வருவதும் சம்பாதிப்பதற்கு இப்படியும் ஒரு வழி இருக்கிறது என்று தெரியாமல் போய்விட்டதே. இந்த வருஷமே அவர்களையும் கூட்டிக்கொண்டு வராமல் இருந்தது எவ்வளவு மடத்தனம்... ஹூம்!' பெருமூச்சு விட்டார் ஜவ்பர் ஹாஜியார்.

இலங்கையில்–

ஜவ்பர் முதலாளி இப்போது ஹாஜியார். புதிய ஹாஜியாரைக் காணவும், ஸலாம் கொடுக்கவும் ஊர் மக்கள் வந்த வண்ணமே இருந்தனர்.

நாட்கள் நகர்ந்தன.

ஒருநாள் ஜவ்பர் ஹாஜியாரின் மனைவி மயக்கமுற்று விழவே டாக்டர் கலிராஜிடம் காட்டினார்கள். அதன் பின்னர் அடிக்கடி டாக்டரை காணவேண்டியேற்பட்டது. கடைசியில் சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், கர்ப்பப்பையில் புற்று ஏற்பட்டுள்ளதாகவும் டாக்டர்கள் அறிவிக்கவே, இந்தியாவுக்கு சிகிச்சைக்காகச் செல்ல வேண்டியேற்பட்டது. ஏகப்பட்ட செலவுகளின் பின் ஹாஜியாரின் மனைவி மரணமடைந்துவிட்டார்.

காலங்கள் ஓடின.

தாய்க்காக தனது சிறுநீரகங்களில் ஒன்றை தியாகம் செய்த மகளும் அதனால் ஏற்பட்ட பல 'கொம்ப்ளிகேஷன்' (Complication) காரணமாக இறந்துவிட்டாள்.

ஜவ்பர் ஹாஜியார் தனிமைப்படுத்தப்பட்டார்.

மனைவியினதும், மகளினதும் வைத்திய செலவுக்காக சொத்துக்களை ஒவ்வொன்றாக விற்றவர், கடைசியில் வீட்டையும் அடகு வைத்தார். இன்று அவர் உண்மையாகவே ஒரு 'மிஸ்கீன்'.

"ஹாஜியார் எழும்புங்க தொழப் போறாங்க!" என்று பக்கத்தில் நின்றவர் தட்டவே, சுயநினைவுக்கு வந்த ஹாஜியார் ஜும்ஆ தொழ ஆயத்தமானார். தொழுகை முடிந்து அனைவரும் சென்றுவிட்டனர். ஹாஜியார் மட்டும் பள்ளியில் இருப்பதைக் கண்ட ஒருவர், "ஹாஜியார் சாப்பிட்டிங்களா? வாங்க எங்கட வூட்டுல சாப்பிடலாம்," என்றார்.

"ஓ, பாரூக் தம்பியா?" எனக் கூறிக் கொண்டே எழுந்தவர், பள்ளியை விட்டு வெளியேறினார்.

**ரம்புக் எலையூரான்**

நடந்து கொண்டே, "தம்பி, இந்த முற நீங்களும் ஹஜ்ஜுக்கு போகப் போறதா கேள்விப்பட்டேன், நல்ல விஷயம்." சற்று நிதானித்தவர் மீண்டும், "தம்பி, என்ன ஒரு பாடமா எடுத்துக்கொண்டு போங்க, பொருள் கொண்டுவாற நோக்கத்தோடயோ இல்லாட்டி சம்பாதிக்கிற நோக்கத்தோடயோ இல்லாம ஹஜ்ஜுடைய நோக்கத்தோட மட்டும் போங்க! தவறியும் அங்கே, அந்த புனித மண்ணுல பொய் சொல்லிப் போடாதீங்க. அந்த புனிதமான எடத்துல நான் 'மிஸ்கின்'– பரம ஏழை என்று பொய் சொன்னது இன்று மெய்யாகிவிட்டது பார்த்தீங்களா?" எனக் கூறும்போதே கண்ணீர் பொலபொலவெனக் கொட்டியது. ■

# விடியாத இரவு

இரவு மணி நடுச்சாமத்தை நெருங்கிக் கொண்டிருக்கின்றது. சுமதியின் கண்களிலிருந்து வழிகின்ற கண்ணீர் தலையணையில் வீழ்ந்து ஊறிக்கொண்டிருக்கின்றது. இடையிடையே விம்மல் ஒலி– அவள் எவ்வளவோ முயற்சி செய்தும் அவளையும் மீறி அந்த இரவினை அமர்க்களப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

மனம் தன் துயரச்சுமைகளை பகிர்ந்து கொள்ள யாரையாவது நாடுகின்றது. ஆனால் அத் துயரங்களை யாரும் காதுகொடுத்துக் கேட்காத போது...

இவ்வாறே சுமதியின் மனத்துக்குள்ளும் பெரும்சுமை. இறக்கிவைக்க வழி தெரியவில்லை. நெஞ்சு கனத்து விம்மிவெடித்துக் கொண்டிருந்தது. 'அழுதாவது பாரத்தை இறக்கி விடலாம்' என்று நினைத்தவள், இப்போது பல இரவுகளாக நித்திரையின்றி கண்ணீர் வடிக்கின்றாள்.

படுக்கையை விட்டு எழுந்தவள், யன்னலின் ஊடாக இருளை வெறித்துப் பார்த்தாள். இரவின் கண்கள் "விடிவு இப்போதைக்கு இல்லை!" என்பதைத் தெளிவாகக் காட்டிக் கொண்டிருந்தது.

வாய்விட்டுக் கதறவேண்டும் போல் இருந்தது அவளுக்கு. படுக்கைக்கு வந்தவள் முகத்தை தலையணைக்குள் புதைத்துக் கொண்டு மீண்டும் அழத்தொடங்கினாள்.

திடீரென எழுந்தவள், மின்விளக்கின் பொத்தானை அழுத்திவிட்டு, காலை தபாற்காரனின் கையில் இருந்து பெற்ற கடிதத்தை உரத்து வாசித்தாள்.

*அன்பின் சுமதிக்கு,*

*இக்கடிதத்தை செஞ்சிலுவை சங்கத்தின் உதவியுடன் உனக்கு அனுப்பிவைக்கிறேன். அவர்கள் இன்று காலை எங்களைப் பார்க்க வந்ததால் உடனடியாக எழுதி அனுப்புகிறேன். இதைவிட எனக்கு இன்னொரு சந்தர்ப்பம் கிடைக்குமா? என்பது சந்தேகமே.*

*நான் கைது செய்யப்பட்ட நாட்களில் இருந்து சித்திரவதை அனுபவித்து வருகின்றேன். இன்னமும் தொடருமா? தொடரும். தவிர்க்க முடியாத காரணத்தால்– வேதனையின் கொடூரத்தால் நான் ஒரு பயங்கரவாதி எனவும் என்னை ஆயுதங்களுடன் கைது செய்தார்கள் எனவும் வாக்குமூலம் கொடுத்து விட்டேன். ஆகவே இன்னமும் நான் இந்தச் சிறைக்கம்பிகளுக்குள் இருந்து விடுபடுவேன் என்ற நம்பிக்கை எனக்கில்லை.*

*ஆகவே, உன் வாழ்க்கையை நீ புதுப்பித்துக்கொள்.*

*இப்படிக்கு, சிவநேசன்.*

எவ்வளவோ எதிர்பார்ப்புக்களுடன் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வந்த சிவநேசன், விரைவில் வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொள்வதற்கு தயாராகிக் கொண்டிருந்த வேளையில்தான் அந்தச் திடீர்ச்சம்பவம் நிகழ்ந்தது.

கொழும்பில் அதிகரித்த தேடுதல் நடவடிக்கையின்போது இவன் இருந்த வீடும் சுற்றிவளைக்கப்பட்டு, விசாரணைக்காக அழைக்கப்பட்டான். முடிவில், பயங்கரவாதியாக முத்திரை குத்தப்பட்டு சிறைக்கதவுகளை தன் வாழ்க்கையின் சின்னமாக ஏற்றுக் கொண்டுவிட்டான்.

தன்னிடமிருந்து அவன் விடைபெற்றுச் சென்ற அந்த இறுதி நிமிடங்களை எண்ணிப் பார்த்தாள் சுமதி.

"சுமதி, கவலைப்படாதை. நான் வெளிநாடு போய் இரண்டுவருடம் வேலை செய்திட்டு வந்தால், இரு வீட்டாரின் சம்மதத்தோடு கலியாணம் செய்து சந்தோசமாய் வாழலாம்." கண்கள் கலங்க சிவநேசன் கூறினான்.

●○

மாதங்கள் பல உருண்டோடின.

மாலை ஆறரை மணியிருக்கும். அன்றைய தினசரியில் பார்வையை செலுத்திக் கொண்டிருந்த சுமதியின் கண்களில் பட்டது அந்த வியக்கத்தகு தலைப்பு: "வெலிக்கடைச் சிறையில் இருந்து பதினைந்து பேர் விடுதலை!"

கீழே தொடர்ந்து பார்வையைச் செலுத்தியவளின் கண்களில் ஆனந்தக் கண்ணீர். சிவநேசனின் பெயரும் உள்ளடங்கலாகியிருந்ததுடன் அவர்கள் கப்பல் மூலம் யாழ்ப்பாணம் அனுப்பப்பட்டுள்ளார்கள் என்றும் காணப்பட்டது. துள்ளிக்குதித்தாள். அவளின் முகத்தில் ஆனந்தம் கரைபுரண்டோடியது.

'நாளைக் காலை கோயிலுக்குப் போய்



**யாழ் ஞானகணேசன்**

அர்ச்சனை செய்ய வேணும். கும்பிட்ட தெய்வம் என்னைக் கைவிடவில்லை.' மனத்துக்குள் நினைத்துக் கொண்டாள்.

இரவு முழுவதும் நித்திரையின்றி கண்கள் விழித்திருந்தாள். இடையிடையே தனக்குள் சிரித்துக் கொண்டவளுக்கு இரவின் மீது வெறுப்பு ஏற்பட்டது. 'சீ என்ன இது இன்னமும் விடியுதில்லை!' மனத்துக்குள் திட்டிக் கொண்டாள்.

'இன்னமும் சில மணித்தியாலங்களில் என் சிவநேசன் காங்கேசன்துறை துறைமுகத்தில் வந்திறங்கி விடுவான்.' மனது துள்ளியது.

கப்பல் துறைமுகத்தை அண்மித்துக் கொண்டிருந்தது. இடையிடையே அலறல் சத்தம் ஒன்று எல்லோரையும் திகைக்க வைத்துக்கொண்டிருந்தது.

"என்ன, இந்தப் பெடியன் இடைக்கிடை கத்திக் கொண்டிருக்குது?" கப்பலில் இருந்த வயோதிபர் ஒருவர் கேட்டார்.

"அதுக்கு விசராக்கிப் போட்டுதாம். அவங்கள் அடிச்ச அடியிலை தட்டிப்போட்டுது– பாவம்." இன்னொருவரின் பதில் இது.

"ஐயோ, என்னை அடிக்காதைங்கோ, அடிக்காதைங்கோ!" சிவநேசனின் வாயில் இருந்து வெளிப்பட்ட அலறல் சத்தம் வானைக் கிழித்தது.

அகலாத இருள் மண்டலம் தன்னைச் சூழ்ந்துள்ளதை சுமதியால் எங்கே உணர முடியப்போகிறது? அவள் இன்னமும் விடிவுக்காகக் காத்துக்கிடக்கிறாள். ■

# சுடக்கூடாத நிஜங்கள்

"வினு, இதுக்காகவா கவலைப்படுவாங்க? வாழ்க்கைனா எல்லாம்தான் இருக்கும் வசதி இல்லை என்பதால யாராவது படிப்பை நிறுத்துவாங்களா?"

"இல்லை மஞ்சு, எப்போதாவது இப்படிக் கஷ்டம்னா தாங்கிக்கலாம். படிக்க வசதியில்லாதவங்க படிக்கக்கூடாது. எனக்கென்னவோ வாழ்க்கையே பிடிக்கலை!"

"இதோ பார் வினு! வாழ்க்கையை நேசிக்க வேண்டிய வயசு இது. நம்பிக்கையோட போராட வேண்டிய பருவத்திலே விரக்தி அடைந்தால் எப்படி? இந்தா பணம்.. ஃபீஸ் கட்டு. இது கடைசி டேர்ம். பரீட்சையை நல்லா எழுது. மற்றதை பிறகு யோசிக்கலாம்."

அவன் கையில் பணத்தைத் திணித்துவிட்டு மஞ்சுளா வேகமாக நடந்தாள். கண்கலங்க அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்தான் வினு.



மஞ்சுவும் அவனும் ஒரே வகுப்பில் படித்தாலும் அவளை தூரத்திலிருந்தே பார்த்து இரசித்தவன் வினு. காரை அவளே ஓட்டிக் கொண்டு கல்லூரிக்கு வருவாள். முகத்தில் எப்போதும் புன்சிரிப்பு இருக்குமே தவிர யாருடனும் அதிகம் பேசமாட்டாள். வினு புத்தகம் வாங்க கஷ்டப்படுவதை அறிந்து ஒருமுறை அவனுக்குப் பணம் கொடுத்து உதவியிருக்கிறாள். அதைத் திருப்பித் தர அவன் எவ்வளவோ முயன்றான், முடியவில்லை. அவள் முகத்தைப் பார்க்கவே வெட்கப்பட்டு ஒதுங்குவது அவனுக்கு வழக்கமாயிற்று.

ஒருநாள் அவளே அவனை எதிர்கொண்டாள். "என்ன வினு, இப்ப எல்லாம் என்னைப் பார்த்தால்கூட பேச மாட்டேங்கறே?"

"குற்ற உணர்ச்சி மஞ்சு, கடனாகத்தான் வாங்கிக் கொள்வேன் என்று சொன்னேன். நீயும் சம்மதிச்சே. கொடுக்க முடியலை. அதனால்தான்..."

"சின்ன விஷயங்களை எல்லாம் நீ ரொம்ப யோசிக்கறே வினு. கடனுக்கு நான் தவணை விதிக்கலை. அப்புறம் உனக்கு எதற்காக குற்ற உணர்ச்சி?"

"அது உன் பெருந்தன்மை மஞ்சு. அதை நான் தவறாகப் பயன்படுத்தக்கூடாது இல்லே?"

"தவறாக நினைக்காதே வினு. வசதியில்லாததால் உனக்கு ஒரு தாழ்வு மனப்பான்மை. அது தேவையே இல்லை. ஒரு ஸ்நேகிதி செய்த உதவியாக நீ ஏன் நினைக்கக் கூடாது?"

வினுவின் மனதில் இனம் புரியாத உற்சாகம் ஊற்றெடுத்தது. அவன் அடிமனதில் ஒளிந்திருந்த உணர்ச்சிகள் இன்ப அலைகளாக உடலெங்கும் பரவிப் படர்ந்தது. மஞ்சுவின் இளமையும் அழகும் திடீரென்று அவன் கண்களை பளீரென்று தாக்கின.

"என்னை மன்னித்துவிடு மஞ்சு. உணர்ச்சி வசப்பட்டு ஏதேதோ பேசிட்டேன்."

"டேகிட் ஈஸி. நான் வர்றேன்!"

கல்லூரியில் எத்தனையோ இளைஞர்கள் இருக்க தன்மீது மட்டும் ஏன் இவ்வளவு அக்கறை காட்டுகிறாள்? அவள் பணக்கார வீட்டுப் பெண். அவளுடைய பார்வை வளையத்துக்குள் இடம்பெற மாணவர்களிடையே ஒரு போட்டி நடப்பதை அவன் அறிவான். தூரத்திலிருந்து அவளுடைய அழகின் கம்பீரத்தை வினு இரசித்திருக்கிறான்– வானத்து நிலவை பூமியில் உள்ளவன் இரசிப்பதைப் போல.

பேராசிரியர் அவனிடம் புத்தகம் இல்லை

## "அம்மா! நான் சொல்லிக்கிட்டிருப்பேனே அந்த மஞ்சு வந்திருக்கா"

என்பதற்காக ஒருமுறை கோபித்துக் கொண்டார். அன்று மாலையே மஞ்சு கல்லூரியில் அவனைச் சந்தித்து புத்தகம் வாங்க உதவ முன்வந்தாள். அதுதான் அவளிடம் அவனுக்கு ஏற்பட்ட முதல் பரிச்சயம்.

அதற்குப்பிறகு எப்போதாவது அவனைப் பார்க்க நேர்ந்தால் 'ஹலோ' சொல்லிவிட்டு அவள் போய் விடுவாள். அதுகூட சக மாணவர்களிடம் அவன் பால் பொறாமையினை ஏற்படுத்தியிருந்தது.

கடைசிப் பரீட்சை முடிந்த தினத்தன்று பரீட்சை ஹாலுக்கு வெளியில் அவனுக்காகக் காத்திருந்தாள் அவள்.

"எக்ஸாம் எல்லாம் எப்படி எழுதியிருக்கே வினு?"

"ரொம்பத் திருப்தியாக எழுதியிருக்கேன். அனேகமாக கிளாஸ் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன்."

"ரொம்ப சந்தோஷமாக இருக்கு வினு. பாஸ் செய்த பிறகு என்ன செய்யப் போறே?"

பெருமூச்சு விட்டான் வினு.

"ஏய், இதற்கென்ன அர்த்தம்?"

"டிகிரி வாங்குகிற வரைக்கும் அந்தக் கவலை. அதற்கப்புறம் வேலை கிடைக்கணுமே என்கிற கவலை."

"நம்பிக்கைதான் வாழ்க்கை வினு. உனக்கு ஏன் அது வரமாட்டேங்குது?"

"நான் வாழ்க்கையில் ரொம்பக் கஷ்டப்பட்டவன் மஞ்சு. வீட்டிலே வயசான அம்மா நகை நட்டுகளை எல்லாம் விற்று என்னைப் படிக்க வச்சாங்க. நான் படித்து முடித்தவுடன் விடியப் போகிறதாக அவங்களுக்கு நம்பிக்கை. விடியாமலே இருந்து விட்டால் என்ன செய்வது என்கிற பயம் எனக்கு."

"கவலைப்படாதே வினு. உன் வாழ்க்கையை பிரகாசமாக்க நான் ஒரு திட்டம் வைத்திருக்கேன்."

அவன் மனசுக்குள் பல வண்ணங்களில் மத்தாப்பு வெடித்துச் சிதறியது. அவனுடைய அடிமன ஆசைகள் உணர்ச்சி வெள்ளமாக உடலெங்கும் பாய்ந்தது. நிஜங்கள் மறைந்து ஆயிரமாயிரம் கற்பனைப் பூக்கள் பூத்தன.

அவள் விழிகளையே ஊடுருவிப் பார்த்தான். அவளுடைய உதட்டோரம் நெளிந்த புன்னகையில் ஒரு பெரிய இரகசியம் புதைந்து கிடப்பதைப் போல அவனுக்குத் தோன்றியது.

எதிர்பார்த்தபடியே அவன் முதல் வகுப்பில் பாஸ் செய்து விட்டான். அவளும் கூடத்தான்.

அவளைப் பார்க்க வேண்டும் என்று அவன் மனம் துடித்தது. அவளுடைய வீட்டுக்குச் சென்று அவளைப் பார்த்து, மகிழ்ச்சியைத் தெரிவிப்பதற்கு அவனுக்கு துணிச்சல் வரவில்லை. அவள் வசிக்கின்ற பெரிய பங்களாவை நினைத்தபோதே ஒருவித அச்சம் அவனுடைய உள்ளத்தில் குறுகுறுத்தது. அவளை அவன் சந்தித்து இரண்டு மாதங்களுக்கு மேலாகிவிட்டன. இந்த இரண்டு மாதங்களில் அவன் எத்தனையோ கற்பனைகளை வளர்த்துக் கொண்டிருந்தான்.

அவன் வீட்டு வாயிலில் கார் நின்றபொழுது அவனுக்கு கையும் ஓடவில்லை.

**வி.சி.கணேசன்**

காலும் ஓடவில்லை.

"அம்மா நான் சொல்லிக்கிட்டிருப்பேனே அந்த மஞ்சு என்னைத் தேடிகிட்டு வந்திருக்கா. அவளை நீ பார்க்கணும் அம்மா, ரொம்ப அழகு. நிறைய பணம். அவ்வளவு அடக்கமான பெண்ணைப் பார்க்கவே முடியாது. இரும்மா, அவளைப் போய் அழைச்சுக்கிட்டு வர்றேன்!"

வெளியில் வந்தான் வினு. அவனைக் கைகுலுக்கிப் பாராட்டினாள் மஞ்சு. நிலைகொள்ளாத மகிழ்ச்சியுடன் அவளை உள்ளே அழைத்து வந்தான்.

அம்மாவுக்கு அறிமுகப்படுத்தினான். நாற்காலியை இழுத்துப் போட்டு அவளை உட்காரச் சொன்னான்.

"உன்னைப் பற்றி வினு நிறையச் சொல்லி இருக்கான். நாங்க உனக்கு ரொம்பக் கடமைப்பட்டிருக்கோம்!"

"பெரிய வார்த்தையெல்லாம் பேசாதீங்க அம்மா. உங்க பிள்ளை ரொம்பக் கெட்டிக்காரர். உங்களிடம் ரொம்பப் பாசம். இப்படியொரு உயர்வான பிள்ளையைப் பெற்றதற்காக நீங்க பெருமைப்படலாம்."

சொல்லிவிட்டு மஞ்சு, ஒரு கவரை வினுவிடம் நீட்டி,

"இதை அம்மாவிடம் கொடுத்து ஆசீர்வாதம் வாங்கிக்கோ!" என்றாள்.

வினு அவள் சொன்னபடி செய்துவிட்டுக் கவரைப் பிரித்தான்.

அவனுடைய வேலைக்கான உத்தரவு அது. மஞ்சுவின் அப்பாவுடைய நிறுவனத்திலேயே அவனுக்கு வேலை.

வினுவின் அம்மா பூரித்துப் போனாள். "நீ மகராசியா இருக்கணும்!"

"உங்களிடம் ஆசீர்வாதம் வாங்கத்தான் நானும் வந்தேன். எனக்கு அடுத்தமாதம் 3ம் திகதி கல்யாணம்."

திருமண அழைப்பிதழை அந்த அம்மாவிடம் கொடுத்து விட்டு நமஸ்கரித்து எழுந்தாள் மஞ்சு. "உங்க பிள்ளையோடு நீங்க அவசியம் கல்யாணத்துக்கு வரணும்!"

புறப்பட்டாள் மஞ்சு. அவளது திருமண அழைப்பிதழையும், தன்னுடைய வேலைக்கான உத்தரவையும் மாறி மாறிப் பார்த்தான் வினு.

அடிமன ஆசைகள் அடிமனதிலேயே அமிழ்ந்து போக, சுய உணர்வுக்கு வந்தான் வினு.

கையிலிருந்த இரண்டு காகிதங்களில் இரண்டு வாழ்க்கை நிஜங்கள் இருந்தன.

'இந்த நிஜங்கள் சுடக்கூடாது'– மனம் உறுதிப்பட்டது.

புன்னகையோடு அவளை வாழ்த்தினான்.



படிப்பகம்

www.padippakam.com

## தருவது ரசிகன் — இலக்கிய நயம்

# இரக்கம் இல்லாதது

திக்திக்கும் முத்தமிழும்
திகட்டும் என்பாள்!

எத்திக்கும் எதிரொலிக்கும்
இன்னிசையும்
கசக்கும் என்பாள்!

புத்திக்கும் எட்டாத
பேதலிப்பில்
பாவை நிற்பாள்

முத்திங்கள் ஆனது
அத்தான் சென்று!
எத்திக்குப் போனாரோ?
இன்னம் காணோம்!

கைத்தலம் பற்றியவர்,
கண்ணில் காணா
எத் தேசம் போனாரோ?
இன்னம் காணோம்!

வண்டில்லா பூமியிலே
பூவிருந்து என்ன பயன்?

பூவில்லா பூமியில்
வண்டிருந்து என்ன பயன்?

கண்ணில்லா மனிதருக்கு
ஓவியத்தால் யாது பயன்?

காதில்லா மனிதருக்கு
கீதத்தால் யாது பயன்?

கையில்லா மனிதர் முன்னால்
கொம்புத் தேனிருந்து
யாது பயன்?

அவரில்லாத ஊரிலே
நானிருந்து
என்ன பயன்?

அவரில்லா இரவுகளில்
குளிரடித்து
என்ன பயன்,

அவரில்லா மாலையிலே
தென்றல் வீசுவதால்
என்ன பயன்?

அவரில்லா பந்தியிலே
அறுசுவை விருந்து
இருப்பதனால் யாது பயன்?

மை பூசி விழி சிறக்க
கை வீசி அவர் அழைக்க
பொய் பேசி நான் மறுக்க
மெய் மறந்து அவர் மயங்க
மை இரவு போர்வையாகும்!

போர்வைக்குள்
நாம் இருவர்
போர்க் களத்தில்
நாம் இருவர்
மூளும் போர்
இரவு வீழும்வரை!

விடியும் வரை நிலவொளியில்
உச்சம் வரை போர் தொடரும்!



உச்சி முதல் பாதம் வரை
காதல் யுத்த களம் விரியும்!

கொத்து கொத்தாய்
முத்தம் தர
பித்துப் பித்தாய்
மனம் மயங்கும்!

கட்டி கட்டி
கை தழுவ
முட்டி முட்டி
மோகம் வரும்!

முத்தத்தில்
இதழ் நனைய,
சித்தத்தில்
தேன் பாயும்!

பக்கத்தில்
அவன் தாபத்தில் எரிய
இவள் தேகத்தில்
வெப்பம் வரும்!

"கனிரசம் தந்தாய்
கனிகளும் தந்தாய்
வற்றாத மதுக்கடலே
முற்றாத காவியத்தில்
பித்தாகப் போனேனடி!"

மோகத்தில்
அவன் புலம்ப
போகத்தில்
மனம் புரளும்!

வசப்படவும்
மேனி விரும்பும்!
வதைபடவும்
மேனி விரும்பும்!

அடிமைப்படவும்
ஆசை!

அடிமைப்படுத்தவும்
ஆசை!

இரண்டும் சாத்தியம்
இன்பக் களத்தில்!

அவன் கரச் சிறையில்
சிக்கி இருக்கையில்
ஆவி பிரியவும்
சம்மதமே!

மூச்சு முட்ட
அவன் அணைக்க
மோக சுகத்தில்
அவள் மூழ்க
ஆவி துடிக்கும்
புறாச் சிறகாய்!

"கனலும் நீயே-ஓடை
புனலும் நீயே!
யாழும் நீயே-இனிய
நாதமும் நீயே!"

குளிர் வார்த்தைகளால்
தீண்டுவான்.

காமன் தொடுத்த அம்பாக
அவன் பார்வை
மேனியெங்கும் பாயும்!

கட்டறுந்த மாடாக
மனம் ஓடி
காமத்தை நாடும்!

காமத்துக்கு
வெட்கம் இல்லை!
காமத்துக்கு
அடக்கம் இல்லை!
காமத்துக்கு
அச்சம் இல்லை!

"பூவோடு
நார் சேர்ந்தால்
மாலையாகலாம்!

உன்னோடு
நான் சேர்ந்தால்
இன்ப மாலையாகலாம்!"

மாலையாகிக் கொள்வர்
காலையாகும் வரைக்கும்
மாலையாகக் கிடப்பர்!

நினைத்தாள் இன்று
நெற்றி வியர்த்தது!

அன்று கண்ட சுகம்
இன்று வதைப்பதென்ன?

அன்று கலந்த இதழ்
இன்று தவிப்பதென்ன?

அன்று இசைந்த மேனி
இன்று கசப்பதென்ன?

முத்தம் பட்ட இடத்தில்
முள்ளாய் குத்துவதென்ன?

நள்ளிரவில் என்னை
கிள்ளி எழுப்புவதென்ன?

அன்று இனித்த யாவும்
இன்று கசப்பதென்ன?

அன்று இரசித்தவை யாவும்
இன்று வெறுப்பதென்ன?

பிரிவென்ற
பெரும் துன்பம்
தினங்களை எல்லாம்
திகட்டச் செய்துவிட்டது!

பிரிந்து சென்றவர்
நெஞ்சம்
கல் நெஞ்சம்!

மறந்து நிற்பவர்
நெஞ்சம்
மர நெஞ்சம்!

ஆனாலும், அவர்
பின்னால்
பறந்து செல்கிறதே
எந்தன்
மட நெஞ்சம்!

"இரக்கமில்லாத நெஞ்சமே
இரவில் ஏன் என்னை
உறக்கமின்றி வாட்டுகிறாய்?"

வினா எழுப்பினாள்
விரக வெப்பத்தில்
எரிந்து கொண்டு!

விடை சொல்லுகிறார்
திருவள்ளுவர்:
"காமம் பொல்லாதது
இரக்கம் இல்லாதது
நள்ளிரவில் நம்மை ஆளும்
ஆட்டிபடைத்து அலைக்கழிக்கும்!"

"காமம் எனவொன்றோ கண்ணின்றென்
–நெஞ்சத்தை
யாமத்தும் ஆளும் தொழில்"
குறள்: 1252, அதிகாரம் 126

---

ஸ்போர்ட்ஸ்

## 600 விக்கெட்டுக்கள்

அவுஸ்திரேலிய அணியின் முதுகெலும் பாகத் திகழ்பவர் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ண். எனினும் தொடர்ந்து 9 டெஸ்ட் போட்டிகளை வென்ற அவுஸ்திரே லிய அணி இந்திய மண்ணில் பெற்ற தோல்விகளை வோர்னால் தடுக்கமுடிய வில்லை.



1991-92களில் தனது டெஸ்ட் வாழ்க்கையைத் தொடங்கிய ஷேன் வோர்ன் மிக்க் குறுகிய காலத்திற்குள் 300 விக்கெட்டுக் களைச் சாய்த்து விட்டார். விளை யாடிய போட் டிகள் 64 மட் டுமே. இதே வேகத்தில் போனால் வோர்ணால் 600 விக்கெட்டுக்களை வீழ்த்த முடியும் என்று இவருடைய கிரிக்கெட் குரு டெர்ரி ஜென்னர் கூறியுள்ளார்.

ஆனால் ஷேன் வோர்ண், "அது முடி யாத செயல். என் குரு குடிபோதையில் பேசியிருப்பார்," என்றாராம்.

இருப்பினும் ஷேன் வோணின் இலக்கு டெஸ்ட் போட்டியில் கபில்தேவின் சாத னையை முறியடிக்க வேண்டும் என்பதாகும். கபில்தேவ் 434 விக்கெட்டுக்களை வீழ்த்தி சாதனை படைத்தவர்.

டெஸ்ட் போட்டிகளில் 10 ஆயிரம் ஓட்டங்களைக் குவித்து உலக சாதனை புரிந்தவர் இந்தியாவின் சுனில் கவாஸ்கர். இச்சாதனையை முறியடித்தவர் அவுஸ்தி ரேலியாவின் அலன் போர்டர்.

இதே போன்று பந்து வீச்சிலும் இந்திய வீரர் கபில்தேவின் சாதனையை அவுஸ்தி ரேலிய வீரர் ஷேன் வோர்ன் முறியடிக்கலாம்.

## கவுண்டி அணியில் முஷ்டாக்

இங்கிலாந்தின் கவுண்டி அணிகளில் ஒன்றான சர்ரே அணியில் மறுபடி இணைந்து விளையாடவுள்ளார் பாகிஸ்தானின் சுழற் பந்து வீச்சாளர் சக்லெய்ன் முஷ்டாக்.

பாகிஸ்தான் அணிக்கு அடிக்கடி தேவைப்படும் சக்லெய்ன் கடந்த வருட இங்கிலாந்தின் கிரிக்கெட் சீஸனில் 32 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருக்கிறார். இடையி டையே பாகிஸ்தான் அணிக்கு அழைக்கப் பட்டபோதிலும் 32 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி 19.28 என்ற சராசரியை எடுத்தார்.

## சௌகான் நீக்கம்



அவுஸ்திரேலியாவுடன் டெஸ்ட் போட்டி களில் விளையாடும் இந்திய அணியிலிருந்து சுழற்பந்து வீச் சாளர் ராஜேஷ் சௌகான் நீக் கப்பட்டுள்ளார்.

"சௌகானின் செயல் திறன் தேர்வா ளர்களுக்குத் திருப்தி தராததால் அணியில் இருந்து அவர் நீக்கப்பட்டுள்ளார்," இவ் வாறு இந்திய கிரிக்கெட் தேர்வுக்குழுவின் தலைவர் கிஷன் ருங்டா செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

சௌகானுக்குப் பதிலாக ஹர்பஜன் சிங் என்பவர் சேர்க்கப்பட்டுள்ளார். பஞ்சா பைச் சேர்ந்த சுழற்பந்து வீச்சாளரான ஹர்பஜன் சிங்கிற்கு வயது 17.

## அணியில் மாற்றம்



இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற் கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி முதல் இரண்டு டெஸ்ட் களிலும் தோல்வியைத் தழுவியுள் ளது. அவுஸ்திரேலிய அணியில் வேகப்பந்து வீச்சாளரான போல் ரீபில் முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடினார். ஆனால் தோள் பட்டையில் ஏற்பட்ட காயத்தின் காரணமாக 2வது டெஸ்டில் விளையாட வில்லை. 2வது டெஸ்டில ரீபிலுக்குப் பதி லாக வில்சன் என்ற வேகப்பந்து வீச்சாளர் சேர்க்கப்பட்டார்.

போல் ரீபிலுக்குப் பதிலாக மாற்று வீரரை அனுப்பும்படி அவுஸ்திரேலிய கிரிக் கெட் சபைக்கு வேண்டுகோள் விடுத்தார் அவுஸ்திரேலிய அணி மனேஜர். இதனைத் தொடர்ந்து டேமியன் பிளோமிங் அவுஸ்திரேலி யாவில் இருந்து இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

---

## சிந்தியா பதில்கள்

* டியர் சிந்தியா! இன்றைய அரசியல் வாதியின் இலட்சணம் என்ன?

எம்.தியாகு, கல்லாறு.

அன்றென்ன, இன்றென்ன, எப்போதும் ஒரு இரகமே என்றுதான் தெரிகிறது. பெர்னாட்ஷா சொல்வதைக் கேளுங்கள்:

பணக்காரர்களிடமிருந்து பணத்தையும், ஏழைகளிடம் இருந்து வாக்குகளையும் பெற்றுக்கொண்டு, 'ஏழைகளிடம் இருந்து உங்களைக் காப்பாற்றுகிறேன்' என்று பணக் காரர்களிடமும், 'பணக்காரர்களிடம் இருந்து உங்களைக் காப்பாற்றுகிறேன்' என்று ஏழை களிடமும் கூறுபவனே அரசியல்வாதி.

* சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் தரைப் பாதை திறக்கப்படுமா? இல்லையா? நேரடி யாக பதில் கூறுக?

கே.உமைபாலன், கொழும்பு-06.

அரசாங்கம் எந்த சித்திரைப் புத்தாண் டைக் கூறியதோ நாமறியோம். எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு என்றால் சாத்தியம் இல்லவே இல்லை.

* டியர் சிந்தியா! அவுஸ்திரேலிய அணியை விரட்டி விரட்டி வெளுத்துக் கட்டிவிட்டதே இந்திய அணி. கப்டன் அசார் பற்றி என்ன சொல்கிறீர்?

எம்.ரவிராஜ், நீர்கொழும்பு.

உஷாருதீன்!

* சிந்தியா! அவுஸ்திரேலிய அணியின் தோல்விக்கு என்ன காரணம்?

என்.என்.நவ்ஃபர், திருமலை.

அவுஸ்திரேலிய அணி எந்தச் சாக்குப் போக்கும் கூறமுடியாதளவுக்கு, வெகு அபாரமாக ஆடித்தான் நேர்த்தியான வெற்றிக் கோட்டையை கட்டியது இந்திய அணி.

* சிலர் ஏன் இரட்டை அர்த்தத்தோடு பேசுகிறார்கள்?

எம்.உருத்திரன், மன்னார்.

தப்பான இரட்டை அர்த்தம் மீதான வெறுப்பால் இந்தக் கேள்வியை கேட்டுள்ளீர் கள் என்று நினைக்கிறேன்.

சில சுவையான இரட்டை அர்த்தங்கள் தமிழில் உண்டு. சில சந்தர்ப்பங்களில் நேர் எதிரான அர்த்தங்களும் ஒரே வார்த்தையில் அடங்கியிருக்கும்.

உதாரணம்: வழுக்கை.

தலையைப் பொறுத்தளவில் வழுக்கை முதுமையை உணர்த்தும்.

தேங்காயைப் பொறுத்தளவில் அதே 'வழுக்கை' இளமையை (இளநீரில்) உணர்த் தும்!

* கவுண்டமணியை படங்களில் காணவே முடியவில்லையே, கவுண்டுவிட்டாரா?

மு.சொரூபா, கண்டி.

சற்றுச் சரிந்திருக்கிறார்.

* கொடுத்த கடனைக் கேட்டால் முறைத்துப் பார்க்கிறார்களே? உதைக்கலாம் போலிருக் கிறது, என்ன செய்யலாம்?

எஸ்.சத்தியநாதன், வவுனியா.

கடன் கொடுத்தவனுக்கு கோபம் கூடாது. கடன் வாங்கியவனுக்கு ரோசம் கூடாது.

* சினிமா வில்லன்கள், அரசியல் வில்லன் கள், ஒப்பிடுக?

கே.சீனிவாசன், கனடா.

முன்னது நிழல்! பின்னது நிஜம்!

* தலைநகரில் மலிவாக பெறமுடிவது?

ஏ.தீபன், கொழும்பு-13.

சந்தேகப்பார்வை!

* தமிழ்க் கட்சிகள் தற்போதும் ஏன் ஆயுதங் களுடன் மிரட்டலாக பவனி வருகின்றன?

சி.தனசீலன், யாழ்ப்பாணம்.

'முன்னாள் போராளிகள்' என்ற முத்தி ரையை பின்னர் எப்படித்தான் காண்பிப் பதாம்?

* சிந்தியா! இராணுவத்தினர் கைது நடவடிக் கைகளில் ஈடுபட முடியுமா?

கி.விஜயதாஸ், கொழும்பு-09.

அவசரகால சட்டம் வழங்கும் அதிகாரப் படி இன்னும் என்னவெல்லாமோ முடியும்.

* 'உல்லாச'த்தின் பின்னர் மகேஸ்வரியைக் காணவில்லையே?

தி.கீர்த்திகா, திருமலை.

நாம் இருவர் நமக்கு இருவரில் கவர்ச்சி விருந்து படைக்கும் இருவ ரில் அவரும் ஒருவர்! இன்னமும் சிலகாலம் தாக்குப்பிடிப்பார், கவலைப்படாதே சகோதரா.



மகேஸ்வரி

* அமெரிக்க ஜனாதிபதிகள் அனைவருமே ஜாலி ஆசாமிகள்தானா?

ஆர்.பரமானந்தன், மட்டக்களப்பு.

அநேகம் பேர் அப்படித்தான் போலிருக்கிறது.

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தவர் கொல்வின் கூலிட்ஜ். அவருக்கு மனைவிமேல் அத்தனை பிரியம் கிடையாது. ஆனால் வேறு பல பெண்களுடன் தொடர்பு இருந்தது.

ஒருமுறை கூலிட்ஜ் தம்பதி கோழிப் பண்ணை ஒன்றுக்கு சென்றதாம்.

அங்கு பண்ணையாளர் திருமதி கூலிட்ஜி டம், "ஒரு சேவல் எத்தனை முறை வேண்டு மானாலும் உறவு வைத்துக் கொள்ளும்!" என்று விளக்கம் கொடுத்தாராம்.

"அதை என் கணவரிடம் கூறுங்கள்!" என்று கேலியாக கூறினார் திருமதி கூலிட்ஜ்.

அவர் சொன்னதைக் கேட்ட ஜனாதிபதி கூலிட்ஜ், பண்ணைச் சொந்தக்காரரிடம்: "சேவல் விஷயம் சொன்னீர்களே, ஒரே கோழியிடமா?" என்றார்.

"இல்லையில்லை நிறையக் கோழிகளு டன்!" என்றார் பண்ணைக்காரர்.

"அதையும் என் மனைவியிடம் சொல்ல வேண்டியதுதானே!" என்றார் கூலிட்ஜ்.

* இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதில் இன்றைய அரசுக்கு எந்தளவு துணிச்சல் இருக்கிறது?

மா.செல்வராசா, சாவகச்சேரி.

மூன்று வருடமாக பொதியை சொல் லியே இனப்பிரச்சனையின் கதியை அதோ கதியாக்கிக் கொண்டிருக்கும் அளவுக்கு!

* கற்பூர மூளை என்றால் என்ன?

ஆ.தமிழ்ச்செல்வி, மண்டூர்.

அன்று சுதந்திர தினச் செய்தி சேகரிக்கச் சென்ற நிருபர்கள் சுறுசுறுப்பாக செய்திகளை எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு இளம் நிருபர் மட்டும் மிகச் சோர் வாக அமர்ந்திருக்கிறார்.

"நீ ஏன் எதுவும் எழுதவில்லை?" என்று சக நிருபர் கேட்டார்.

"என் கெட்டகாலம். நான் பொரி விற்கப் போனால் காற்றடிக்கிறது. உப்பு விற்கப் போனால் மழையடிக்கிறது. கப்பற் படையில் நடைபெறும் சுதந்திர தினக் கொண்டாட்டம் பற்றி செய்தி சேகரிக்கச் சென்றேன். என் கஷ்ட காலம், கப்பலில் கொண்டாட்டமே இல்லை," என்று புலம்பினான்.

"அப்படியா, ஏன் கப்பலில் கொண்டாட் டம் நடக்கவில்லை?" என்று கேட்டார் சக நிருபர்.

"கப்பலில் ஓட்டை இருந்திருக்கிறது. சுதந்திரதின ஏற்பாடுகளில் மும்முரமாக இருந்ததால் அதனை யாரும் கவனிக்க வில்லை. திடீரென்று ஓட்டை பெரிதாகிக் கடல் தண்ணீர் குபு குபுவென்று புகுந்து கப்பலே மூழ்கும்படி ஆகிவிட்டது. அதனைத் தடுக்க பெரிய படையே பாடுபட்டது. இப்படி யிருக்க சுதந்திர தினக் கொண்டாட்டம் எப்படி நடக்கும்?"

சக நிருபர் சட்டென்று எழுந்து நின்றார். "அடப்பாவி! இதுதானே முதல் பக்க செய்தியாக வரவேண்டும்!" என்று சொல்லிக் கொண்டு தகவல்களைத் திரட்ட ஆரம்பித் தான்.

இதில் யாருக்கு சட்டென்று பற்றிக்கொள் ளும் கற்பூர மூளை என்று உங்களுக்கே தெரிந்திருக்குமே!



படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 2

ஆண்டவர் உலகினை உருவாக்கினார். தன்னைப் போன்ற உருவத்தைக் கொண்ட ஆதி மனிதனையும் அவனுக்குத் துணையாக ஒரு பெண்ணையும் உருவாக்கினார்.

பரந்து கிடந்த உலகப் பரப்பில் ஒரேயொரு ஆணையும் ஒரேயொரு பெண்ணையும் படைத்தால் அதில் அர்த்தமே இல்லையே! ஆகவேதான் தனது தூதன் ஒருவரையே சர்ப்ப வடிவத்தில் ஏவாளிடம் அனுப்பிவைத்தார் ஆண்டவர். மனிதனின் அறிவுக் கண்களைத் திறந்து, பரந்து பட்ட உலகத்தில் மனித இனம் பல்கிப் பெருகுவதற்கு வழி சமைத்தார். நன்மை எது தீமை எது என்று ஆய்ந்தறிந்து வாழ்வதற்கு மனிதனுக்கு மார்க்கத்தையும் வகுத்தளித்தார்.

ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தை



**இராஜகுமாரன்**

விட்டு வெளியேறி, மண்ணைப் பண்படுத்தி பயிரிட்டு அதன் பயனைப் பெற்று வாழ்ந்தார்கள். காலம் கன வேகத்தில் சுழன்றது. ஏவாள் முதலில் ஒரு மகனைப் பெற்றெடுத்தாள். "இறைவன் கருணையினால் ஓர் ஆண் மகவைப் பெற்றெடுத்தேன்," என்று பூரிப்படைந்தாள். சில காலம் போனபின் மற்றொரு மகனையும் பெற்றெடுத்தாள் ஏவாள். இறைவன் கொடுத்த தண்டனைப்படி இரு குழந்தைகளையும் பெற்றெடுக்கும் போது மிகக் கடுமையான வேதனை அடைந்தாள்.

மூத்த மகனுக்கு காயின் என்றும் அவன் சகோதரனுக்கு ஆபேல் என்றும் பெயரிட்டு, ஆதாமும் ஏவாளும் பெருமகிழ்வுற்று ஆண்டவருக்கும் நன்றி செலுத்தினர்.

## தீயவர்களின் பெருக்கம்

காலச் சக்கரம் கன வேகமாகச் சுழன்றது. ஆதாம்-ஏவாள் வழித்தோன்றல்கள் உலகின் பல பாகங்களிலும் பெருகிப் பரந்து வாழ்ந்தனர். மனிதர்களில் நல்லவர்கள் தொகை குறைவாகவும் தீயவர்கள் தொகை அதிகரித்தும் வந்தன. இதனால் மனிதனைப் படைத்த ஆண்டவருக்கே மனித சமுதாயத்தின்மீது கடும் கோபம் உண்டாயிற்று. அவர்களைத் திருத்துவதற்காக எடுத்த முயற்சிகள் அனைத்தையும் மீறி, நீதி நியாயங்களை மறந்து, அவர்களைப் படைத்த ஆண்டவனையே மறந்து, நெறி பிறழ்ந்து, கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று தான் தோன்றித்தனமாக வாழத் தலைப்பட்டனர்.

# நோவாவின் பேழை

மனிதர்களின் அதர்மங்களைப் பொறுக்க முடியாத ஆண்டவர், அவர்களைப் பூண்டோடு அழித்து பின் புதியதோர் உலகைத் தோற்றுவிக்க எண்ணம் கொண்டார். தனது திட்டத்தை அமுல்படுத்துவதற்கு ஏற்ற ஒருவரையும் தேர்ந்தெடுத்தார்.

அப்போது உலகில் வாழ்ந்த மனிதர்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் துன்மார்க்கத்திலீடுபட்டவர்களாகவே இருந்தனர். ஆனால் ஒரேயொருவர் மட்டும் இறைவன்மீது பற்றுக் கொண்டு, எத்தகைய தீய செயல்களில் ஈடுபடாது நன்னெறிகளில் வாழ்ந்தும் வந்தார். அவர் நோவா என்ற பெயருடைய புனிதர். ஆண்டவர் நோவாவை அழைத்து, மனிதர்மீது அவருக்கு ஏற்பட்டிருந்த வெறுப்பையும் அதிருப்தியையும் வெளிப்படுத்தினார். இதனால் புதியதோர் உலகைப் படைக்கத்தான் சித்தம் கொண்டிருப்பதாகவும் கூறினார்.

"நோவா! இந்தப் பரந்த பூமியில் உன்னிடம் மட்டுமே உயர்ந்த குணங்களைக் காண்கிறேன். இந்த உலகிலுள்ள மனிதர்கள் அனைவரையும், அனைத்து உயிரினங்களையும் பூண்டோடு அழிக்கப் போகிறேன். இருப்பினும் மீண்டும் உயிரினங்கள் தோன்ற வேண்டுமல்லவா? இதற்கு எனது கருவியாக உன்னையே தேர்ந்தெடுத்துள்ளேன்.

தொடர்ந்து பெய்யப் போகும் பெருமழையினால் இப்பூமண்டலம் முழுவதும் நீரால் மூழ்கும். அந்த நீரின் மேல் எத்தகைய பாதிப்புமின்றி மிதக்கக் கூடிய மிகப் பிரமாண்டமான பேழை ஒன்றை நீ உருவாக்க வேண்டும். அப்பேழை பல மாடிகளைக் கொண்டதாக இருக்க வேண்டும். உலகிலுள்ள சகல சீவராசிகளிலும் ஆண்-பெண் என்று வகைக்கு ஒவ்வொரு சோடியாக அப்பேழையில் ஏற்றிக்கொள்ள வேண்டும். நீரும் உமது மனைவி, உமது பிள்ளைகள், அவர்களுடைய மனைவிமார் ஆகியோர் மட்டும் பேழையுள் சென்று கதவுகளை மூடிக் கொண்டதும் வானிலிருந்து மழை பொழியும். உடனடியாக பேழையை உருவாக்குவாயாக!"

இவ்வாறு ஆண்டவரின் ஆணை பிறந்தது.

## பேழை உருவானது

நோவா ஆண்டவனை வணங்கி அவரிட்ட ஆணையைத் தாமதிக்காமல் நிறைவேற்ற ஆயத்தமானார். நோவாவின் புதல்வர்களான சேம், காம் மற்றும் எப்பேத்து ஆகிய மூவரையும் தனது பணிக்கு உதவுவதற்காக அழைத்துக்கொண்டார். இரவு பகல் என்று பாராமல் அவர்கள் அனைவரும் உழைத்து மாபெரும் பேழையினை உருவாக்கி முடித்தனர்.

நோவா உருவாக்கிய அப்பேழை ஆண்டவருக்குப் பரம திருப்தியை அளித்தது. ஆண்டவரின் கோரிக்கைப்படி, நோவாவின் புதல்வர்கள் உயிரினங்களை வரிசையாக அப்பேழையினுள் ஏற்றிக் கொண்டனர். பல மாதங்களுக்குத் தேவையான உணவுப் பண்டங்களும் பேழையினுள் கொண்டு வந்து சேர்க்கப்பட்டன.

இவ்வாறான ஆயத்தங்கள் யாவும் பூர்த்தியடையும் வேளையில் வானம் எங்கும் மேகங்கள் சூழ்ந்தன. இருள் எங்கும் படர்ந்தது. இடியுடன் மின்னலும் வானைக் கிழித்தன, நோவா பேழையின் பிரதான வாயிலை மூடும்போது அனைவரும் ஒன்றாக இருந்து ஆண்டவரைத் துதித்தனர். அவர்களை ஆண்டவர் ஆசிர்வதித்தார். கதவுகள் மூடப்பட்டதும் மழை பொழியத் தொடங்கியது. மிகப் பயங்கரமான மழை தொடர்ந்து பெய்துகொண்டே இருந்தது.

பெருமழை பொழிய ஆரம்பித்ததும் பூமிப்பரப்பு எங்கும் வெள்ளம் சூழ்ந்தது. நோவாவின் பேழை தரையிலிருந்து நீரில் மிதக்க ஆரம்பித்துவிட்டது என்பதை உள்ளிருந்தவர்கள் உணர்ந்தனர்.

நாற்பது பகல்களும் நாற்பது இரவுகளும் தொடர்ந்து மழை பொழிந்தது. இந்தப் பெருமழையினால் பெருக்கெடுத்த வெள்ளம் தரையெங்கும் பரவியது. படிப்படியாக நீர் மட்டம் உயர்ந்தது. மலைகளையும் வெள்ளம் மூடிக் கொண்டது. உலகில் வாழ்ந்த மனிதர்கள் அனைவரும் மடிந்தனர். காட்டு விலங்குகள், பறவையினங்கள், ஊர்வன ஆகிய இரத்தம்- சதையுள்ள அனைத்தும் மாண்டு போயின.

பேழைக்குள்ளிருந்த நோவாவும் அவருடைய குடும்பத்தவர்களும் காட்டு விலங்குகளும் பறவையினங்களும் ஊர்வனவும் மட்டுமே உயிர் தப்பின. நோவாவும் அவருடைய குடும்பத்தைச் சேர்ந்தோரும் பேழைக்குள்ளிருந்த ஏனைய உயிரினங்களின் தேவைகளை அறிந்து அவ்வப்போது உதவி புரிந்தனர். எஞ்சிய நேரத்தில் ஆண்டவனை நினைத்து பிரார்த்தனை செய்தனர்.

மொத்தமாக நூற்றைம்பது நாட்கள் வெள்ளம் அப்படியே இருந்தது. அதன் பின்னர் ஆண்டவர் வெள்ளத்தை வடிய வைத்தார். கதிரவனும் மேகத் திரையை நீக்கி பூமியின்மீது தன் கிரணங்களைச் செலுத்தினான். வெள்ள நீர் ஆவியாக மாறத் தொடங்கியது. அத்துடன் பூமியும் எஞ்சிய நீரை உறிஞ்சி உள்ளிழுத்துக் கொண்டது. அரராத்து மலைத் தொடரைத் தொட்டாற்போல் பேழையும் நின்றது.

## வெள்ளம் வடிந்தது

வெள்ளம் வடிந்து பேழையும் தரையில் தட்டி நிற்பதை உணர்ந்த நோவா, பேழையிலிருந்த சாளரத்தைத் திறந்து வெளியே பார்த்தார். அப்போது உயர்ந்த மலைகளின் உச்சிகள் சில மட்டுமே அவருடைய கண்களுக்குத் தென்பட்டன. வெள்ளத்தில் அமிழ்ந்தாலும் பூமியின் மேற்பரப்பில் உள்ள மரஞ் செடி கொடிகள் மட்டும் அழியாது தப்பிக் கொள்ளும் என்ற உண்மை நோவாவுக்குத் தெரியும். ஆனால் சாளரத்தினூடாகப் பார்த்த நோவாவுக்கு தாவரங்கள் எவையும் தென்படவில்லை. மேலும் சில நாட்கள் பொறுத்து பேழையுள்ளிருந்த ஒரு காகத்தை வெளியே பறக்கவிட்டார். அக்காகம் பல நாட்கள் வெளியே போவதும் வருவதுமாக இருந்தது. இதனைத் தொடர்ந்து ஒரு புறாவை சாளரத்தினூடாக வெளியே அனுப்பினார். வெள்ளம் பூரணமாக வடியாமையினால் தங்குவதற்கு ஒரு மரக்கொப்புக்கூட அப்புறாவுக்குத் தென்படவில்லை. அப்புறா பேழைக்குத் திரும்பியது.

மேலும் ஏழு நாட்கள் கடந்த பின்னர் புறாவை நோவா மீண்டும் அனுப்பிவைத்தார். சிறிது நேரம் சென்றதும் தனது அலகுகளில் ஒலிவ் இலை ஒன்றைக் கவ்விக் கொண்டு புறா நோவாவிடம் வந்தது. அப்போது வெள்ளம் வடிந்து மரம் செடி கொடிகள் தலைகாட்டத் தொடங்கிவிட்டன என்பதனை நோவா அறிந்து கொண்டார். சில நாட்களின் பின்னர் அனுப்பிவைக்கப்பட்ட அப்புறா திரும்பி வரவேயில்லை. இதனால் அது தரித்து நிற்பதற்கேற்ற மரக் கொப்புக் கிடைத்து விட்டது என்று கருதினார் நோவா.

பேழையின் மேற்கூரையைத் திறந்து பார்த்தார். அவர் பார்வையில் வெள்ளம் வடிந்து, எங்கும் மரம் செடி கொடிகள் யாவும் பசுமையாகத் தோன்றின. ஆண்டவரைத் துதித்து நன்றியைத் தெரிவித்தார். கடவுள் நோவாவிடம் பேழையை விட்டு வெளியேறுமாறு கேட்டுக்கொண்டார். பேழையினுள் அதுவரை காலமும் அடைபட்டுக் கிடந்த உயிரினங்களை நோவாவும் அவர் புதல்வர்களும் வெளியில் கொண்டு வந்து தரையில் இறக்கிவிட்டனர்.

ஆண்டவர் நோவாவின் குடும்பத்தாரையும் ஏனைய உயிரினங்களையும் பல்கிப் பெருகி உலகத்தில் பரந்து வாழுமாறு கேட்டுக் கொண்டார். உயிரினங்கள்- மிக்க மகிழ்ச்சியுடன் குதித்தோடின. பழையபடி புள்ளினங்கள் வானில் இசை பாடிப் பறந்தன. காட்டு விலங்குகள் குதூகலத்துடன் கூட்டம் கூட்டமாகப் பாய்ந்து சென்றன. ஊர்வனவும் தரையில் ஊர்ந்து செல்லத் தலைப்பட்டன.

(தொடர்ந்து வரும்)

## திருமறை வினா 2

**நோவாவின் புதல்வர்களின் பெயர்களைத் தருக?**

இவ்வினாவுக்கான விடையை அஞ்சலட்டையில் எழுதி 4.4.98க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பவும்.

குறிப்பு: இவ்வினாக்களுக்கு குறிப்பாக மாணவர்களே பதில் அனுப்புவது விரும்பத்தக்கது.

திருமறை 2 விடை:
தினமுரசு
த.பெ.இல.1772,
கொழும்பு.

# "நல்லா இருங்க கல்லா இருக்காதீங்க"

கா.பூ.க: வணக்கம் ரஜனி அவர்களே. தேர்தல் முடிவுகள் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

ரஜனி: சொல்கிறேன். சொல்லுவேன். ஆனா இப்போ சொல்லமாட்டேன். எப்போ எங்கே எப்படி சொல்லணுமோ அப்போ அங்கே அப்படி சொல்லுவேன்.

கா.பூ.க: 'ரஜனி சொல்றதை இந்தமுறை மக்கள் கேட்கமாட்டார்கள்' என்று ஜெயலலிதா சொன்னாங்களே, அது பலித்திருக்கிறதே?



ரஜினி: (கண்களை மூடிக்கொண்டு சிந்திக்கிறார்)
அந்தம்மா சொன்னாங்க, அவங்க கட்சிக்காரங்க ஜெயிச்சாங்க என்னு சொல்லுறது பாவம். அகம்பாவம்! அந்த ஆண்டவன் சொல்லுறான் இங்கே உள்ளவன் செய்யுறான்! அப்படி நினைக்கணும். அதுக்குப் பேருதான் அடக்கம்!

கா.பூ.க: அந்தம்மாவுக்கு அடக்கம் இல்லை என்று சொல்லுகிறீர்களா?

ரஜினி: அடக்கம், பணிவு, கனிவு, அகம்பாவம், செருக்கு, திமிரு என்று எத்தனையோ குணங்கள் இருக்கு. அதிலே அந்தம்மா எதிலே அடக்கம் என்று நீங்களே முடிவு பண்ணிக்குங்க! நான் சொல்லக் கூடாது. ஏன்னா, மனிதன் எதையுமே முடிவு பண்ணக்கூடாது!

கா.பூ.க: அந்தம்மா மறுபடி வந்தா தமிழ் நாட்டை ஆண்டவனாலும் காப்பாற்ற முடியாது என்றீர்கள், இப்போது இந்தியா முழுவதும் அந்தம்மா கையிலே இருக்கிறதே?

ரஜினி: இல்லே அந்தம்மா கையிலே எதுவுமே இல்லை. எல்லாமே அந்த ஆண்டவன் கையிலேதான் இருக்கு.

கா.பூ.க: ஆண்டவன்தான் முன்னர் ஆண்டவர் என்பதால் ஜெயலலிதாவை வெற்றி பெறவைத்தாரோ?

ரஜினி: மனிதன் தப்பு பண்ணலாம். ஆண்டவன் தப்பு பண்ணமாட்டான். தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும் தர்மம் மறுபடியும் வெல்லும்!

கா.பூ.க: தர்மம் எது? சூது எது?

ரஜினி: தர்மம் தர்மம்தான். சூது சூதுதான்! ஒன்றை இரண்டாக்க முடியும்! இரண்டை ஒன்றாக்க முடியாது!

கா.பூ.கா: முன்னாடி நீங்க ஜானகி அம்மாவுக்கு வாக்குப்போடச் சொல்லியும் மக்கள் ஏற்கவில்லை! இந்த முறை தி.மு.க. த.மா.க. கூட்டணிக்கு வாக்குப் போடச்சொல்லியும் மக்கள் ஏற்கவில்லை. என்ன நினைக்கிறீர்கள்?

ரஜினி: நானாக எதையுமே எப்போதுமே நினைக்கிறதில்லே! என்ன நினைக்கணும் என்னு அந்த ஆண்டவன் சொல்லுறானோ அதன்படி நினைப்பேன். நினைக்கிறப்போ சொல்வேன். அவ்வளவுதான் இப்போ சொல்ல முடியும்!

கா.பூ.க: நீங்கள் ஒரு தடவை சொன்னா நூறுதடவை சொன்னமாதிரி, பின்னர் ஏன் இரண்டு தடவை தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவாக குரல் கொடுத்தீர்கள்?

ரஜினி: இருநூறு தடவை சொன்ன மாதிரி இருக்கட்டும் என்றுதான்!

கா.பூ.க: உங்கள் அடுத்த திட்டம்?

ரஜினி: இமயமலை போறேன்.

கா.பூ.க: பின்னர்?

ரஜினி: அங்கிருந்து திரும்பிவருகிறேன்.

கா.பூ.க: அதன் பின்னர்?

ரஜினி: அவன் அழைத்தால் மீண்டும் போவேன்.

கா.பூ.க: அழைக்காவிட்டால்?

ரஜினி: அடுத்த படம்?

கா.பூ.க: பெயர் என்ன?

ரஜினி: சொல்லுறேன் ஆனா இப்போ சொல்லமாட்டேன்.

கா.பூ.க: கதாநாயகி யார்?

ரஜினி: அகிலாண்டேஸ்வரி. ஹாஹாஹா இது எப்படி இருக்கு?

கா.பூ.க: புதுமுகமா?

ரஜினி: இல்லே, அவங்களுக்கு பல முகம்! அம்பாள்! அகிலாண்டேஸ்வரிதானே இந்த உலகத்துக்கே கதாநாயகி. அதைத் தான் சொன்னேன். ஹௌ இஸ் இட்? ஹா ஹா ஹா.

கா.பூ.க: இறுதியாக உங்கள் ரசிகர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

ரஜினி: அரசியல் தலைவர்கள்மேலே அன்பா இருங்க, ஆனா அவங்க அம்பா இருக்காதீங்க! அவங்களோட நல்லா இருங்க, அவங்களோட கல்லா இருக்காதீங்க! அவங்களோட சொல்லாடுறதோட நிறுத்திக்குங்க, அவங்க கையிலுள்ள பொல்லாயிடாதீங்க!

# வேட்டி கட்டிய தமிழச்சி

கரை வேட்டி கட்டிய
கலைஞரையும்
கதர் வேட்டி கட்டிய
மூப்பனாரையும்
புறம் கண்ட
புரட்சித்தலைவி
சேலை கட்டிய
தமிழச்சி
எங்கள் பாரதமாதா
ஜெயலலிதா
புகழ் வாழ்க! வாழ்கவே!"

தொண்டர்கள் துதி பாட ஜெயலலிதா தன் மாளிகைப் பால்கனியில் தரிசனம் தந்து கொண்டிருந்தார்.



கா.பூ.க: புதுடில்லியில் வாஜ்பேயியுடன் என்ன பேசினீர்கள்?

ஜெ: வாஜ்பேயியுடன் வாயால் பேசினேன். வேறு எதுவும் கேட்க வேண்டாம்!

கா.பூ.க: தமிழக சட்டமன்றத்தை கலைக்கச் சொன்னீர்களா?

ஜெ: தமிழக சட்டசபை என்ன கருவா கலைப்பதற்கு? வாஜ்பேயி என்ன டாக்டரா அபார்ஷன் செய்வதற்கு?

கா.பூ.க: உங்கள் நிபந்தனை என்ன?

ஜெ: நியாயமான நிபந்தனைதான்!

கா.பூ.க: சோனியாவைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ஜெ: நான் ஏன் நினைக்க வேண்டும்? அவர் என்ன உடன்பிறவா சகோதரியா? அல்லது உடன்படித்த தோழியா?

கா.பூக: நாளை நீங்கள் பிரதமரானால் என்னாகும்?

ஜெ: ஜனாதிபதி எனக்கு பத விப்பிரமாணம் செய்து வைக்க வேண்டி இருக்கும்!

கா.பூ.க: நிதியமைச்சர் பதவி கேட்டீர்களாமே?

ஜெ: ஹாஹாஹா ஆட்சியின் விதியே நம் கையில் இருக்கும்போது நிதி எதற்கு நமக்கு?

கா.பூ.க: நீதி அமைச்சு கேட்டது?

ஜெ: ஹாஹ்ஹாஹா ஆட்சி தொடர வேண்டுமா இல்லையா? என்று தீர்ப்பளிக்கும் நீதிபதியே நாமாக இருக்கும் போது, நமக்கெதற்கு நீதி அமைச்சு பதவி?

கா.பூ.க: வேறு என்னதான் கேட்டீர்கள்?

ஜெ: என்ன கேட்டேன், என்ன கொடுத்தார் என்று கேட்க, நான் வரம் கேட்கும் பக்தையுமல்ல, வாஜ்பேயி அருள் தரும் ஆண்டவருமல்ல?

கா.பூ.க: யார் ஆண்டவர்?

ஜெ: நான்தான் ஆண்டவள். சில வருடங்களுக்கு முன்னர் தமிழ்நாட்டை ஆண்டவள். கருணாநிதியை தொடர்ந்து தோற்கச் சொல்லும், அவருக்கும் ஆண்டவர் என்ற பெருமை கிட்டும். ஹாஹாஹா.

யாவும் கற்பனை

**காதிலை பூ கந்தசாமி**



படிப்பகம்




பெண்களின் அழகோ இரகசியம்! அதை
எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை: 105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331


# சதம் போட்ட கட்டடம்







SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


↓ வடக்கு-கிழக்கில் தேசிய வாகனமாக மாறிவரும் சைக்கிளுடன் சம்பந்தப்பட்ட தகவல் இது.

1996ல் நடத்தப்பட்ட வீதியில் ஓடும் உலக சைக்கிளோட்ட சாம்பியன் போட்டியில் வென்றவர் இவர்தான். பெயர்: ரோனி றொமிங்கர். சுவிற்ஸர்லாந்தைச் சேர்ந்தவர். போட்டியும் சுவிற்ஸர்லாந்தில்தான் நடந்தது.

இவர் சைக்கிள் ஓட்டத்தில் மேலும் ஒரு உலக சாதனையும் படைத்துள்ளார். ஸ்பெயின் நாட்டில் நடைபெறும் 'ஸ்பெயின் சுற்றுலா' என்ற சைக்கிளோட்ட போட்டியில் தொடர்ந்து மூன்று தடவைகள் வெற்றிபெற்றார்.

வேறு யாரும் அவ்வாறு மூன்றுமுறை தொடர்ச்சியாக வென்றதில்லை.

↓ காலத்துக்குக் காலம் நாளுக்கு நாள் நிமிடத்துக்கு நிமிடம் பாஷன்கள் மாறிக்கொண்டு வருகின்றன. மேலை நாடுகளில் வண்ணம் வண்ணமான உடையலங்காரப் பாணிகள் கடகடவென்று மாறிக்கொண்டிருக்கும்.

புதுமோஸ்தர்களையும் உடைப்பாணிகளையும் மாற்றி அமைப்பவர்கள் புதிது புதிதாக அலங்கார முறைகளை வடிவமைப்பார்கள். ஒரு புதிய பாணியை உருவாக்கியதும் அதற்கான ஒரு கண்காட்சியினை ஏற்பாடு செய்து தனது வடிவமைப்புக்கு விளம்பரம் தேடுவார் அந்த வடிவமைப்பாளர். இதற்காக- தனது புது மோஸ்தர் உடைகளை அணிந்து காட்டுவதற்கேற்ற அழகான மொடல்களையும் தேர்ந்தெடுத்து அரங்கேற்றுவார்.

வண்ண வண்ண மணிகளால் பூக்கோலங்களை அமைத்து ஒரு வடிவமைப்பாளர் தயாரித்த ஒரு ஆடையை அழகியொருத்தி அணிந்து பவனி வருகிறாள். அந்த ஆடையில் சொக்கிய பார்வையாளர்கள் அவளுடைய முக அலங்காரத்தில் காணப்படும் 'வழிசலை' அவதானிக்க மறந்து ஆடையின் அழகிலேயே லயித்து விட்டனராம். ஆளைப்பாராதே ஆடையைப்பார் என்று நினைத்து விட்டனரோ?!

ஆடை அணிந்த அழகி- றொடஓல்ட்ஹாம் அவுஸ்திரேலிய கலக்கல் அழகி இவர்.

ஆள் பாதி ஆடை பாதி என்பார்கள். அதனை தவறாக விளங்கிக் கொண்டு ஆடையையே பாதியாக அணிபவர்களும் இருக்கிறார்கள். பரவாயில்லை இவராவது முழுமையாக அணிந்திருக்கிறார்.

# கலக்கல்



# சாதனை வலம்

உலகிலேயே அதி உச்ச சைக்கிளோட்ட வேகம் என்ன தெரியுமா? 268. 831 கி.மீட்டர்/மணி. (166.94 மைல்/மணிக்கு) இந்த உலக சாதனையைப் படைத்தவர் ஃபிரெட் ஹொம் பெல்பேர்க். நெதர்லாந்து நாட்டவர். 1995 அக்டோபர் 3ல் அமெரிக்காவில் இச் சாதனையைப் படைத்தார்.




↑ இங்கு நீங்கள் காண்பது ஃபிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிசில் உள்ள பல்பொருள் அங்காடி. அதாவது சூப்பர் மார்க்கெட்.

எந்தக் கடையிலே அரிசி வாங்கினாய், எந்தக் கடையிலே பருப்பு வாங்கினாய் என்று தனித்தனியே விசாரிக்க வேண்டியதில்லை, எல்லாம் ஒரே இடத்தில், ஒரே கூரையின் கீழே கிடைக்கின்றன.

இங்கு தினமும் திருவிழா மாதிரி ஒரே கூட்டம் அலைமோதும். தினமும் 80 ஆயிரம் பேருக்கு குறையாமல் இங்கு வந்து செல்கிறார்கள். வருடத்தில் இதன் சராசரி வருமானம் 70 கோடி அமெரிக்க டொலர். நம் நாட்டு மதிப்பில் கிட்டத்தட்ட 4270கோடி ரூபாய்கள்.

இன்று வானளாவ உயர்ந்து நிற்கும் இந்த சூப்பர் மார்க்கெட் செஞ்சரி போட்டு விட்டது. 1893ல் சிறு கடையாக ஆரம்பித்து, இதன் உரிமையாளர்களது விடாமுயற்சி யால் 1896ல் சூப்பர் மார்க்கெட்டானது. இன்று பாரிசில் உள்ள முக்கிய நிறுவனமாகிவிட்டது.

இந்த சூப்பா மார்க்கெட்டின் நூற்றாண்டு விழாவில் களியாட்ட விழாக்களும், உடையலங்காரப் போட்டிகளும் நடைபெற்றன.

இந்த சூப்பர் மார்க்கெட்டின் பெயர்: கலறிஸ் லஃபாயட்டே!



# புதுமை

கடல்களின் நீரசுழி ஓட்டங்கள் இவ்வாறு தான் அமையும் என்பதை இது காட்டுகிறது. படத்தில் ஜடபொருள் போன்று தெரிந்தாலும் நேரிலே காணும் போது பார்வையாளர்கள் நீர் ஓட்டத்தை அதன் செயற்பாட்டுடன் கண்டு அனுபவிக்கலாம். கொம்பியூட்டரின் உதவியுடன் இணைந்து ஒலி-ஒளிக் காட்சிகளாக இதனை அமைத்துள்ளனர். ஒரு சுரங்கப் பாதைபோல் காட்சியகத்தை அமைத்து, பார்வையாளர்கள் அதனூடாக நடந்து செல்லும்போது ஒலியுடன் ஒளி சேர்ந்து புதுமையான உணர்வுகளைக் கொடுக்குமாம். நீர் ஓட்டத்திற்குள் சிக்கியது போன்ற 'திரில்' ஏற்படுமாம். பார்ப்பவர்கள் அனைவரும் திகைப்படைகின்றனராம். உலகில் நீர்சுழி ஓட்டத்தை காண்பிக்கும் ஒரேஒரு 'சமுத்திரக்கோள்' தயாரிப்பு இது மட்டும்தான்.

↑ அமெரிக்கத் தலைநகரான வாஷிங்டனில் சிமித்சோனியன் தேசிய இயற்கை வரலாற்று காட்சிக்கூடம் (மியூசியம்) இருக்கிறது. இங்கு பல புதுமைகளைப் பார்வையாளர்கள் கண்டு வியப்படைகின்றனர்.

இந்த அமெரிக்கப் படம் மேற்படி காட்சிக் கூடத்தில் காணப்படும் தத்ருபமான காட்சி.

இதனை சமுத்திரக்கோள் என்று அழைக்கிறார்கள். அமெரிக்காவைச் சுற்றியுள்ள பசுபிக் மற்றும் அத்லாந்திக்



பிறந்தநாள் வாழ்த்து 22.3.98

கொழும்பு கொட்டாஞ்சேனை 127/5 மேபில் லேனில் வசிக்கும் கேந்திரமூர்த்தி- கோகிலவாணி தம்பதியினரின் செல்வப் புதல்வி. ஆதினி தனது முதலாவது பிறந்த தினத்தை 22.03.98 அன்று கொட்டாஞ்சேனையில் உள்ள Hotel Sea Horse இல் வெகு விமர்சையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, அண்ணா ரம்மியன், அக்கா டிஷானி, பூட்டி, அப்பம்மா, அம்மம்மா, தாத்தாமார், பாட்டிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் பெரியகல்லாறு ஸ்ரீ வட பத்திரகாளியம்மன் அருளால் பலகலைகளும் கற்று செல்வச் சிறப்போடு பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

செல்வி ஆதினி கேந்திரமூர்த்தி


↓ உலகில் சிறந்த கிரிக்கெட் அணிகளில் ஒன்று அவுஸ்திரேலிய அணி. சிறந்த கப்டன்களில் ஒருவர் மார்க் டெய்லர்.

இந்தியச் சுற்றுப் பயணத்திற்கு முன்புவரை 39 டெஸ்ட் போட்டிகளுக்கு தலைமை தாங்கினார். அவற்றில் வெற்றிகள் 21. தேல்விகள் 10. வெற்றி தோல்வி இன்றி முடிந்தவை 8.

68 இன்னிங்ஸ் விளையாடி இவர் குவித்த ஓட்டங்கள் 2320. இவற்றில் 5 சதங்களும், 12 அரைச் சதங்களும் அடங்கும். சராசரி 36.82.

தற்போதைய இந்தியச் சுற்றுப் பயணத்தில் அணி சற்று திணறுகிறது. காலநிலை ஒத்துவரவில்லை என்று கூறுகிறார் மார்க் டெய்லர். காலநிலையைவிட, இந்திய அணிக்கு திடீரென்று ஏற்பட்டுள்ள மகா உற்சாகமும் ஒரு காரணம்.

தொடர்ந்து சறுக்கிய இந்திய அணி மீண்டும் உத்வேகத்துடன் எழுந்தபோது, அதனிடம் வந்து மாட்டிக்கொண்டதுதான் அவுஸ்திரேலிய அணியின் துரதிஷ்டம்.



# கப்டன்



படிப்பகம்